சிந்தனை வட்டத்தின் 167 வது வெளியீடு

# திசைமாறிய தீர்மானங்கள்

(சிறுகதைத் தொகுதி)

## சுலைமா சமி இக்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைமாறிய தீர்மானங்கள்

சிறுகதைத் தொகுதி

சுலைமா சமி இக்பால்

வெளியீடு

சிந்தனை வட்டம்
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை. 20802
ஸ்ரீலங்கா

தொலைபேசி :- 08 - 493746, 08 - 493892,
தொலைநகல் 08 - 497246
மின்அஞ்சல் :- puniyame @ sltnet .lk
puniyameen @ hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திசை மாறிய தீர்மானங்கள்**

**சிறுகதைத் தொகுதி**


நுலாசிரியர் :- சுலைமா சமி இக்பால்

முதலாம் பதிப்பு :- வைகாசி 2003

பதிப்புரிமை :- ஒதுக்கப்பட்டுள்ளது

வெளியீடு :- சிந்தனை வட்டம்
14 உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை 20802
தொலைபேசி 08 - 493746 - 493892

கனணிப்பதிப்பு :- ஸீனத் நவாஸ்
14 உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை 20802
தொலைபேசி 08 - 493746 - 493892

அச்சுப் பதிப்பு :- ...TIVE PRINTE...
NO.03/A, BAHIRAWAKANDA ROAD.
KANDY.

100/-


# பதிப்புரை

சிந்தனைவட்டத்தின் 167வது வெளியீடாக சுலைமா சமி இக்பால் எழுதிய திசைமாறிய தீர்மானங்கள் சிறுகதைத் தொகுதியினை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் விரல் விட்டெண்ணக் கூடிய முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுள் சோதரி சுலைமாவும் ஒருவர். சுலைமாவின் எழுத்துகள் சமூகத்தின் அவலங்களை தத்ரூபமாக சித்தரிக்க முனைபவை. இஸ்லாமிய வரம்புக்குட்பட்டு; 'மண் வாசனை கமழ, படைப்பிலக்கியத்தை யதார்த்த கோலத்தில் முன்வைக்கும் பாங்கு வரவேற்கத்தக்கது. காதலையும், காமத்தையும் மட்டுமே இலக்கியமாக்க முனையும் சமகால இளம் இஸ்லாமிய எழுத்தாளர்களுக்கு சுலைமாவின் கதைகள் இஸ்லாமிய இலக்கிய வரம்பு பற்றிய ஒரு முன்மாதிரியாக அமையும் என்றெண்ணுகின்றேன்.

நெருக்கடி மிக்க ஒரு சூழலில் வாழ்ந்து வருட இலங்கை முஸ்லிம்களுக்கு சமூக எழுச்சியூட்டக்கூடிய, உணர்வு பூர்வமான சிந்தனைப் போக்குகள் அவசியம். இன்றைய காலகட்டத்தில் ஓர் இஸ்லாமிய எழுத்தாளனின் கடமையும் அதுவே. தன்னுடைய கடமைப்பாங்கை ஓரளவேனும் நிறைவேற்ற முனையும் சுலைமாவின் இலக்கிய பயணம் இன்னும் நீண்ட காலத்துக்குத் தொடர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சிந்தனைவட்டத்தின் வெளியீடுகளுக்கு ஆர்வமளிக்கும் வாசக நெஞ்சங்கள் இந்த வெளியீட்டுக்கும் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்புடன்

*புன்னியாமீன்*
(பணிப்பாளர்)

சிந்தனை வட்டம்
14, உடத்தலவின்னை,மடிகே
உடத்தலவின்னை.

20 - 05 -2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா வாழ்த்து

— கவிஞர் — பதியதளாவ பாறூக் —

நிலவைக் காட்டி
குழந்தைக்கு
உம்மா கதை சொல்வது
வேடிக்கை என்றாலும்
சுலைமா
கதை சொல்லியிருப்பது
இங்கு
வேறுபட்டது
வழுக்கி விழுந்த
ஒரு சமூகத்தை
வாழவைக்க வேண்டி
மனம் விரும்பிக் கொண்ட
மனிதாபிமான
தேடலின்
தேவை இது !

இலக்கிய மண்ணில்
எழுந்து நடந்த
சகோதரியின் எழுது கோல்
அறுவடைசெய்யப் போகும்
அர்த்தமுள்ள வாழ்க்கைக்காக
நாற்றுக்களை
நட்டியிருக்கிறது !

இங்கே
திசை மாறிய தீர்மானங்கள்
சமுதாயத் தடாகத்தில்
அசுத்தமாகிக் கொண்ட
ஊத்தைகளை
சலவை செய்ததில்
பெருமைதனைப்
பேறாக்கியிருக்கிறது !



இவை
சகோதரியின்
தேடல் மட்டுமல்ல
தேவையுந்தான்
வேதாந்தங்களுக்கு
வெள்ளை பூசாமல்
யாதார்த்தங்களுக்கு
இவள்
தங்கத்தில்
தாலி கட்டியிருக்கிறாள் !

இவளின்
எண்ணமும் எழுத்தும்
எதிகதிர்கள்
பட்டுத்தெறிக்கும்
ஒவ்வொன்றும்
பாடத்தையும்
பக்குவத்தையும் சொல்லியிருக்கிறது.

அதற்காக
கற்களைக் கொட்டுவது போல்
சுலைமா
சொற்களைக் கொட்டி
கதைகளை
சும்மா சோடிக்கவில்லை.
ஊருக்குள் உறவாடிய
இவளது கரங்கள்
நாடி பிடித்து
நல்ல
வைத்தியம் பார்த்திருக்கிறது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கு வந்த
இவளது கதைகள்
சந்தைப்படுத்த மட்டுமல்ல
நாளை வருகின்ற
சந்ததிகள் கூட
சந்தித்துக் கொள்ளத்தான். !

ஆக்கங்களுக்குள்
தன்னை
அடையாளப்படுத்தியுள்ள
சகோதரி சுலைமா
நாளைய அமாவாசைகளுக்கு
இன்றைய
விடியலாகி இருக்கிறாள் !

இறுதியாக,
பானை பிடிக்கத்தான்
பழக்கப்பட்ட கை
பாவையர் கைகளின்று
பட்டஞ் சூட்டி
பார்த்து மகிழ்ந்த
ஒரு
பட்ட சமூகத்தின்
பந்களைக் கழந்றி
பேனா பிடித்து
இங்கே
பெண்ணின் பெருமைதனை
சாணை பிடித்துச்
சரித்திரமாக்கியதில்
இவள்
பெருமைக்குரியவள் !

*கவிஞர் பதியதளாவ பாறூக்*
*(கலைநதி)*
*104, பிரதான வீதி,*
*பதியதளாவ*



# அணிந்துரை...

மொழி ஓர் அற்புதமான ஊடகம்; மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய மகத்தான ஓர் அருட்கொடை.

''அல்லாஹ் மனிதனுக்கு அவன் அறியாதவற்றை எழுதுகோலின் மூலம் கற்றுக் கொடுத்தான்'' என்ற இறைவசனம் எழுத்தின் மகத்துவத்தை வலியுறுத்தப் போதுமானது.

நாவின் நடனத்தில் தோன்றும் வித்தியாசமான ஓசைகளை மனிதன் அர்த்தமுள்ள பாஷைகளாக்கிக் கொண்டான். தன் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த உதவிய ஒலிகளை பதிவு செய்ய எழுத்துக் கள் மனிதனுக்கு உதவின.

வரலாறு எழுத்தை உருவாக்கியது. எழுத்து பல வரலாறுகளையே உருவாக்கியது.

இலக்கணம் மொழியை பண்படுத்தியது. இலக்கியம் மொழியை அலங்கரித்தது.

மொழி என்ற உணவின் ஊட்டச்சத்து இலக்கணம், இலக்கியம் அதன் சுவை.

கவிதை, கதை, நாடகம் போன்ற இலக்கிய சாதனங்கள் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு சான்றாகும். தவிர இவை மனித வரலாற்றில் அளப்பரிய சாதனைகளைப் புரிந்துள்ளன.

இலக்கியவாதியின் எழுத்துக்கள் இலட்சியம் கொண்டவை. மனித உணர்வுகளை நிதர்சனமாகத் தரிசித்து தொட்டுப் பேசும் ஆற்றல் இலக்கியவாதிகளுக்குண்டு.

சமூக அவலங்களை உணர்ச்சி பூர்வமாக சுட்டிக்காட்டி சமூக சீர்திருத்தத்துக்கு வழிவகுப்பதில் சிறுகதை இலக்கியத்துக்கு பாரிய பங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுள் ஒருவராகிய சகோதரி சுலைமா ஏ. சமி சிறுகதையாக்கத்தின் மூலம் ஒரு சமூக சீர்திருத்தப் பணியை மேற்கொண்டுள்ளார் எனக்கூறுவது மிகப் பொருந்தும்.

இதற்கு முன்னர் 'வைகறைப் பூக்கள்','மனச்சுமைகள்' என்ற இரு தொகுதிகளை வெளியிட்டு இலக்கிய உலகில் இவர் காற் பதித்துள்ளார்.

இவரது சிறுகதைகள் இலங்கையின் பல்வேறு பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன; வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்டுள் ளன.

சகோதரி சுலைமா ஏ.சமி. 2002ல் இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியப் பங்களிப்புகளுக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

சகோதரியின் மூன்றாவது இலக்கியப படைப்பாக 'திசைமாறிய தீர்மானங்கள்' என்ற இச்சிறுகதைத் தொகுப்பு பிரசுரமாகிறது.

இதில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் யாவும் கற்பனையில் உயிரோட்டத்தையும் யதார்த்த கருத்துக்களையும் வழங்கக் கூடியவை.

அழுகிப்போன சமூகத்தின் மூலை முடுக்குகளைச் சந்தித்து சமூகப் புனரமைப்புக்கு வழிகோலும் வகையில் ஒவ்வொரு கதையின் உள்ளடக்கமும் அமைந்துள்ளமை பராட்டத்தக்கதாகும்.

இச்சிறுகதைகளுள் என் இதயத்தைத் தொட்டு உணர்வோடு உறவாடிய சில கதைகளை மேலோட்டமாக விதந்துரைக்க விரும்புகிறேன்.

'திசைமாறிய தீர்மானங்கள்' என்ற சிறுகதை சமூகத்துக்கு மலிவான ஊழியத்தை வழங்கும் ஒரு முஅத்தினை பின்னணியாகக் கொண்டுள்ளது. சமூகத்தின் ஒரு பாரிய தேவையை நிறைவேற்றும் முஅத்தின்கள் எந்தளவுக்கு மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை



ஒரு சோக கீதம் இசைக்கப்படுவது போன்று உணர்ச்சி ததும்ப முன்வைத்துள்ள பாங்கு இக்கதையின் சிறப்பம்சமாகும்.

'கவிஞன் கண்ட கானல் நீர்' என்ற சிறுகதை சமூகத்தில் இலக்கியவாதிகளின் துயரங்களை துலக்குகின்றது.

இன,மொழி, சமய ரீதியான வேறுபாடுகளைக் கடந்து மனிதாபிமானமான உணர்வு சமூகங்களுக்கிடையில் பேணப்பட வேண்டிய அவசியத்தை 'புலரும் புதிய உறவுகள்' என்ற கதை சித்திக்கின்றது.

சமூகத்தில் சீதனக் கொடுமையாலும் ,வரட்டு கௌரவத்தாலும், மொட்டவிழ வேண்டிய ஒரு மலர் வாடிப்போன நெஞ்சை உருக்கும் கற்பனைக் கருவை பின்னணியாகக் கொண்டு 'இன்னுமொரு பாலைவனம்' என்ற கதை புனையப்பட்டுள்ளது.

பொதுவான இந்நூலில் இடம்பெற்றுள்ள கதைகளில் ஒரு சிறப்பம்சத்தைக் காணலாம். அது என்னவெனில், ஆசிரியர் தனது ஊர் தர்கா நகரின் கொச்சையான தமிழ் மொழிவழக்கை நூற்றுக்கு நூறு பிரயோகித்துள்ளதாகும். இதன் மூலம் மண் வாசனைக்கு அவர் இடம் தந்துள்ளார் எனக் குறிப்பிடலாம்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வாழ்க்கையின் பல்வேறு சோலிகளுக்கும் மத்தியில் தனது இலக்கியப் பணியை தொடரும் சகோதரி சுலைமா ஏ. சமியின் முயற்சியை பாராட்டுவது இலக்கிய ஆர்வலர்களின் கடமை.

இது போன்ற காத்திரமான இலக்கியப்படைப்புக்களை இவர் தமிழ் உலகுக்கு மேலும் வழங்க வேண்டும்.

**என் ஆசிகள் !**

*அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருள் பஷர் (நளீமி) (எம்.ஏ)*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*ஜாமிஆ நளீமியா*
*பேருவல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## – வாழ்த்துரை –

வல்ல இறைவா! வான்புகழ் ஏகனே முதற்கண் உனக்கே வாழ்த்துக்கள்!

எண்ணங்களை எழுத்து வண்ணங்களாக வடித்திருக்கும் என்னருமைச் சகோதரியே, உங்களை வாழ்த்துவதில் என் உள்ளம் உவகையடைகிறது; பெருமிதங் கொள்கிறது.

எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைத்து இனிய இருபத்தைந்தாண்டுகளைக் கழித்துவிட்ட நீங்கள் தடம்பதித்த சுவடுகள் நம் சமுதாயத்தின் புரையோடிய புண்களைத் தொட்டுக்காட்டிச் சென்றுள் ளன என்பதை எழுத்துலகம் அறியும்.

வெறும் பெயருக்கும் - புகழுக்கும் - ஜனரஞ்சகத்துக்குமாக எழுதாது எழுத்துப்பணியைப் புனிதப்பணியாகக் கொண்டிருப்பவர்கள் இன்று விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தாம். இந்தப் பட்டியலுக்குள் அருமைச்சகோதரி சுலைமா இடம் பெறுகிறமை இரட்டிப்பு மகிழ்ச்சியையளி க்கின்றது. அவரின்'' திசைமாறிய தீர்மானங்கள்'' இதற்கு மிகச்சிறப்பான எடுத்துக்காட்டாகிறது.

எழுத்தாளன் சமூகப்பிரச்சினைகளை இனங்கண்டு கலையுருவில் சமூதாயத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டிய புனிதப் பணியைச் செய்பவன்; செய்ய வேண்டியவன். இந்தப்பணி திசைமாறிய தீர்மானங்களாகிய இத்தொகுப்பில் மிகமிகச் சிறப்பாக ஆற்றப்படுகின்றது. இத்தகைய நற்பணியைச் செய்த நங்கையை - என் தங்கையை - வாழ்த்தக்கிடைத்தமைக்காக மனம் மிக மகிழுகின்றேன். மேலும் மேலும் இப்பணி இனிதே தொடர இறையருள் கிட்டப் பிரார்த்திக்கின்றேன். சுலைமா, தொடருங்கள் உங்கள் நற்பணியை! இடையூறுகளைக் கண்டு இதயம் கலங்காது முன்னே செல்லுங்கள் ! இறையருள் கிட்டட்டும்! இதயத்தின் இனிய நல் வாழ்த்துக்கள்!!

**நஜ்முல் அதீப் – நயீமா சித்தீக்–**



## நூலாசிரியர் பற்றி .....



தென்னகத்தின் தர்கா நகர் இவரது பிறப்பிடம். மலையகத்துக்கு அண்மித்த மாவனல்லை - கிருங்கதெனிய இவரது வதிவிடம். இருபத்தைந்து வருடங்களாக எழுத்துப்பணி புரிந்து வரும் சுலைமா சமி இக்பால் சிறுகதை எழுத்தாளராகவே எழுத்துலகில் பரிணமித்தாலும், கட்டுரை, கவிதை வானொலிப் பிரதியாக்கம் என்று பல்துறைகளிலும், கால் பதித்துக்கொண்டுள்ளார்.

எழுத்துலகில் உற்சாகமாக உலாவரும் பெண் எழுத்தாளர்கள், இல்லறபந்தத்தில் இணைந்த பிற்பாடு, பின்வாங்கும் படலத்தைத் தொடர் வதனால் - அவர்களது திறமைகள் அப்படியே மழுங்கி விடுவது தற்கால நடைமுறை. சுலைமா இதற்கு விதி விலக்கு! அவரது கணவர் இக்பால் இவருக்கு வீதி விளக்கு! ஆம் கணவரது உந்துதலின் பேரில் நிறையைப் பணிகளை மேற்கொண்டு வரும் சுலைமா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமூகப்பணிகளிலும் ஆர்வமுள்ளவர். விழிப்புலனிழந்தோருக்கான கல்வி நெறியில் பயிற்சி பெற்று சிலகாலம் திஹாரிய இஸ்லாமிய அங்கயீனர் நிலையத்தில் பணிபுரிந்ததோடு - அரசாங்கப்பாடசாலையிலும் சிலகாலம் ஆசிரியப் பணி புரிந்துள்ளார்.

இலக்கியப் போட்டிகளில் கலந்து கொள்வதென்பது சுலைமாவுக்கு தித்திப்பான விடயம். கட்டுரை, சிறுகதை கவிதைகளுக்காக, பிரதேச, தேசியரீதியில் பல பரிசுகளைப் பெற்றுள்ள இவர், 1997ம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாத்தளை மாவட்ட மத்தியகுழு அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்று, அதற்காக காலஞ்சென்ற அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களால் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு கௌரவிக்கபட்டமையையிட்டு பெருமிதம் கொள்கிறார்.

வைகறைப்பூக்கள் (1987) மனச்சுமைகள் (1988) ஆகிய சிறுகதைத் தொகுதிகளை இதுவரை வெளியிட்டுள்ள சுலைமா, இலங்கை வானொலியிலும் தன் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. 1981 - 1995 வரையிலான காலப்பகுதியில் 'மாதர் மஜ்லிஸ்' நிகழ்ச்சியின் பிரதித் தயாரிப்பாளர்களில் ஒருவராக முக்கிய பங்கேற்று, நிறையவே எழுதியுள்ளார். இவருக்கெனப் பரந்த வாசகர் - நேயர் வட்டம் உண்டு.

2002ம் ஆண்டு தினகரன் பத்திரிகையும் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் இணைந்து நடத்திய இலக்கிய விழாவில் மத்திய மாகாண கல்வி அமைச்சர் வீ. ராதா கிருஷ்ணன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

2002இல் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய இலக்கிய தமிழாராய்ச்சி மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியப் பங்களிப்புகளுக்காக விருது வழங்கிப் பாராட்டப்பட்டார்.

தர்கா நகரைச் சேர்ந்த காலம் சென்ற அப்துல் சமி, உம்மு தமீமா சமி ஆகியோரின் புதல்வியான இவர் மாவனல்லையைச் சேர்ந்த மௌலவி ஏ.சீ.எம். இக்பால் அவர்களின் துணைவியும் ஆவார். இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள்.

*— மஸீதா புன்ஸியாமீன் —*
*உடத்தலவின்னை.*



# — என்னுரை —

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்''

எல்லாப் புகழும், பெருமையும் ஏகன் அல்லாஹ்வுக்கே!

என்னுடைய மூன்றாவது சிறுகதைத் தொகுதியான 'திசைமாறிய தீர்மானங்கள்' நூலை இலக்கிய உலகிற்குத் தருவதில் மிகவும் சந்தோசப்படுகிறேன்.

எழுத்துப்பணி என்பது புனிதமான ஒரு சமுதாயப் பணியாகும். எனவே அதனை நாம் சமூகத்தின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கு எழுத்தாற்றலையும், மானுடத்தை நேசிக்கும் மனதையும் தந்திருக்கிறான். 'அல்ஹம்துலில்லாஹ்'. எழுத முடியும் என்பதற்காக எதையும் எழுதி எழுத்துத்துறையைக் குப்பைத் தொட்டியாக்காமல் சமூகம் பயன்பெற வேண்டுமென்ற ஒரே நோக்கத்திலும், ஏக்கத்திலும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எமது பெண் எழுத்தாளர்களில் பலர் திருமணத்தின் பின் எழுத்துலகத்திலிருந்து ஒதுங்கி விடுவதை நாம் காண்கிறோம். அந்தவகையில் திருமணத்தின் பின்னும் நான் எழுதிக்கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் என் அன்புத் துணைவர் என் எழுத்து முயற்சிகளுக்குத் தந்து கொண்டிருக்கும் ஒத்துழைப்பும் நல் ஆதரவுமேயாகும். என் எழுத்துக்களின் முதல் வாசகரே என் கணவர் தான். அவர் சமூகத்தில், மக்களோடு நெருங்கிப் பழகும் ஒருவராக இருப்பதால் என் எழுத்துக்கு அது மிகவும் பயன் தருவதாக உள்ளது.

இந்த நூலில் நீங்கள் சந்திக்கும் பாத்திரங்கள் வெறும் கற்பனைப் பாத்திரங்கள் அல்ல. வழமை போன்றே இக்கதை மாந்தர்கள் உங்களுக்கு மிகவும் பரிச்சயமானவர்கள். வாழ்க்கைப் பாதையில் நாம் சந்தித்துக் கொள்ளும் நிஜமானவர்கள். எங்கே, கதைகளைப் படித்து விட்டுக் கருத்துக்களை எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன் என் கணவர் ஒரு பள்ளி வாசலிலே கதீபாக இருந்தார். அதே பள்ளி வாசலிலே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முதியவர் முஅத்தினாக வேலை பார்த்து வந்தார். ஒரு நாள், அந்த மனிதர் என் கணவரிடம் ''நான் ஒரு கதை சொல்கிறேன்...'' என்று கூறி தான் நான்கு வருடங்களுக்கு முன் வாசித்த ஒரு கதையைக் கூறியிருக்கிறார். கதையைக் கூறி நிறுத்திய அவர், ''இந்தக் கதை எங்களைப் போன்ற முஅத்தின்மார்களின் சோகத்தையும், கவலைகளையும் நன்றாகவே சொல்கிறது. எங்களுக்காகவே எழுதப்பட்டது போல் இருக்கிறது. என் மனதை ரொம்பத் தொட்ட கதை. ''என்று, தான் அந்தக் கதையால் கவரப்பட்டதை சொல்லியிருக்கிறார். உடனே என் கணவர், '' அந்தக் கதையை எழுதிய எழுத்தாளர் யார் தெரியுமா?'' என்று கேட்க, அவரும் ''அது எல்லாம் ஞாபகத்தில் இல்லை. கதை மட்டும் அப்படியே மனதில் பதிந்து விட்டது'' என்று கூற, அந்தக் கதையை எழுதிய எழுத்தாளர் என் மனைவி தான் என்று கணவர் கூற அந்த மனிதர் வியப்பின் விளிம்பிற்கே, போயிருக்கிறார். இந்தச் சம்பவத்தைக் கணவர் என்னிடம் சொன்ன போது, நாட்டின் எங்கோ ஒரு மூலையில் வாழும், அதுகம் படிக்காத ஒரு ஏழை முஅத்தினை, ஒரு முதியவரை என் கதை பாதித்திருக்கிறது என்பதை அறிந்த போது நானடைந்த நிறைவுக்கு அளவில்லை. இதுதான் ஒர் எழுத்தாளனுக்குக் கிடைக்கும் வெற்றியும், அங்கீகாரமுமாகும். எனவே தான் இந்தச் சம்பவத்தின் மூலமும், நாடளாவிய ரீதியில் முதற்பரிசாக ஒரு தங்கப்பதக்கத்தைப் பெற்றுத் தந்ததன் மூலம் ''திசைமாறிய தீர்மானங்கள்'' என்ற அந்தச் சிறுகதையின் தலைப்பையே இந்தத் தொகுதிக்கு மகுடப் பெயராகச் சூட்டியுள்ளேன்.

'' தங்கையே! நீங்கள் இஸ்லாத்திற்குள்ளே இருந்து, அதன் வரம்புகளை மீறாது எழுதுங்கள். உங்கள் எழுத்துகளுக்கு அல்லாஹ் பிரகாசத்தைத் தருவான்'' என்று என் இலக்கிய உலகின் உடன் பிறப்பும் தமிழ்நாட்டின் பிரபல சிறுகதை, நாவல் எழுத்தாளரும், ஆய்வாளருமான டாக்டர் ஸையத் இப்றாஹீம் (ஹிமானா ஸையத்) அவர்கள் எனக்குக் கூறுவார்கள். ஆம் ! அதற்கொப்ப எனது அத்தனைக் கதைகளிலும் நீங்கள் இஸ்லாமியத்தை நுகர முடியும்.



ஆரம்பத்தில் என் எழுத்து முயற்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த என் அன்புப் பெற்றோரையும், உடன் பிறப்புக்களையும் இச்சந்தர்ப்பத்தில் கண்கள் பனிக்க நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன். இதைத்தவிர என் நன்றிக்குரிய பலர் இங்கே வரிசையில் இருக்கிறார்கள்.

இந்தத் தொகுதிக்கு பல அலுவல்களுக்கு மத்தியிலும் அழகானதோர் அணிந்துரையைத் தந்திருக்கும் என் பிறந்த மண்ணைச் சேர்ந்த சகோதரர் அஷ்ஷெய்க் எச். ஐ. கைருள் பஷர் (நளீமி) எம். ஏ. அவர்களுக்கும், அழகான வாழ்த்துரை தந்திருக்கும் மூத்த பெண் படைப்பாளி 'நஜ்முல் அதீப்' - நயீமா சித்தீக் அவர்களுக்கும், வாழ்த்துப் பா வழங்கிய கவிஞர் பதியதலாவ பாறூக் அவர்களுக்கும், என்னைப் பற்றிய அறிமுகக் குறிப்புகளை எழுதியுள்ள சகோதரி மஸீதா புன்னியாமீன் அவர்களுக்கும், இந்த வெளியீட்டுக்காக உதவிக் கரம் நீட்டிய பொறியிலாளர் ஹுஸைர் யூசுப் அவர்களுக்கும், எந்த இலாப நோக்கமுமின்றி இப்புத்தகத்தை அழகுற அச்சிட்டு வெளியிட்ட உடத்தலவின்னை சிந்தனை வட்டத்தின் பணிப்பாளர் சகோதரர் பீ.எம். புன்னியாமீன் அவர்களுக்கும் - அதன் ஊழியர்களுக்கும், என் கதைகளை பிரசுரித்தும், ஒலிபரப்பியும் ஆர்வம் தரும் தினகரன், நவமணி- மற்றும் ஏனைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலங்கை வானொலி முஸ்லிம்சேவை ஆகிய ஊடகங்களுக்கும், இந்தப் புத்தகத்தை வெளியிடும் எண்ணம் தோன்றிய நேரம்முதல் இதுவரை அத்தனை சிரமங்களையும் தன் தலைமீது சுமந்து கொண்டு அயராது உழைக்கும் என் அன்புத் துணைவர் அல்ஹாஜ் மௌலவி ஏ.சீ.எம். இக்பால்(பாஸி) அவர்களுக்கும், பலவிதத்திலும் ஆலோசனைகள் தந்துதவிய சகோதரர் ரிஸ்கி ஷெரீப் அவர்களுக்கும், என் எழுத்து முயற்சிக்கு எப்போதும் ஆர்வம் தந்து கொண்டிருக்கும் என் உடன் பிறப்புக்கள், உறவினர்கள் மற்றும் என் பிள்ளைகள் இன்ஷிரா இக்பால், இன்ஷிபா இக்பால், அஷ்பாக் அஹமத், என் எழுத்துக்களை மதித்து, எப்போதும் எழுதத் தூண்டும் என் மாமி, இன்னும் ஊடகவியலாளர்களான சகோதரர்கள் எம். ஜே. எம். தாஜுதீன், தோப்பூர் யூனுஸ். கே. ரஹ்மான் கண்டி இரா. அ. இராமன் ஆகியோருக்கும், எனக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுத் தந்த ஆசிரியப் பெருந்தகைகளை ஆய்வு செய்த பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் ஆகிய அனைவருக்கும், இங்கே பெயர் குறிப்பிட்ட மறந்தவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக,

இந்தச் சிறுகதைத் தொகுதிக்கும் என் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பும், அங்கீகாரமும் கிடைக்கும் என எதிர்பார்த்து, இன்னுமொரு படைப்பிலக்கியத்தின் மூலம் சந்திக்கும்வரை விடை பெறுகிறேன்.

நன்றி

**- சுலைமா சமி இக்பால் -**


*19 கமன்தெனிய வீதி*
*கிருங்கதெனிய*
*மாவனெல்லை.*
*15- 05- .2003*




# திசை மாறிய தீர்மானங்கள்

பெற்றெடுத்து பேணிவளர்த்து
பேரெடுக்க வைத்த - அன்புப் பெற்றோர்
*ஏ.எல். அப்துல் சமி*
*உம்மு தமீமா சமி*
ஆகியோருக்கும்

தரமான கல்வி தந்து
தடம் பதிக்க வைத்த - மூத்த சகோதரர்கள்
*ஏ. எஸ். எம். அஸ்ஹாக்*
*ஏ. எஸ்.எம். அன்வர்*
ஆகியோருக்கும்


நல் மகனைப் பெற்றெடுத்து
நங்கை எனக்கீந்த - அன்பு மாமனார்
*ஏ. ஆர். எம். அப்துல் காதர்.*

ஆகிய நல்லிதயங்களுக்கு

# சமர்ப்பணம் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திசை மாறிய தீர்மானங்கள்.

ரசீது நானாவுக்கு அன்று காலையில் இருந்து ஒரே அலைச்சலும் வேலையுமாகத்தான் இருநத்து. அதனால் சற்றுக் களைப்பாறுவதற்காக கால்களை நீட்டி படுக்கையில் சாய்ந்து கொண்டவர் சற்று நேரத்திற்கெல்லாம் தூங்கியும் விட்டார்.

ரசீது நானாவுக்கு அறுபது வயதிருக்கும். கடந்த இருபது வருடங்களாக ஊர்ப்பள்ளி வாசலிலே முஅத்தினாக வேலை பார்த்து வருகின்றார். கல்யாண வயதில் இரண்டு பெண்மக்களும், பள்ளி செல்லும் ஒரு மகனும் தான் அவரின் சொத்துக்கள். இதைத்தவிர சொத்துப்பத்து எதுவும் அவருக்கில்லை. குடியிருக்கும் வீடு கூட வாடகை வீடு தான். கிடைக்கும் சம்பளம் ஆயிரத்து ஐநூறு ரூபாயில் குடும்ப வண்டியை இழுத்துச் செல்வது அவருக்குச் சிரமமாகத்தான் இருக்கிறது. ஊர் வருமானமும் சொல்லக்கூடிய' அளவுக்கு இல்லை. இந்த நிலையில் மூத்தவள் வீட்டிலேயே பீடி சுற்றும் தொழிலைச் செய்து வருவதால் வீட்டு வாடகை,சின்னச் சின்னச் செலவுகள் என்று அவளே செய்து கொள்வாள்.

ரசீது நானா அதிகாலை நான்கு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் இஷாத் தொழுகைக்குப் பிறகுதான் வீட்டுக்கு வந்து சேர்வார். இருபது வருடங்களாக அந்தப் பள்ளிவாசலுக்காக, ஊருக்காக தன்னை முழுக்கமுழுக்க அர்ப்பணித்துப் பணி செய்தும் கூட, அவரின் நியாயமான கோரிக்கைகள் எதையும் பள்ளி நிர்வாகத்தினர் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. அவரின் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கவோ, எந்தச் சலுகையையும் வழங்கவோ பள்ளிநிர்வாகத்தினரோ, ஜமா அத்தினரோ நினைக்கவேயில்லை.

தங்களைப் போன்று இவர்களுக்கும் ஒரு குடும்பம், அந்தக் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் வாய்கள், வயிறுகள், ஆசாபாசங்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இருக்கின்றன என்பதை அந்தப் பெரிய மனிதர்கள் ஏனோ நினைத்துப் பார்ப்பதேயில்லை.

பள்ளிவாசல் வேலைகளோடு ''பாத்றூம்'',கழிவறை கழுகவும், ஆடு கோழி அறுக்கவும், மையத்து வீட்டில் மையித்தைக் குளிப்பாட்டவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் முன் கைகட்டி வாய்பொத்திப் பணிபுரியவும் தான் இந்த ஆத்மாக்கள். நியாயம் பேசினால் அடுத்த நாளே சீட்டுக்கிழிந்து விடும். உருப்படியாகத் தெரிந்த இந்தத் தொழிலும் தொலைந்து விடும். எனவே ஊமையாகவே வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டார் அவர்.

''ஓய் மோதினார்...''இப்படி முஅத்தினை அடிக்கடி அழைத்து ஆணையிடுவதில் அவர்களுக்கோர் தனி இன்பம். பாவம் அந்த முஅத்தின். அவர் எங்கு மோதினாரோ, யாருடன் மோதினாரோ தெரியவில்லை. எதற்கெடுத்தாலும் இந்த மோதினார் என்ற சொல்தான் அவர்களின் வாய்களில் துள்ளி விளையாடும்.

ஒருநாள் பள்ளிவாசல் பக்கம் வந்த ரெஸ்டி எல்லா இடமும் சுற்றிப்பார்த்து விட்டு கோபத்துடன் முஅத்தினை அழைத்து, ''ஓய்...மோதினார்..கக்கூஸப் பாருங்கோ.. சரியான ஜராவ, கழுவ ஏலாவா..'' நாள் முழுக்க சும்மா தானே ஈச்சிய...!'' என்று கடிந்து கொண்டார். அவர் பாவித்த சும்மா என்ற சொல் இவரைப் பாதிக்க, வழமைக்கு மாறாக இவரும் வாய் திறக்கவே செய்தார். ''முந்தநாத்துத்தான் எல்லாத்தையும் கழுகி துப்பரவாக்கின. இது அல்லாட ஊடு... அதனால் இங்க நான் மட்டுமல்ல, நீங்களும் அந்த வேலயச் செய்ய ஏலும்...'' என்று கூறி விட்டார். பலருக்கு முன் முஅத்தின் இவ்வாறு கூறியதால் கோபத்துக்கும், அவமானத்துக்கும் ஆளான அவர்,

''எனத்தயன் செல்லிய.. நான் செய்யவா? ஜாதிக் கூத்து... இங்க பாருங்கவா.. இந்த வேல எல்லாத்தையும் ஒன்டுடாம் செய்யத்துக்குத்தான் நாங்க சம்பளம் தாற. தரித்திரம் புடிச்ச ஏழ மீஸ்கீன் என்டாலும் வாய்ட பவர் போறல்ல...'' என்று கடுகடுத்த ரெஸ்டி கோபத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றார். அன்றிலிருந்து அவருக்கும் முஅத்தினுக்கும் அவ்வளவு பேச்சுக் கிடையாது. முஅத்தினின் சீட்டைக்கிழிக்கும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் ரெஸ்டி.

திடீரென விழித்துக்கொண்ட முஅத்தின் ''ஏன்ட அல்லா'' இவ்வளவு நேரமும் அடிச்சுப் போட்டமாதி தூங்கிட்டேனே! ளுஹருக்கும் நேரமாச்சும்...!'' எனப் பதறியவராக சுவரிலுள்ள கடிகாரத்தை நோக்கினார். மணி பன்னிரெண்டு இருபது. அவசரமாக வுழூச் செய்து கொண்டவர், தொழுகைக்காக 'அதான்' சொல்லத் தொடங்கினார்.

அவர் அதனை முழுமையாகக் கூறி முடிக்கவில்லை. அதற்குள் ரெஸ்டி, பள்ளி நிர்வாகத்தினர், ஊரார் என்று ஒரு கூட்டம் பள்ளி வாசலைச் சூழ்ந்து கொண்டு கத்தினர். ஜும்ஆவுக்குக் கூடப் பள்ளிப்பக்கம் ஒதுங்காத ரெஸ்டி பலத்த குரலில்...'' ஓய்...மோதினார் ஒங்கட பாங்க நிப்பாட்டுங்கவா... இப்ப எத்தின மணி...? கண்ணத் தொறந்து பாருங்கோ....!'' என்று கத்தினார். கலவரமடைந்த முஅத்தின் பாங்கை நிறுத்திவிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்று இருபது. வெளியே பார்த்தார். அங்கே ஒரு பட்டாளம் இவருக்காகக் காத்திருந்தது. எல்லாம் அவருக்குப் புரிந்து விட்டது.

தூக்கக் கலக்கத்தில் பதினொன்று இருபதை பன்னிரெண்டு இருபதாக நினைத்து பாங்கு சொன்னதன் விளைவு தான் இது. இந்தச் சின்னத்தவறே அவர்களுக்குப் போதும்.

''ஒரு நேரம் ஏன்ட தொழிலுக்கே இந்த நாசமாப் போனவனுக வேட்டு வச்சாலும் வச்சுவானுக...'' என நினைத்த போதே அவருக்கு இதயம் அடித்துக் கொண்டது.

''ஏய் ... மோதினார் இங்க பாருங்கோ.. நீங்க வேலைல பொறுப்பே இல்ல. இப்பிடி அடிக்கடி தவறு செஞ்சிக்கொண்டே வாற. இனி ஒங்கள இங்கே வெச்ச ஏலா. இப்ப பாருங்க. பதினொன்று இருபதுக்கே பாங்கச் செல்லீட்ட. கண்காணாட்டி ஊட்டுல ஈச்சோனும். ஒங்களுக்கெல்லாம் ஒரு பொறுப்பான வேல..! இன்டைக்கு ரெண்டுல ஒன்டு நடக்கோனும். இன்டைக்கு இஷாவுக்கு பொறகு ஜமாஅத்தக் கூட்டி மீட்டிங் வெச்சு இது பத்தி விசாரிச்சி ஒரு முடிவுக்கு வரோனும்... இதுக்குப் பொறகு, பொறுப்பில்லாதவர்களுக்கு இங்க வேல இல்ல...'' என்று அடுக்கிக் கொண்டே போனார் ரெஸ்டி. அடுத்தவர்களும் அதற்குப் பக்கவாத்தியம் இசைத்தனர். முஅத்தின் கூனிக் குறுகிப் போனார்.

இப்படி ஒரு தவறு நடந்ததற்காக உண்மையில் அவருக்கும் வருத்தம் தான். ஏற்கனவே அவர் மேல் கோபத்துடன் இருக்கும் ரெஸ்டிக்கு அவரை வஞ்சம் தீர்க்க இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் போய்விட்டது. எனவே தனது பள்ளித் தொழிலுக்கு இன்று கடைசித்தினம் என்பதை அவர் மனப்பூர்வமாக நம்பினார். எப்படியும் இன்று இரவு அவர் வேலை பறிபோய்விடும் என்பதை நினைத்த போது அவரால் தாங்க முடியவில்லை. அறுபட்ட ஆடாய் அவர் இதயம் துடிதுடித்தது. அவரின் கண்களின் முன் வயதுபோன மனைவி, குமர்ப்பிள்ளைகள், படிக்கும் மகன், ஆகியோரின் சோகம் நிறைந்த முகங்கள் நிழலாடின. பாவம் அவர்கள் அவரின் சின்னச் சம்பளத்திலும், மகளின் சிறிய உழைப்பிலும், எப்படிச் சிக்கனமாக, ஆசைகளை மனதுக்குள்ளேயே புதைத்து எப்படியெல்லாம் எளிமையாக வாழ்கின்றார்கள் என்பது அவருக்குத் தானே தெரியும்! இந்தத்தொழிலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிபோனால் எங்கே தானும் மகளுக்குச் சுமையாகி விடுவேனோ என்பதை நினைத்த போது அவரின் விழியோரங்களில் கண்ணீர் கரைபுரண்டது.

'ஹு'....ம்" நீண்ட பெருமூச்சை ஊதித்தள்ளியவராக அவர் நிமிர்ந்த போது அவரின் முன்னால் பள்ளிவாசல் கதீப் நின்றிருந்தார். வெளியே போயிருந்த அவர் இப்போதுதான் வந்திருக்கிறார்.

முஅத்தினின் முகத்தில் காணும் வாட்டத்தை நோட்டமிட்ட கதீப், ''என்ன காக்கா... ஒரு மாதிரி இருக்கிறீங்க வீட்டுல ஏதும் பிரச்சினையா..?" என்று கேட்டு வைத்தார். தன்னை முழுமையாகப் புரிந்து கொண்டு அன்பு செலுத்துபவர் இந்தக் கதீப் ஒருவர் தான். என்பதால் அவர் எல்லாவற்றையும் அவரிடம் கூறினார். மலைநாட்டைச் சேர்ந்த இளவயதினரான கதீப் முஅத்தினைத் தனது மூத்த சகோதரர் போல் மதித்து வந்ததால், அவரின் கவலை..நிலை.. இவரையும் தாக்கவே செய்தது. இருப்பினும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாதவராக,

'அட....இதுதானா...விடுங்க... நீங்க ஏன் பதினொன்று இருபதுக்கு பாங்கு சொன்னீங்க என்று கேட்டா ''ஹஸரத் தான் சொல்லச் சொன்னாரு" அப்பிடின்னு சொல்லுங்க.. நான் மத்தத்தக் கவனிக்கிறேன்....." என்றார்.

''எனத்தியன் ஹஸரத் இது...! நான் தவறச் செஞ்சிட்டு பழிய ஒங்கட மேல்ல போடச் செல்லியா...! என்று திருப்பிக் கேட்டார் முஅத்தின்.

''நான் சொன்னத்த நீங்க செய்யுங்கோ...'" என்று அந்தப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தார் கதீப்.

மாலை மங்கி இரவு வந்தது. இஷாவுக்கும் நேரம் நெருங்கியது. முஅத்தினின் இதயத் துடிப்பு அதிகமாகியது. இன்றைய ஜமாஅத் கூட்டத்தில் என்ன நடக்குமோ என்ற கவலை அவருக்கு.

கூட்டம் கூடியது. ஜமாஅத்தினர் நிரம்பி வழிந்தனர். தொழுவதற்காகப் பள்ளிப்பக்கம் வராதவர்கள் கூட அந்த இடத்தில் நிறைந்தனர். ரெஸ்டி முஅத்தினின் தவறைச் சுட்டிக் காட்டி, ''இதுக்கு நீங்க எனத்தியன் செல்லிய...? என்று அவரைக் காரமாகக் கேட்டார். முஅத்தின் அடக்கமாக எழுந்து ''எனக்கு ஒன்டும் தெரியா ஹஸரத் தான் பதினொன்று இருபதுக்கு பாங்கு செல்லச் சென்ன...! என்றார்.



''எனத்தயன் ஹஸரத் சென்னா...? செய்தத்தையும் செஞ்சீட்டு அவர்ட மேல்ல பழியப் போடப் பாக்கியா..? ஜாதிப் பசுந்து..., ''ஏய்...பரீது... ஹஸரத்து ரூமுக்குள்ள ஈச்சிய. அவரக் கூட்டிக்கொண்டு வா..." என்று கூறி ஒருவனை அனுப்பி வைத்தார் ரெஸ்டி. போனவனுடன் இணைந்து வந்தார் ஹஸரத்.

''ஹஸரத்.. இன்டைக்கு ளுஹருக்கு பதினொன்று இருபதுக்கு பாங்கு செல்லச் செல்லி நீங்க தான் இவருக்குச் சென்னாம். உண்மையா...?" என்று கேள்வி கேட்டார், ரெஸ்டி. ''ஆமா... நான் தான் சொன்னேன்.." அமைதியாகச் சொன்னார் ஹஸரத். எல்லோர் முகங்களிலும் வியப்பு விளையாடியது. '' நீங்க சென்னா?" நம்பமுடியாதவராகக் கேட்டார் ரெஸ்டி. ''அது தான் சொல்லிட்டேனே நான் தான் சொன்னேன். ஏன் அப்படிச்சொன்னேன்னு கேக்குறீங்களா? சொல்றேன் கேளுங்க." என்று கூறிய ஹஸரத் தொடர்ந்தார்.

'' எந்த நாளுமே நாங்க பன்னிரெண்டு இருபதுக்குத்தான் பாங்கு சொல்லுவோம். இருந்தாலும் ஒங்களையெல்லாம் பள்ளிப்பக்கம் காணவே முடியல்ல. நாலஞ்சி வயது போனவங்களும், ரெண்டு மூணு சின்னதுகளும் மட்டும்தான் பள்ளிக்கு வருவாங்க. அதனால தான் இன்டைக்கு கொஞ்சம் நேரத்தோட பதினொன்று இருபதுக்கே பாங்கச் சொல்லுங்க. எல்லோரும் கட்டாயம் வருவாங்க..! அப்பிடின்னு சொன்னேன் சரியாப்போச்சு. பாங்குச் சத்தத்தைக் கேட்ட ஒடனேயே நீங்க எல்லோரும் பள்ளிப்பக்கம் ஓடி வந்துட்டீங்க. சரி இனிமேல் ளுஹருக்கு சரியாப் பன்னிரெண்டு இருபதுக்கே பாங்கு சொல்லுவோம். எல்லோரும் தவறாம கட்டாயம் வந்திடுங்க!" என்று கதீப் கூறி ஓய்ந்த போது ரெஸ்டியினதும், அவரை ஒத்தவர்களினதும் முகங்களில் அசடு வழிந்தது. சில வினாடிகள் மௌனத்திலேயே கழிந்தன. மீண்டும் கதீப் பேசினார்.

'' இந்த இடத்துல நான் கொஞ்சம் பேச விரும்புறன். அனுமதிப் பீங்களா?" என்று கேட்ட கதீப், கூட்டத்தினரின் அனுமதியுடன் தொடர்ந்தார்.

''முஅத்தின் என்றால் யாரு தெரியுமா..? பாங்கு சொல்லி தொழுகைக்கு மக்களை அழைக்கிறவர் தான் முஅத்தின். நீங்க எல்லாரும் நினைக்கிற மாதிரி அவர் கக்கூஸ் கழுவுற வேலைக்கு இங்கு வரல்ல. இந்தப் பள்ளி வாசல்ல, இருபது வருஷங்களாக புனிதமான வேலையச் செஞ்சி வார இந்த முஅத்தினப் பத்தி, அவருட குடும்ப நிலையப்பத்தி நீங்க யாராவது யோசிச்சிப் பார்த்தீங்களா...? ரெஸ்டி... நல்லாக் கேட்டுக் கொள்ளுங்க. நீங்க மாடி வீட்டுல ஆடம்பரமா வாழுறீங்க. இவரு குடிச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுல அதுவும் கூலி வீட்டுல தான் இருக்காரு. நீங்கெல்லாம் பெரிய மனிதர்கள். விதம்விதமா சமைத்து சாப்பிடுவீங்க. ஆனா நீங்க கொடுக்கிற ஆயிரத்து ஐநூறு ரூபாவுல அவங்க சம்பலும் சோறும் சாப்பிடவே கஷ்டப்படுறாங்க. முஅத்தின்ட வீட்டுல அடுப்புப் பத்தவச்சாத நேரமும் நிறைய இருக்கு, நாள் முழுக்க அவர் இங்க மாடாக உழைத்தும், ஒழுங்கான சம்பளம் இல்ல. ருசியான சாப்பாடில்ல. குந்தியிருக்க சொந்த வீடில்ல. வயதுக்கு வந்த அவர் மகள்மாருக்கு இன்னும் கல்யாணமில்ல. இது எல்லாம் உங்களுக்குத் தெரியுமா...? ஒரு வருஷம் ரெண்டு வருஷமில்ல இருபது வருஷங்களாக இந்த ஊர் மக்கள்ட ஹயாத்து, மௌத்து எல்லாத்துலயும் கலந்து வாழுற இந்த முஅத்தினுக்கு நீங்க எல்லாரும் என்ன உதவி செஞ்சிருக்கிறீங்க...? என்ன சலுக செஞ்சிருக்கீங்க...? ஒரு வீட்டு வசதியையாவது அவருக்கு செஞ்சி கொடுக்க நெனச்சீங்களா...? அதுவுமில்ல. இந்த ஊருல பாதிக்கு மேல பணக்காரர் தான் இருக்கிறீங்க. இருந்தாலும் உங்களோட ரெண்டறக் கலந்துவாழ்ற முஅத்தின்ட வறுமையப் போக்க யாருமே முன்வரல்ல. அவரைக் கைதூக்கி விட யாருக்குமே மனசு வரல்ல. உண்மைய சொல்லப் போனா நீங்க எல்லாரும் நன்றி கெட்ட ஜனங்கள், இப்ப இவருட சீட்டக் கிழிச்சி வயித்துல அடிக்கத்தான் ஒன்று கூடி இருக்குறீங்க. இது அநியாயம். இவர்ட விஷயத்துல நீங்க எல்லாருமே அல்லாக்கிட்ட பதில் சொல்ல வேண்டி வரும். யோசிச்சி நடந்துகுங்க...! ''என்று கூறி நிறுத்தினார் ஹஸரத்.

அவ்வளவு தான் நிலைமையை, நியாயத்தை விளங்கிக்கொண்ட பெரும்பாலானோர் எழுந்து நின்று முஅத்தினுக்கு ஆதரவுக்கரம் நீட்டினர். '' முஅத்தினே இங்கிருந்து விலகினால் அல்லாம அவர வெலக்க நாங்க உட மாட்டோம்...! '' என்று இளைஞர்கள் கர்ஜித்தனர். அவர்களில் சிலர் முஅத்தின் வாழும் வாடகை வீட்டை அவருக்கே சொந்தமாக வாங்கிக் கொடுக்க முன்வந்தனர். இன்னும் சில மனிதாபிமானிகள் அதற்கும் ஒருபடி மேலே சென்றனர். அதாவது முஅத்தினின் மூத்த மகளின் திருமணத்தைத் தாமே பொறுப்பெடுத்து நடத்துவதென்ற முடிவுக்கு வந்தனர். தன் முன்னே நடப்பது கனவா அல்லது நனவா என்று புரியாத நிலையில் ஹஸரத்தும் முஅத்தினும், ஏன் ரெஸ்டியும் ஏனையோரும் கூட நின்றிருந்தனர். தன்னை சுதாகரித்துக் கொண்ட ஹஸரத் முஅத்தினை திரும்பிப் பார்த்தார். தெளிவாக இருந்த அந்த முகத்தில் இரு துளிக் கண்ணீர்வரிகள் கோடிட்டு நின்றன. குர்பானுக்காகத் தயாராக வைத்திருந்த ஆட்டின் நிலையில் இருந்த முஅத்தினுக்கு இப்போது தான் நிம்மதியாக மூச்சு வந்தது.



இத்தனை நேரமும் தன்பக்கம் சார்ந்திருந்தவர்கள் தற்போது முஅத்தினின் பக்கம் ஆதரவாய் நிற்பதை ரெஸ்டியால் தாங்க முடியவில்லை. அவர் இரத்தம் கொதித்தது. ஆத்திரத்தாலும், அவமானத்தாலும் அவர் மேனி நடுங்கியது. தன்னோடு வந்தவர்கள் திசைமாறக் காரணமாயிருந்த கதீபைக் கடுமையாகப் பார்த்த அவர், ''ம். படுவா ராஸ்கல்.. ஒன்னக் கவனிச்சியன்...!" என்று உள்ளுக்குள் உறுமியவாறு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

தன்சீட்டைக் கிழித்து வயிற்றிலடிக்க வந்தவர்களைத் திசை மாற வைத்த கதீபை நன்றிப் பெருக்கோடு நோக்கினார் முஅத்தின். நடக்கவிருந்த அநீதத்தைத் தடுத்து, நியாயத்தை நிலை நிறுத்துவதற்காகப் பேசச் சக்தியைத் தந்து, அந்த ஏழைகளின் வாழ்வில் விடிவைத் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காகப் பள்ளிவாசலுக்குள் நடந்த கதீபின் மனம், மனித மனங்களில் மனிதம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமெனப்பிரார்த்தித்துக் கொண்டது.

*(முற்றும்)*

| |
|---|
| 1997ம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்தளை மாவட்ட மத்திய குழு தமிழ் முஸ்லிம் படைப்பிலக்கியவாதிகளுக்கிடையே அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலாமிடம் பெற்று தங்கப் பதக்கத்தைப் பரிசாக வென்ற கதை. |

*நன்றி - இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 1997*
*நவமணி - 14. 06 1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் வீரர்கள்...

மாவனல்லைப் பிரதான பஸ்தரிப்பிடத்தில் நிறைமாதக் கர்ப்பிணியின் தோற்றத்தில் வந்து நின்ற அந்த பஸ் வண்டியிலிருந்து சுமையா, தோளில் ஒரு குழந்தையும், கையில் இன்னொரு குழந்தையுமாக இறங்கிக் கொண்டாள். எந்த வித சிரமங்களுமின்றி வந்து இறங்கிக் கொண்டதில் அவளுக்கு நிம்மதியாக இருந்தது. ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொண்ட அவள் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த முகவரி எழுதப்பட்டிருந்த காகிதத் துண்டை பக்கத்திலிருந்த ஒருவரிடம் காட்டி, முகவரிக்குரிய இடம் பக்கத்தில் தான் என்பதைத் தெரிந்து கொண்டாள்.

சுமையா இப்போது ஒரு அபலை, இல்லை அனாதை. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அவள், அண்மைய கலவரங்களால் சொத்து சுகங்களையும், கண்ணான கணவனையும் இழந்து, கைம்பெண்ணாகிப் போனவள். இன்றைய ஆயிரமாயிரம் அகதிகளில் அவளும் ஒருத்தி. பள்ளித் தோழி இன்ஷிராவின் அன்பான அழைப்பை ஏற்று அவளிடம் தஞ்சம் வரும் சுமையாவுக்கு இரண்டு குழந்தைகள் வேறு. எப்படி வாழ்வது...? எங்கே போவது...? என்று எதுவுமே புரியாமல் கண்ணீரோடு வாழ்ந்தவளின் இதயத்திற்கு இன்ஷிராவின் இவ்வழைப்பு இதத்தைக் கொடுத்தது.

நண்பியின் வீடு இருக்கும் வீதிக்குள் புகுந்து மனச்சுமைகளோடு நடந்து சென்றாள் சுமையா. வீதியெல்லாம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ''ஓ ரஸூலுல்லா பொறந்த மாசமில்லயா..? அதுதான் இந்த அலங்காரங்களோ...!" எனத் தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டவள், குன்றும் குழிகளும் நிறைந்த அந்த வீதியைப் பார்த்துக் கவனமாகக் கால்களை வைத்து நடந்தாள். இளைய குழந்தை எதிர்காலம் பற்றிய கவலையின்றி தோளிலே நிம்மதியாகத் தூங்க, தாயின் கரங்களைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்த ஐந்து வயது மகள், ''உம்மா.. என்னம்மா... இதெல்லாம் சோடிச்சிருக்காங்க...? நாங்க போற மாமி வீடு பக்கத்திலா...? கால்ல ஒரே வலி... என்னால நடக்க முடியல்ல... பசிக்குதும்மா...! '' இப்படி ஏதேதோ தொடர்பில்லாமல் பேசியபடி நடந்து கொண்டிருந்தாள்.



''ஹூம்.... இன்டைக்குப் போல, அவரு மௌத்தாகி ஒரு வருஷம். இந்த ஒரு வருஷமும் நான் படுறபாடு....? அல்லாஹ்... இனியும் என்ன சோதிக்காதே! இது எங்க கண்மணி ரஸூலுல்லா பொறந்த மாதம். அவங்க பேருல மீலாத் விழா எடுக்கிறவங்க வெறும் கொண்டாட்டங்களை ஒதுக்கி வச்சிட்டு, எங்கள மாதிரி மீளாத் துயருல இருக்கிறவங்களுக்கு ஏதாவது உருப்படியா செய்யக்கூடாதா...?" என ஆதங்கப்பட்டது அவள் உள்ளம்.

அவள் இன்ஷிராவின் வீட்டை அடைந்த போது அவளுக்குப் பெரு வரவேற்புக் கிடைத்தது. நண்பியும் அவள் கணவரும் அவள் மீது காட்டிய அன்பிலும், ஆதரவிலும் சுமையா பூரித்துப் போனாள்.

'இனி உனக்கு விடிவு கிடைக்கிற வரைக்கும் நீ எங்களோடதான் இருக்க வேணும். '' என்று சட்டம் போட்டாள் இன்ஷிரா. எதிர்காலமே சூனியம் என்றிருந்த அவளுக்குத் தோழியின் பேச்சு ஆறுதலையும், நம்பிக்கையையும் தந்தது.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் தமது இளைஞர் இயக்க மீலாத் விழா சம்பந்தமாக இன்ஷிராவின் கணவரான அஷ்ரபைக் காண அங்கு வந்த இளைஞன் இர்ஷாத் புதுமுகமான சுமையாவையும், அவள் குழந்தைகளையும் கண்டு கொண்டான். அவளின் சோகக்கதை அவனுக்கும் கூறப்பட்டது. அந்தச் சோகம் அவனையும் தாக்கத்தான் செய்தது.

சில தினங்கள் ஓடின. மீண்டும் அதே இர்ஷாத் அவ்விடம் வந்தான்.

''இந்த முறை உங்க மீலாத் விழாவுல விசேஷமா என்ன செய்ய உத்தேசம்..? '' கேட்டு வைத்தார் அஷ்ரப்.

''ரஸூலுல்லாட பேருல விழாக்கள மட்டுமே எடுக்கிறதால நம்ம கடம முடியப் போறதில்ல. சமூக சேவை இயக்கம் என்ற பேருல மட்டும் முத்திரயக் குத்திக்கிட்டு சமூகப்பற்றே இல்லாம இருக்குறதுல அர்த்தமில்ல. அதோட ஒவ்வொரு மீலாத் காலத்துல மட்டும் இயங்கி வீண் விரயஞ் செஞ்சி ஆடம்பரமா விழாவ எடுத்துக்கிட்டு அடுத்த மீலாத் வரைக்கும் தூங்குறவங்களா நாம இருக்கக் கூடாது. எங்க சமூகத்துல இன்டைக்கு நாம தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் நெறைய இருக்கு. வீடு வாசல்கள, சொத்து சுகங்கள இழந்து துன்பப்படுறவங்க அகதி முகாம்கள்ல நெறயப் பேர் இருக்கிறாங்க. ரஸூலுல்லாவ எடுத்துக்கொண்டா மத்தவங்கட துன்ப துயர் துடைக்குறதுல அவங்க அலாதி இன்பத்தைக் கண்டாங்க. அதனால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவங்களப் பின்பற்றி விழா எடுக்கிற நாம அவங்களைப் போல மத்தவங்க துயரத் துடைக்கணும்!" என்று கூறியவனை இடைமறித்த அஷ்ரப்

'அப்போ... இம்முறை அகதிகளுக்கு உதவப் போறிங்க...! அப்படித்தானே!"

''ஆமாம்...இம்முறை இயக்கத்துல இருக்கிற பணத்தையும் போட்டு, இன்னும் பணம் சேகரித்து அகதி முகாமில இருக்கிற கொஞ்சம் பேருக்காவது முடிஞ்சளவு சின்னச்சின்ன வீடுகளாவது கட்டிக் கொடுக்கப் போறோம். நீங்களும் பரக்கத்தா இருக்கிறீங்க. வசதியான ஒரு தொகைய நீங்களும் தந்தா நல்லது"

''தாராளமாகத் தாரேன். நீங்க சொல்றது போல மீலாதுகள் உயிர்த்துடிப்புள்ளதாக, சமூகத்துல மறுமலர்ச்சிய விதைக்கிறதா அமைய வேணும். அதுக்கு ஏன்ட ஆதரவு என்டைக்கும் உங்களுக்குக் கிடைக்கும்."

இவ்வாறு கூறிவிட்டு உள்ளே போனவர் இருபத்தையாயிரம் ரூபாவுடன் திரும்பி வந்தார். அதைப் பெற்றுக் கொண்டு விடைபெறத் தயாராகிய இர்ஷாத் தயங்கியபடி,

எங்க நாயகம் (ஸல்) அவங்க வாழ்க்கைல நெறய தியாகங்களச் செய்திருக்காங்க அவங்க சில விதவைகளுக்குக் கூட வாழ்வு கொடுத்திருக் காங்க. நான் கூட ஒருவிதவைக்கு வாழ்வு கொடுக்க நெனச்சிருக்கேன்..." என்று கூறிய இர்ஷாத்தை ஆச்சரியத்தோடு பார்த்த அஷ்ரப்,

''அந்த அதிஷ்டசாலிப் பொண்ணு யாரப்பா...! என்று ஆவலுடன் கேட்டார்.

'' உங்க வீட்டுக்கு வந்திருக்கிற பொண்ண மனசுல வச்சித்தான் சொல்றேன். அவங்க விருப்பத்தக் கேட்டுச் சொல்லுங்க.'" என்றவனை இடைமறித்த அவர்,

'இதுக்கு உங்க உம்மா,வாப்பா சம்மதிப்பாங்களா...!" எனக் கேட்க.

'அவங்க சம்மதிக்காவிட்டாலும் சம்மதிக்க வைப்பேன்!" என்றவன் உள்ளே போன அஷ்ரபுக்காகக் காத்திருந்தான். முகத்தில் புன்னகையோடு வந்த அவர் அவளின் சம்மதத்தைக் கூறி வாழ்த்தினார்.



'' இர்ஷாத்.. உங்கட தியாகத்த நான் பாராட்டுறேன். ரஸூலுல்லாஹ்வ, அந்த செயல் வீரர நினைவு படுத்துற இந்த மாதத்துல கடைபிடிக்க வேண்டிய ஒரு முன்மாதிரிக்கு இலக்கணம் வகுத்திட்டீங்க. எங்க சமூகத்துல உங்கள மாதிரி செயல் வீரர்கள் இன்னுமின்னும் உருவாகணும்! '' என்று கூறி அவனை வழியனுப்பிய அஷ்ரப், அந்த உயிர்த் துடிப்புள்ள செயல்வீரன் செல்வதையே ஆனந்தக் கண்ணீரோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

*நன்றி : ப்ரியநிலா - மீலாத்மலர் 2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதன் புனிதனாகிறான்....!



''உம்மா... உம்மா... உம்மோவ்....' என்று தாயைக் கூவியழைத்த படி வீட்டுக்குள் ஓடிவந்த அந்தச் சின்ன மொட்டு நேராகத் தாய் தொழும் இடத்திற்கு வந்து நின்றான். உம்மா தொழுது ஸலாம் கொடுத்து முடியும்வரை தொழுகை விரிப்பிலேயே உட்கார்ந்திருந்த அவன்,

''உம்மா... அடுத்த பாங்கு சென்ன ஒடனே நோம்பு தொறக்கேலும் தானே!'' என்று ஆவலோடு கேட்டான்.

''ஓ...மகன்... இன்னொருக்க பாங்கு சென்னாச்சரி. நீங்க பெய்த்து ஒர்லோசுல டைமப் பாத்துட்டு வாங்கோ'' என்று தாய் கூறியதும், சிட்டாகப் பறந்த அவன் அதே வேகத்தில் திரும்பி வந்தான்.

''உம்மா.... இப்ப சின்ன ஊசி நாலுலேயும், பெரிய ஊசி மூணுலேயும் ஈச்சி.....''

''அப்ப இன்னம் கொஞ்ச நேரம் தான் ஈச்சி மகன். இன்டைக்கு நான் புள்ளைக்கு கட்லட் செஞ்சி தரப்போற. நீங்க பெய்த்து வெயில்ல வெளயாடாம அடுத்தவூட்டு அஷ்பாக்கோட ஊட்டுக்குள்ள வெளயாடுங்கோ...!'' என்று அவனை அனுப்பிய அஸ்மா பிரார்த்தனையில் ஈடுபட்டாள். அப்போது அவளையும் மீறி அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

புனித ரமழான் ஆரம்பிக்கும் போது உலக முஸ்லிம்களின் மனங்களில் சந்தோஷம் நிரம்பி வழியத் தொடங்கிவிடும். இது அமல்களுக்குரிய மாதம், புனித குர்ஆன் இறக்கப்பட்ட மாதம் என்பதால் இந்த மாதத்திற்கு ஒரு மகத்தான கண்ணியமும் உண்டு. அஸ்மாவைப் பொறுத்தவரை ரமழான் பிறந்து விட்டால், கூடவே அவளுடன் ஒரு தீராத கவலையும் வந்து ஒட்டிக் கொள்ளும். அப்படி என்ன கவலை அவளுக்கு...?

அஸ்மா வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள். குடும்பத்தில் மூத்தவள். அவள் தந்தை மார்க்கக் கல்வியைக் கற்றுத் தேர்ந்த ஓர் உலமா, ஊர் பள்ளி வாசலிலே கதீபாக இருப்பவர். வாப்பாவின் சிறிய சம்பளத்தில் கஷ்டமான ஜீவியம் தான். இளைய ஆண்மக்களுடன் நான்கு குமர்ப்பிள்ளை



களையும் வைத்துக்கொண்டு குடும்ப வண்டியைச் சிரமப்பட்டே ஓட்டி வந்தார் தந்தை. இருந்தாலும் பிள்ளைகளை மார்க்கப் பற்றுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் வளர்த்து விட்டார் அவர். மூத்தவளுக்கு சீதனம் எதுவுமின்றி நல்ல வரன் கிடைத்த போது எப்படியோ சிரமப்பட்டு அவளுக்குத் திருமணத்தையும் முடித்து விட்டார்.

அஸ்மாவின் கணவன் இஸ்மத் மோசமானவன் அல்ல. அவளை நன்றாக வைத்துக் கொண்டான். ஓரளவு வசதியான வாழ்க்கை தான். நகரில் ஒரு சிறிய பிடவைக்கடைக்குச் சொந்தக்காரன் அவன். தொழுகை, அமல்கள் என்று எதுவும் இல்லை. வாரம் ஒரு தரம் ஜும்ஆத் தொழுகைக்கு மட்டும் பள்ளிக்குப் போய்வருவான். முழுக்க முழுக்க எப்போதும் வியாபாரத்திலே மூழ்கியிருப்பான்.

திருமணம் முடித்தபின் முதலாவதாக வந்த ரமழானில், முதல் நோன்பு தினத்தில், நோன்பு வைப்பதற்காக கணவனை அஸ்மா எழுப்பிய போது, அவன் சொன்ன வார்த்தைகள் அவளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தின.

''அஸ்மா நீங்க நோம்பு புடீங்கோ. எனக்கென்டா ஏலா எனக்கு நோன்பு புடிச்ச பழக்கமே இல்ல. ஏன்ட வாழ்க்கைல நான நோன்பு புடிச்சதேயில்ல. அதால என்ன உட்டுடுங்கோ... எனக்கு பசியில ஈச்ச ஏலா.... ''அவன் இப்படிக் கூறிய போது இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல வேதனைப்பட்டாள் அவள். இருந்தாலும் மனம் தளராது,

''அதுசரி.... இவ்வளவு காலமும் தான் நோன்பு புடிச்சல்ல. பரவாயில்ல.... இப்பவாவது புடீங்கோ.... இது எல்லா முஸ்லிம்களுக்கும். கடம. கட்டாயம் ஒவ்வொத்தரும் அல்லாவுக்காக இந்தக் கடமய செய்யத்தான வேணும்.... ''அவள் பேசிக் கொண்டே போனாள்.

''அஸ்மா..... சொன்னாக் கேளுங்கோ... என்னக் கரச்சல் பண்ண வேணாம்... என்னால நோம்பு புடிச்ச ஏலா. கடசியாகச் செல்லிட்டேன். ஏன்ட தூக்கத்த கலச்சாம போங்கோ.... ''என்று கூறிவிட்டு அவன் மறுபக்கம் திரும்பிப் படுத்தபோது, அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை.

கணவனின் இந்த நடவடிக்கையை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அவளுக்கு அழுகை பொத்திக் கொண்டு வந்தது. ஏதோ பெயருக்குச் சாப்பிட்டுவிட்டு நோன்பு வைத்த அவள், கணவனுக்காகப் பிராத்திக் கத் தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாவம் வாப்பா... இவரு நல்ல மனுஷன் என்டு எல்லாரும் சொன்னதால மிச்சம் தோண்டிப் பாக்காம என்னக் கல்யாணம் முடிச்சிக் கொடுத்திட்ட, இந்த விஷயம் வாப்பாவுக்கு தெரிஞ்சா எவ்வளவு மனசு நோகுவாரு? இத தாருக்கிட்டேயும் செல்லப்படாது. எப்படியாவது அவரத் திருத்தி நோம்பாளியாக ஆக்கோணும். '' என உறுதி எடுத்துக் கொண்டாள் அவள்.

தனது தாயும் தந்தையும் தங்களை வளர்த்த முறையை எண்ணிப் பார்த்தாள் அஸ்மா. பாடசாலை செல்வதற்கு முன்னரே அவர்கள் எல்லா நோன்புகளையும் நோற்று விட்டார்கள். கடைசித் தம்பிமார் கூட நோன்பை விடாமல் பிடித்து விட்டார்கள். அவளுக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. கடைக் குட்டித்தம்பிமார் நோன்பு வைத்துக் கொண்டு பகலானதும் கொஞ்சம் அடம் பிடிக்கத் தொடங்கி விடுவார்கள்.

''உம்மா... கொஞ்சம் தண்ணி தாங்கோ... கொஞ்சம் தான்...'' எனக் கெஞ்சுவார்கள். உம்மா எப்படியோ சமாளித்து அவர்களின் கவனத்தைத் திசை திருப்பி விடுவார். நேரம் செல்லச்செல்ல தொல்லை தரத் தொடங்குவார்கள். அப்போது வாப்பா அஸர் தொழுகைக்குப் பின் அவர்களை சைக்கிளில் உட்கார வைத்துக் கடைவீதிக்கு அழைத்துச்செல்வார். அங்கு சில தீன்பண்டங்களை இருவருக்கும் வாங்கிக் கொடுத்து, ஐந்து மணிக்குப் பிறகு வீடு வந்து சேர்வார். இப்போது ஒவ்வொருவர் கையிலும் சின்னப் பார்சல்கள் இருக்கும். அதை யாரிடமும் கொடுக்காது மஃரிபுக்கான அதான் ஒலிக்கும்வரை கையிலேயே பிடித்துக் கொண்டிருப்பார்கள். சில நேரங்களில் களைப்பு அதிகமாகும் போது அப்படியே கையில் பார்சலுடன் தூங்கி விடுவார்கள். மஃரிபுக்கான அதான் ஒலிப்பதற்கு ஓரிரண்டு நிமிடங்கள் இருக்கும் போது வாப்பா அவர்களை எழுப்பி தூக்கிக் கொண்டு வந்து பாயிலே உட்கார வைப்பார். அதான் ஒலிக்கும் போது அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. நோன்பு திறந்ததும் அவர்கள் அந்த இடத்தில் இருக்க மாட்டார்கள். கையில் கிடைத்த சில்லறைகளை எடுத்துக் கொண்டு நோன்புக்கடை நோக்கி சிட்டாகப் பறப்பார்கள். நாட்செல்லச் செல்ல நோன்பு பிடிப்பதில் அவர்களுக்கு எந்தச் சிரமமுமே இருக்காது.

இப்படித்தான் வாப்பா எங்கள் எல்லோரையும் ஐந்து வயதிலேயே நோன்பு பிடிக்க வைத்து விட்டார். அதேபோல சின்ன வயதிலேயே தொழவும் வைத்து விட்டார். எங்கள் உம்மாவும், வாப்பாவும் சின்ன வயதில் எங்களை நல்ல முறையில் வளர்த்தெடுத்ததால் தான் நாம் எல்லோருமே அல்லாஹ் வுக்குப் பயந்து அவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றி இஸ்லாமிய மார்க்க வரம்புகளைப் பேணி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கள் உம்மாவுக்கும், வாப்பாவுக்கும் அல்லாஹ் ரஹ்மத் செய்ய வேண்டும்'' எனப் பெற்றோருக்கு துஆச் செய்து கொண்டாள் அஸ்மா.

அஸ்மாவின் திருமணத்தின் பின் பல ரமழான்கள் வந்து போயின. கணவன் இஸ்மத்தின் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்த அவளும் எவ்வளவோ முயற்சித்து விட்டாள். பலன் பூஜ்யமாகவே இருந்து விட்டது.

இப்போது அவர்களின் ஒரே மகன் சியாமுக்கு ஆறு வயது. கடந்த வருடம் இடைக்கிடை அவனை நோன்பு வைக்கச் செய்து விட்டாள் அஸ்மா. இந்த முறை அவன் எல்லா நோன்புகளையும் நோற்றாக வேண்டும். அவனுக்கு நோன்பு பிடிப்பதில் ஆசையும், ஆர்வமும் இருப்பதைக் கண்டு அவளுக்கு மகிழ்ச்சி தான், இப்போது மகன் விபரம் தெரியக் கூடியவனாக வளரும் போது தந்தை நோன்பு பிடிக்காதவர் என்று தெரிந்தால்....? இதை நினைக்கும் போதே அவளுக்கு சங்கடமாக இருந்தது. மகனுக்கும் இது தெரிய வரக் கூடாது. தெரிந்தால் அவன் வாப்பாவை மதிக்க மாட்டான். அதனால் நான் தான் கவனமாக இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

எப்படியோ ரமழான் நோன்பு அரை வாசியையும் தாண்டி விட்டது இப்போது கடைசிப் பத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். அன்று பகல் வேளை, குழந்தை சியாம் நோன்பு தந்த களைப்பால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். வீட்டில் மனைவியைத் தவிர யாரும் இல்லை என்பதால் இஸ்மத் எந்தக் கவலையுமின்றி சுதந்திரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இதை அஸ்மாவால் சகிக்க முடியவில்லை. அவள் மெதுவாகப் பேச்சை எடுத்தாள்.

''நோன்பும் முடியப் போற. சின்னக் கொழந்தையும் எல்லா நோன்பையும் புடிச்சீட்ட. இவளவு வயது வந்தும் நீங்க மாறாம ஈச்சியது ஞாயமா...? இவளவு வசதி ஈந்தும் உடம்புல உஜார் ஈந்தும் நோன்பு புடிச்சாம இவளவு காலத்தையும் பாழாக்கீட்டெனியன்? நாளைக்கு அல்லாகிட்ட எனத்தயன் செல்லப் போற? இன்டைக்கோ, நாளைக்கோ திடுஸ் என்று மௌத்து வந்துடும். எங்கட கடமய நெறவேத்தாம மௌத்தாப் போனா எங்களுக்கு சொர்க்கத்துக்குப் போகேலுமா....?'' அவள் கூறிக்கொண்டே போனாள். பொறுமையிழந்த அவன்,

'' அஸ்மா......... ஒங்கட பயான நிப்பாட்டுங்கோ.......... நோன்பு புடிச்சியதும், புடிச்சாததும் ஏன்ட இஷ்டம். வாப்பா தான் ஹஸரத் என்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தா மகளும் பயான் சொல்ல வாற. நான் ஒழச்சியவன். கஷ்டப்படுகியவன். என்னால பட்டினி ஈச்ச ஏலா..........." அடித்துச் சொல்லி விட்டான் அவன்.

" ஏழைகள்ட பசீட கொடுமைய வௌங்கிக் கொள்ளியதும் நோன்புட தத்துவம் தான், நீங்க கடைல பேனுக்குக் கீழ்ழ இருந்து கொண்டு யாவாரம் செய்த. இதுல கஷ்டம் ஒன்டுமில்ல. முன்னுத்தூட்டு மூசின் நானாவப் பாருங்கோ....ஏழ மனுஷன். பஜார்ல மூட தூக்கி வாழிய. வெயில்ல பாரம் தூக்கியது லேசி வேலயா.....? அப்பிடி ஈந்தும் மனுஷன் ஒரு நோன்பும் உடாம புடிச்சிய . ஒரு நேரத் தொழுகயாலும் உடுகியல்ல. அடுத்தூட்டு அஹமது நானாவப் பாருங்கோ வெலனயில ஈந்து அந்தி வரைக்கும் பொடவ பேக்கச் சொமந்து கொண்டு, மழ, வெயில் பாக்காம, காடு மேடெல்லாம் திரிஞ்சி யாவாரம் பண்ணிய. ஒரு நோம்பாவது உடுகியா.....? " இதற்கு மேல் அவள் பேசுவதற்கிடையில் கோபத்தோடு குறுக்கிட்ட இஸ்மத்.

"இந்தாப் பாருடி..... அவனையும், இவனையும் உதாரணம் காட்டி கதச்ச வராத. நான் மிச்சம் கெட்டவனாகுவேன்....!" என்று அவன் கத்திவிட்டு கையைக் கழுவும் போது, எப்போதோ விழித்தெழுந்து அவர்களின் பேச்சை செவிமடுத்துக் கொண்டிருந்த சியாம் அங்கே வந்து கண்களில் கேலி மின்ன,

"ஏய்யா.... வாப்பா நோம்பில்ல..... வெக்கமில்ல..... கள்ள நோம்பு....." என்று பாடுவது போல் உரத்த குரலில் சத்தமிட்டபோது, படாரென இருக்கையை விட்டெழுந்த அவன் மின்னல் வேகத்தில்,

" ராஸ்கல்.... உம்மாவைப் போல ஒனக்கும் கொழுப்புடா.... இப்படிக் கத்தி ஏன்ட மானத்தையா வாங்கப்போற?" என்று கத்தியபடி ஓங்கி அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டான். எதிர்பாராத தாக்குதலால் குழந்தை மிரண்டு போனான். அடிபட்ட அந்தப் பூ முகத்திலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. கன்னத்தைப் பிடித்தபடி அழுத கொண்டிருந்த மகனைத் தாவியணைத்த தாயுள்ளம் கேவியழுதது.

" நோம்புக்காரப் புள்ளயப் போட்டு இப்பிடி அடிச்சீட்ட... நீங்க ஒரு மனுஷனா....? "அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. மகனை நெஞ்சோடு அணைத்தபடி கேவிக் கேவி அழுதாள் அஸ்மா.

அன்றைய சம்பவத்தின் பின் சியாமிடம் எந்தத் துடிப்பையும் காண முடியவில்லை. எதையோ பறி கொடுத்தவன் போல் சோர்ந்து உட்கார்ந்திருப் பான். அவன் யாருடனும் விளையாடப் போகவில்லை. யாருடனும் பேசவும் இல்லை. தந்தையைக் கண்டாலே அவனுக்குப் பேயைக் கண்ட பயம். தந்தையின் கண்களில் படுவதைக் கூட அவன் தவிர்த்துக் கொண்டான்.

பிள்ளையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த விரும்பிய அவள், முன் வீட்டு மூசீன் நானா பள்ளிக்குப் போகும் போது அவனையும் அவருடன் சேர்த்து அனுப்பி வைத்தாள். அவரும் சிறுவன் நோன்பு பிடிப்பதால் அவன் மீது மிகவும் அன்பு காட்டி பத்திரமாக அழைத்துச் சென்று, பக்கத்திலேயே வைத்துக் கொண்டு தொழுவார். அவனும் அவருடன் சேர்ந்து தொழுவான். இடைக்கிடை பயான்களையும் கேட்டு விட்டே அவர்கள் வருவார்கள்.

அன்றைய சம்பவம் பிள்ளையின் மனதில் பெரியதோர் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறியாதவளல்ல அவள்.அவனைச் சந்தோசப்ப டுத்துவதில் எப்படியெல்லாமோ முயன்று தோற்றுப் போனாள் அஸ்மா.

அன்று ஸஹர் செய்து விட்டுப் படுத்த குழந்தை எழும்போது, உடம்பெல்லாம் கொதித்தது. இதைக் கண்டு இஸ்மத்துக்கும் கவலை தான். என்ன இருந்தாலும் அவன் சியாமின் தந்தையல்லவா? அன்று நோன்புக்காரக் குழந்தைக்கு அவசரப்பட்டு அடித்து விட்டதற்காக அவனும் உள்ளுக்குள் அழத்தான் செய்தான். ஒன்றுமறியாத சின்னப் பிள்ளையைக் கொண்டு நோன்பு பிடிப்பதை அவனால் பொறுக்க முடியவில்லை. அஸ்மா மீது கோபப்பட்டான் இஸ்மத்.

"சின்னப் புள்ளய நோன்பு புடிச்ச வெச்சீச்சிய. ஒங்களுக்கு மூளைல எனத்தியாலும் ஈச்சியா....? இது புள்ளைக்குச் செய்த பெரிய அநியாயம்...! கோபத்தில் வெடித்தான் அவன்.

" அவனச் சின்ன வயசுல நோம்பு புடிச்ச வச்சாத்தான், அவன் பெரிசானாலும் நோம்பு புடிப்பான். ஒங்களயே எடுங்கோ. ஒங்கட உம்மா வாப்பா நீங்க சின்னப் புள்ளயாக ஈச்சிய நேரம் தொழ நோன்பு புடிச்சப் பழக்காததால தான் இவ்வளவு வயசு வந்தும் எதுவும் இல்லாம நீங்க இருச்சிய. அது மாதிரி நாளைக்கு ஏன்ட புள்ள வரக் கூடாது" என்று அவள் அவனைக் குத்திக் காட்டி காரமாகக் கூறிய போதும் அவன் கோபப்பட வில்லை. அவள் பேச்சில் ஒரு நியாயம் இருப்பது அவனுக்கு விளங்கியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘ஏன்ட உம்மாவும், வாப்பாவும் எனக்கிட்டக் கொஞ்சம் கண்டிப்பாக நடந்தீந்தா இன்டைக்கு ஏன்ட நெலையே வேற....” என உள்ளுக்குள் உருகினான் அவன்.

மகனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான் அவன். உடம்பு நெருப்பாகக் கொதித்தது.

‘‘அஸ்மா புள்ளைக்கு நல்லாகக் காச்சல். நான் ஆட்டோ ஒன்டு எடுத்துக் கொண்டு வாறன். நீங்க மருந்துக்குப் போக ரெடியாகுங்கோ...” ‘‘என்றவன் அவள் பதிலை எதிர்பராமலேயே அங்கிருந்து அகன்றான்.

‘‘மகன்..... ஏன்ட ராஜா.... இப்ப ஒங்களுக்கு காச்சல் எனியன்..? இன்டைக்கு மட்டும் நீங்க நோம்ப உடுங்கோ. சொகமாகியதும் புடிச்ச ஏலும்”

‘‘ஏலா உம்மா.... நான் நோம்ப உட மாட்டேன் நோம்ப உடுகியது பாவம். அல்லாஹ் தண்டிச்சியோன்டு நரகத்துல போடியோன்டு... அன்டைக்கு பள்ளீல பயான்ல ஹஸரத்து நோம்பப்பத்தித்தான் மிச்சம் சென்ன.... வாப்பா தொழாம நோம்பு புடிச்சாம ஈச்சிய தானே! ஹஸரத்துச் சென்ன விஷயம் ஒன்றும் வாப்பாக்குத் தெரியாதா... உம்மா... வாப்பாவ அல்லா நரகத்துல போட்டா அவருக்குத் தாங்கேலுமா..? அதச் சொட்டும்... நான் புடிச்ச நோன்பு எல்லாத்தையும் வாப்பா புடிச்சதாக நெனச்சி அவர மன்னிக்கச் சொல்லி அல்லாகிட்ட துவாக் கேட்ட... அவன் சொல்லிக் கொண்டே போனான். கண்களில் இருந்து வடியும் கண்ணீரைத் துடைக்கத் தெரியாதவளாக மகனை ஆரத் தழுவியபடி கேவினாள் அஸ்மா. அப்பொழுது.... தன் பின்னாலிருந்து விக்கியழும் சத்தம் கேட்டுத் திரும்பினாள் அஸ்மா. அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. அங்கே... அவள் கணவன் இஸ்மத் தன்னிலை மறந்தவனாக கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான். அந்த அழுகையில் அவனின் மனக்கறைகள் கழுவப்பட்டுக் கொண்டிருந்தன. ஆம் இஸ்மத் என்ற அந்த மனிதன் புனிதனாகிக் கொண்டிருந்தான்.

‘‘அல்ஹம்துலில்லாஹ்” அஸ்மாவின் நாவு படைத்தவனுக்கு நன்றி கூறியது. சியாமின் அந்தப் பூ முகத்தில் என்றுமே இல்லாத புன்னகை இழையோடியது. ஆம்! அந்தக் குடும்பத்தில் இன்னொரு நோன்பாளி உருவாகி விட்டான்.





# அவளும் ஒரு பெண் தான்....!

இரவின் மடியில் உலகமே உறங்கும் நள்ளிரவு நேரமது. அந்த பெண்கள் அனாதை இல்லத்திலே தனதறையில் தூங்க முயன்று கொண்டிருந்த ஸாலிஹா புரண்டு புரண்டு படுத்தாள். தூக்கம் வரவில்லை. நெஞ்சிலே கவலைகள் நிறைந்திருக்கும் போது, கண்களில் எங்கே தூக்கம் வரப்போகிறது? ஹூம்..... நீண்ட பெருமூச்சை ஊதித்தள்ளிய அவள், பக்கத்தில் படுத்திருந்த குழந்தையின் முகத்தை நோக்கினாள். கணவன் பாயிஸின் முகத்தைப் அப்படியே அச்சடித்து வைத்தாற் போல் இருந்த அந்தப் பால் முகத்தை பார்க்கப் பார்க்க அவளின் அடிமனதில் படிந்திருந்த கடந்தகால நினைவுகள் ஒவ்வொன்றாக அவள் முன்னே வந்து போகத் தொடங்கின. தான் கடந்து வந்த கரடுமுரடான வாழ்க்கைப் பாதையைக் கண்ணீரோடு திரும்பிப் பார்த்தாள் ஸாலிஹா.

ஸாலிஹா யாருமில்லாத ஒரு அனாதை. அந்த அனாதை என்ற ஒற்றைப் பட்டத்துடன் ‘விதவை’ என்ற இன்னொரு பட்டமும் அவளோடு ஒட்டிக் கொண்டு விட்டது. நினைவு தெரிந்த நாள் தொடக்கம் அந்த அனாதை இல்லம் தான் அவள் உலகம்.

தன்னைப் பெற்றவர்கள் யார்? அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது. இதை விடக் கொடுமை அவளுக்கு வேறு என்ன இருக்க முடியும்? பல தடவைகள் தன்னைப் பற்றிய உண்மைகளை அறிய முயன்றும் பலன் பூஜ்யமாகவே இருந்து விட்டது. அவளின் இந்த இருபத்தைந்து வயது வாழ்விலும் அவளைப் பார்க்கவென்று எந்த உறவினரும் வந்ததில்லை. அப்படியானால் பெற்றோருக்கு வேண்டாத பிள்ளையாகப் பிறந்தவளா? எனப் பல விதமாகவும் சிந்திக்கும் போது, அவளுக்குப் பைத்தியமே வந்து விடும் போல் இருக்கும். தன் பிறப்பைப் பற்றிய உண்மை தெரியாததால் அவளுடைய பாதி வாழ்க்கை கண்ணீரிலேயே கரைந்து விட்டது.

பெற்றோரை இழந்த அனாதைகளுக்கும், உற்றார் உறவினர் என்று யாருமில்லாத அனாதைகளுக்கும் புகலிடம் கொடுத்து, அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கி, கல்வி, தொழிற்கல்வி என்றெல்லாம் வாழும் வழியைக் கற்றுக் கொடுக்கும் உயர்ந்த கைங்கரியத்தைச் செய்கின்ற பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதை இல்லம் தான் அது.

நாட்களின் நகர்விலே ஸாலிஹாவும் அந்த இல்லத்தில் இருந்து முடிந்த வரை கற்றுக் கொண்டாள்.

அந்த அனாதை இல்லம் மற்றுமொரு சிறப்பான பணியினையும் அந்த மாணவிகளுக்குச் செய்து வருகிறது. அங்கு வளரும் பிள்ளைகள் திருமண வயதை அடையும் போது பல சமூக இயக்கங்களினதும் பங்களிப்புடன் அவர்களுக்குத் திருமணத்தையும் முடிந்தவரை நடத்தி ஒரு இல்லற வாழ்க்கையையும் ஏற்படுத்திக் கொடுக்கும் சிறப்பான சேவையையும் செய்து வருகிறது.

அந்த அனாதைகளுக்கு வாழ்வு கொடுப்பதற்காக எங்கள் சமூகத்தின் விழிப்புணர்ச்சியும், மார்க்கப்பற்றும், நல்லமனமும் கொண்ட இளைஞர்கள் முன்வரும்போது, ஒவ்வொரு முறையும் நான்கைந்து பேர்களுக்குத் திருமணத்தை நடத்தி வைக்கத் தவறுவதில்லை.

இப்போது ஸாலிஹாவுக்கு இருபத்தினான்கு வயதாகிவிட்டது. இம்முறையும் சில நல்ல இளைஞர்கள் முன்வந்த போது ஒரு மீலாத் தினத்திலே அந்த இல்லத்தில் நான்கு பெண்களுக்குத் திருமணம் நடைபெற்றது. அதில் எங்கள் ஸாலிஹாவும் ஒருத்தி.

திருமணத்தின் பின் தன் கணவனோடு அவன் இல்லத்திற்குக் குடித்தனம் நடத்துவதற்காகப் புறப்பட்ட போது அந்தப் பிரிவுத்துயரை தாங்க முடியாது நிலைய அதிபரையும், சகோதரிகளையும் கட்டிப்பிடித்துக் கண்ணீர் வடித்தாள். பின் அவர்களின் ஆசியோடும், வாழ்த்துக்களோடும் விடை பெற்றாள்.

அவள் கணவன் பாயிஸ் மிகவும் நல்லவன். அவள் மீது அவன் உயிரையே வைத்திருந்தான். எந்த உறவுகளுமேயில்லாத அவளுக்கு கணவன் என்ற உறவு கிடைத்ததும், அதுவும் அன்புமிக்க கணவன் கிடைத்த போது அவள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினாள். தான் மிகவும் கொடுத்து வைத்தவள் என நினைத்துக் கொண்டாள். தான் யாருமற்ற அனாதை என்ற கவலை கூட இப்போது அவளுக்கு குறைந்து விட்டது.

இப்போது அவள் கணவனின் வீட்டில் தான் வசித்து வருகிறாள். இப்போது அந்த வீட்டில் தாய் மர்யமும், அவனது இரண்டு சகோதரிகளும் ஒரு தம்பியும் உள்ளார்கள். இன்னொரு தம்பி லண்டனில் படித்துக் கொண்டிருக்கிறான்.



பாயிஸின் குடும்பம் மத்தியதரமானது. அவன் கொழும்பில் தனியார் அலுவலகம் ஒன்றில் வேலை பார்த்து வருகிறான். வாரத்திற்கு ஒரு முறை வீடு வந்து போவான்.

அவனின் தாயாருக்கும், சகோதரிகளுக்கும் இந்தத் திருமணத்தில் துளியும் விருப்பமிருக்கவில்லை. எனவே ஸாலிஹாவை அவர்கள் வெறுப்புடனே நோக்கினார்கள்.

''எங்கேயோ போற தரித்திரமெல்லாம் ஊட்டுக்குள்ள பூந்து திண்டு குடிச்சி சொகமா ஈச்சிய.... கொடுத்து வச்சதுகள்'' இப்படியாக அவன் வீட்டில் இல்லாத நேரங்களில் அவளின் அனாதைத் தன்மையைச் சுட்டிக்காட்டிக் கூரிய சொற்களால் அவள் இதயத்தைக் காயப்படுத்தினர். அவள் தன் கணவனுக்காக அனைத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டாள். அவர்கள் இல்லற வாழ்வு இனிமையாக நகர்ந்து கொண்டிருந்தது.

இப்போது அவள் நான்கு மாதக் கர்ப்பிணியாக இருந்தாள். தாய்மைப்பேறு காரணமாக இன்னொரு உறவு அவளுக்குக் கிடைக்கப் போவதையிட்டு எல்லையற்ற மகிழச்சியில் திளைத்தாள்.

அன்று ஒரு விடுமுறை தினம் அவன் வீட்டில் இருந்தான். இருவரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு பக்கத்தில் இருக்கும் ஆற்றுக்கு ஆசையாகக் குளிக்கச் சென்றார்கள். அவள் புடவைகளைத் துவைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். பாயிஸ் சில அடித் தூரத்தில் குளித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் சடுதியாக அவள் அங்கே திரும்பிப் பார்த்த போது அவனைக் காணவில்லை. சிறிது தூரத்தில் நீருக்குள் கைகள் அசைவதைக் கண்டு ''ஐயோ... காப்பாத்துங்கோ......'' என அவலக்குரல் எழுப்பினாள். தூரத்தில் குளித்துக் கொண்டிருந்த ஓரிருவர் ஓடிவந்து நீருக்குள் பாய்ந்து தேடிய போது அவர்களுக்கு அவனது உயிரற்ற உடல் தான் கிடைத்தது. ஸாலிஹாவுக்கு உலகமே இருண்டு கொண்டு வந்தது. அதற்கு மேல் அவளுக்கு எதுவுமே தெரியவில்லை.

நினைவு திரும்பிப் பார்த்த போது அவள் வீட்டிலே கட்டிலில் கிடந்தாள். வீட்டில் ஜனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. நடந்ததை ஞாபகத்தில் கொண்டு வந்த போது அவளால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. தன்மீது உயிரையே வைத்திருந்த, தனக்கென்றிருந்த ஒரே உறவும் அவளை விட்டுப் பிரிந்த போது, அவள் தனிமரமாய் தவித்துப் போனாள். வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு அவள் உள்ளம் உடைந்து போயிருந்தது. சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையாக அவள் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். பக்கத்தில் நின்றிருந்த பெண்கள் கதைப்பது லேசாக அவள் காதுகளில் விழுகிறது.

''பாவம்... அவருட கெட்ட நேரம் முந்தி எப்பவாவது வாற வலிப்பு வியாதி ஆத்துல குளிச்சிய நேரம் வந்தீச்சி. அது தான் இப்படி - ஒரு மௌத்து நடந்தீச்சி...." என அனுதாபப்பட்ட போது தான், ஏற்கனவே தன் கணவனுக்கு அப்படி ஒரு வியாதி இருப்பது அவளுக்குத் தெரிந்தது.

அந்த அனாதை இல்லத்திலிருந்து அதிபரும் பலரும் வந்திருந்தார்கள். அவர்களின் முகங்களில்கூட சோகம் முக்காடிட்டிருந்தது. அவர்களும் அவளுக்கு முடிந்தவரை ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்கள்.

பாயிஸின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டது. அவளை அந்த வீட்டினர் யாருமே பொருட்படுத்தவில்லை. ஒரு அற்பப் பிராணியைப் பார்ப்பது போல் வெறுப்போடு நோக்கினர்.

''இந்தச் சனியன் தரித்திரம் புடிச்ச மூதேவி வந்த நேரம் என் புள்ள பெய்த்து சேந்துட்டான்." என அவள் காதுபடவே மாமி மர்யம் கூறியது, நொந்து போயிருக்கும் அவள் உள்ளத்தை மேலும் நோகச் செய்தது.

''இங்க பாருங்கோ... நீங்க இப்படிப்பேசப் படாது, மௌத்து தாருக்கும் வாறது தான். அத மாத்த எங்களாலயோ, ஒங்களாலயோ ஏலா. இப்பிடி நீங்க அந்தப் புள்ளட மேல்ல பழி போட்டு பேசியது ஞாயமில்ல. அவ மிச்சம் நொந்து பெய்த்தீச்சி. தாயில்லாத அவளுக்கு நீங்க தாய் மாதிரி..." '' என்று அதிபர் கூறவும், முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு அப்பால் போய் விட்டார் மாமி மர்யம்.

அவர்கள் அந்த இடத்தை விட்டு விடைபெறப் போகும் போது,

'' நீங்க போறத்தோட அந்த ஸாலிஹாவையும் கையோட கூட்டிக் கொண்டு போங்கோ..."

''நீங்க எனத்தியன் செல்லிய...?" திகைப்போடு கேட்டார் அதிபர்.

''எங்களுக்கு இப்ப... அவளவெச்சிப் பாக்க ஏலா. இப்ப மகனும் இல்ல. அவ இங்க ஈச்சியதுல அர்த்தமுமில்ல" என்று கூறி விட்டார் மர்யம்.

''நீங்க பெரியவ. கொஞ்சம் யோசிச்சிப் பாருங்கோ. இவ பகுத்துல ஒங்கட மகன்ட புள்ள ஈச்சிய. நீங்க மனசு வெச்சா... இவட இத்தா முடிஞ்ச பொறகும் ஒங்கட மருமகளா ஆக்கிக் கொள்ள ஏலும், ஒங்களுக்கு இன்னம் ரெண்டு மகன்மாரு ஈச்சிய தானே! யோசிங்கோ... " என அதிபர் முடித்த போது,

''டீச்சர்... நீங்க பசுந்தாப் பேசிய, இதெல்லாம் பேசத்தான் பசுந்தாக ஈச்சும். நடக்க ஏலா. நீங்களே அவள ஒங்கட எடத்துக்கு கூட்டிக் கொண்டு போனா எங்களுக்கு ஒதவியாக ஈச்சும்...." என்று கூறி அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் மர்யம். அதற்கு மேல் பேசுவதில் அர்த்தமில்லை என்பதைப் புரிந்து கொண்டார் அதிபர்.

மனம் நிறைந்த சோகச் சுமைகளோடு, இன்னுமொரு ஜீவனைச் சுமந்து நிற்கும் ஸாலிஹாவையும் சுமந்தவாறு நெடுமூச்செறிந்தபடி அந்த வாகனம் அனாதை இல்லம் நோக்கிப் புறப்பட்டது.

அந்தக் கருணை நிறைந்த இல்லம் மீண்டும் ஸாலிஹாவை அன்புடன் அரவணைத்துக் கொண்டது. அவள் தனது 'இத்தா' கடமையை அங்கேயே அனுஷ்டித்தாள். நாட்கள் நகர்ந்தன. ஸாலிஹா ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அதோடு அவளது 'இத்தா' கடமையும் முடிவுற்றது.

இன்றைய சமுதாயத்தில் விதவைகளின் விவகாரங்கள் நோக்கப்படுவதில்லை. சமுதாயத்தால் மறக்கப்பட்ட, கவனிப்பாரற்ற ஒரு பிரிவாகவே அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். உலகத்தில் விதவைகளும் வாழ வேண்டும். அவர்களுக்குக் கட்டாயம் மறுமணம் தேவை. ஏனைய பெண்களைப் போன்று அவர்களுக்கும் ஆசாபாசங்கள் இருக்கத் தான் செய்கின்றன. இதற்கும் மேலாக, இளம் வயதில் விதவையான பெண்களுக்குத் துணை வேண்டும். அவர்களின் ஜீவனோபாயத்திற்கும், குழந்தைகளை வளர்த்தெடுப்பதற்கும் இந்த மறுமணம் நிச்சயம் அவசியமானது. எனவே தான் ஸாலிஹாவையும் இப்படியே விட்டு விடக்கூடாது. அவளுக்குத் தகுந்த துணை கிடைக்கும் போது மறுமணம் செய்விக்க வேண்டும் என முயன்று கொண்டிருந்தார் அதிபர்.

அன்றொருநாள் ஸாலிஹாவிடம் வந்த அதிபர் மெதுவாகக் கதையைத் தொடங்கினார்.

''ஸாலிஹா... நீ ஏலாதென்டு செல்லக்கூடாது. நீ இன்னொரு கல்யாணம் முடிச்சோணும். நீயும் வாழோணும். இப்ப ஒரு மனுஷர் வந்தீச்சி. வயசு நாற்பது ஈச்சும். பொண்டாட்டி மௌத்தாகீட்டாம். நாலு புள்ளைகள் இருச்சியாம். ஒன்னப்பத்தி சொன்னதும் அவருக்கு விருப்பம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈந்தாலும் ஒரு நிபந்தனயப் போட்டீச்சியாரு...! என்று அவர் முடித்த போது, அது என்ன என்பது போல் அவரை நிமிர்ந்து ஏறிட்டாள் ஸாலிஹா.

''ஸாலிஹா... அவரு ஒன்னக் கல்யாணம் முடிச்சியாம். ஒன்ட புள்ளய இங்கயே வெச்சிட்டு வரட்டாம்." என்று அவர் கூறிய போது கோபத்தால் அவள் முகம் சிவந்து விட்டது.

''அவர்ட புள்ளகள வளக்கத்தானே அவரு கல்யாணம் முடிச்ச விருப்பப் படுகியாரு. அவர்ட புள்ளகள் அவருகிட்ட இருக்கோணும். ஏன்ட புள்ள எனக்கிட்ட இருக்கக் கூடாது. ஜாதி நியாயம் தான். தாய், தகப்பன் தாரென்று தெரியாம நான் படுகிய வேதனைய நாளைக்கு ஏன்ட புள்ள பட நான் சத்தியமாக உட மாட்டேன்.... இவங்கெல்லாம் ஒரு அனாதைக்கு வாழ்வு கொடுக்கோணும், விதவைய வாழ வச்சோனும் என்ட நல்ல எண்ணத்துல வரல்ல. இவர்களுக்கெல்லாம் வேண்டியது ஒரு நல்ல பொண்டாட்டி அல்ல. அவங்கட புள்ளகள வளக்க ஒரு வேலக்காரி, அவங்களுக்கு ஆக்கிக் கொடுக்க ஒரு சமயல்காரி, உடுப்புகளக் கழுவிப்போட ஒரு வேலக்காரி....! மெடம் ஒரு நல்ல வேலக்காரிய தேடிக் கொள்ளச் சொல்லி ஆள அனுப்புங்க எனக் கொதிப்போடு கூறியதைத் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்த அவர், அவள் கூறியதில் இருந்த நியாயங்களைப் புரிந்து கொண்டு அவ்விடத்திலிருந்து அகன்றார்.

பாயிஸின் மரணத்தின் பின் அன்று அந்த வீட்டில் ஒரே கலகலப்பு மர்யம் விதம்விதமான சமையல்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்தார். கொஞ்ச நேரத்தில் அந்த வீட்டின் முன் ஒரு கார் வந்து நிற்கிறது. அதிலிருந்து இறங்கிய ஒரு வாட்ட சாட்டமான இளைஞன் வீட்டை நோக்கி வருகிறான்.

''ஹாய்...... மாமா... வந்துட்ட......டொக்டர் மாமா வந்துட்ட...! எனச் சப்தமிட்டபடி சில சிறுசுகள் உள்ளே ஓடின.

ஆம் பாயிஸின் தம்பி பஸீல் தனது மேற்படிப்பை முடித்துக் கொண்டு வந்திருக்கிறான். இந்த அமர்க்களத்துக் கெல்லாம் காரணம் அது தான்.

ஏற்கனவே சகோதரனின் மரணச் செய்தி கேட்டு அவனும் நொந்து தான் போயிருந்தான். அவன் இவ்வளவு தூரம் படித்து முன்னேறுவதற்கு ஏணியாக இருந்தவன். பாயிஸ் தானே!

வீட்டுக்கு வந்ததிலிருந்து இதுவரை முகம் தெரியாத மதினியையும், குழந்தையையும் அவன் கண்கள் தேடின. பொறுமை இழந்த அவன்,



வாய் விட்டே கேட்டு விட்டான்.

''நானாட பொண்ஜாதியும், புள்ளயும் எங்கயன் உம்மா? ''ஓ... அதுகளா... அன்டைக்கே அந்த அனாத இல்லத்துக்கு அனுப்பீட்ட..." என மர்யம் கூற, ''உம்மா... மதினியப் பாக்க நீங்க அங்க போகல்லயா...? கொழந்தையும் கெடச்சி ஆறு மாசமிருச்சுமே...." என அவன் அவர்களைப் பற்றியே மீண்டும், மீண்டும் கேட்டபோது தாய் மர்யத்திற்குக் கோபமாக இருந்தது.

''எனத்தியன் மகன் நீங்க? வந்ததிலிருந்து அதயே கேட்டுக் கொண்டீச்சிய? அன்டைக்கே அதுகள தல முழுகி உட்டுட்ட. அவவும் அவட புள்ளயும் ! அத உடுங்கோ. அதுகளப் பெய்த்துப் பாக்க எனக்கு அவசியமில்ல..." எனத் தாய் கூறிய போது அதிர்ந்து நின்றான் தனயன்.

''வாப்பாட மௌத்துக்குப் பொறகு குடும்ப வண்டிய முழுக்க முழுக்க இழுத்துப் போனது நானாதான். அவரு மார்க்கப் பற்று உள்ளவரு அவரு ஒரு அனாதய முடிச்சது குத்தமா...? ஒரு தரம் மதினியப்பத்தி கேட்டெழுதிய போது அவ ஒரு தங்கம்டா பேருக்கேத்த ஸாலிஹான பொம்புள. அவவப் போல ஒரு நல்ல மனைவி இந்த உலகத்துல தாருக்குமே கெடச்சாது..." என எழுதியிருந்ததை நினைத்துப் பார்த்த போது பஸீலின் கண்கள் ஈரமாயின.

''உம்மா... அனாதைகள ஆதரிச்சிய ஊடு தான் ஊடுகள்ள சிறந்த தெண்டு ரஸூலுல்லாங்க செல்லீச்சியாங்க. நீங்க மதினிய நல்லாக நடத்தல்ல என்டிய்து எனக்கு வெளங்கீட்ட. உம்மா... நீங்க எனத்தச் சென்னாலும் நான் நாளைக்கு அங்க பெய்த்து மதினியையும், புள்ளயயும் பாத்துட்டு வரத்தான் போற....! என்று அவன் முடிவாகக் கூறிய போது,

''போற போக்கப் பாத்தா இவனே அவள கலியாணம் முடிச்சோனும் என்டு சென்னாலும் செல்லுவான்...." என ஐயப்பட்ட மர்யம், பேச்சைத் திசை திருப்பியவாளக,

''மகன் ... ஒங்களுக்கு நான் ஒரு பொண் பாத்தீச்சி. நல்ல குடும்பம் வசதியான ஆக்கள். பொண்ணும் ஜாதிப் பசுந்தான புள்ள..." என வர்ணித்துக் கொண்டு போனாள் மர்யம்.

''உம்மா அதுக்கெல்லாம் ஒன்டும் அவசரமில்ல. சொந்த நானாட பொண்ஜாதி மாப்புள மௌத்தாகி தனியா ஈச்சிய. அவருட புள்ள வாப்பா இல்லாம அனாதையா ஈச்சிய. இது இப்படி ஈச்சிய. நேரம் சல்லிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலியாணம் முடிச்சியத்துல நன்ம எனத்தியன் ஈச்சி?" இப்படி அவன் கேட்கும் போதே மகனின் எண்ணம் அவளுக்கு விளங்கி விட்டது.

''ஒங்களுக்கு எனத்தியன் பைத்தியமா புடிச்சீச்சி? நீங்க ஒரு டொக்டர் ஒங்கட அந்தஸ்துக்கு ஒரு அனாதய, ஒரு விதவைய தானா நீங்க முடிக்கோணும்.....? எனத் தாய் கோபத்தில் வெடிக்க,

''எனத்தியன் உம்மா பெரிய அந்தஸ்து...? எங்களப் பார்க்க அந்தஸ்துலயும், கண்ணியத்துலயும் கூடிய எங்க ரஸுலுல்லாங்களே மொதல் மொதல்ல அவங்கட இருபத்தஞ்சி வயசுல நாப்பது வயசான அதுகும் கல்யாணம் முடிச்சி விதவயான கதீஜா நாயகியத்தான் முடிச்சாங்க. அவங்க மௌத்துக்குப் பொறகு ஆயிஷா நாயகியத் தவிர அவங்க வாழ்வு கொடுத்தது விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் தான். அதனால நாங்க அவங்கட உம்மத்து என்டு சொல்லிக் கொண்டு அவங்க சுன்னத்தப் பின்பத்தாம இருச்சியதுல பெரும இல்லும்மா" என அவன் கூறிய போதும் மர்யம்,

''இவ்வளவு படிச்சும் ஒங்களுக்கு வெளங்கல்லயே! அவ ஒரு விதவ மகன்" என அழுத்தமாகக் கூறிய போது,

''உம்மா... ஒரு பொண்ணுக்கு ஒரு பொண்ணே எதிரியா இருச்சியதப் பத்தி நான் கவலப்படுகியன். இதச் செல்லக் கூடாதென்டு தான் நெனச்சன் நீங்க செல்ல வெச்சீட்ட. என்ன மன்னிச்சிக்கொங்கோ உம்மா... மதினிய விதவ என்டு ஒதுக்கிய நீங்களும் ஒரு காலத்துல விதவயா இருந்தத்த மறந்துட்டா? பொறகு நீங்க கலியாணம் முடிச்சல்லயா..? எங்களப் பெறல்லயா? என் வாப்பா ஒங்களக் கல்யாணம் முடிச்சதால தானே இந்த டொக்டர் உங்க பகுத்தல பொறந்தான். பாயிஸ் நானாட வாப்பா மௌத்தாப் போன நேரம் மூணு புள்ளைகளோட தவிச்சிக் கொண்டீந்த ஒங்களுக்கு வாப்பா வாழ்வு தராட்டி..." என அவன் தாயின் கடந்த காலத்தையும், நினைவு படுத்திய போது அவள் வாயடைத்துப் போனாள். சோகம் நிறைந்த தனது கடந்த கால்ததையும், தன்னை எல்லோரும் ஒதுக்கி ஓரங்கட்டிய போது பஸீலின் வாப்பா தைரியமாக முன்வந்து வாழ்வு தந்ததையும் நினைத்துப் பார்த்த போது அவளால் எதுவும் பேச முடியவில்லை. தன் இரு கரங்களாலும் முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள் மர்யம்.

தாயின் அழுகையக் கண்டதும் அவன் மனம் துணுக்குற்றது.

''உம்மா... நான் தவறாகப் பேசியிருந்தா என்ன மன்னிச்சிக்கொங்கோ"

'' என்ற அவன் தாயின் கரங்களைப் பற்றிய போது, அந்தக் கரங்களை 'எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டவள்,

''மகன்... ஒங்களப் பெத்ததுக்காக நான் மிச்சம் பெருமப்படுகியன். வாப்பாவப் போல தங்கமான கொணம் ஒங்களுக்கு இத்தின நாளா குருடாக இருந்த என்ட கண்ண நீங்க தொறந்திட்ட. ஏன்ட் மருமகளோட நான் நடந்த மொறகளை நெனச்சி இப்ப வெக்கப்படுகியன், வேதனப்படுகியன். இனியும் இந்த வூட்டுக்கு மருமகள் அவதான். மனுஷைத்தன்மய தொலச்சீட்ட எல்லாருமே அவங்கள மனுஷன் என்டு தான் செல்லிய. ஆனா நான் செல்லிய நீங்க தான் மனுஷன் மகன்.... ஒங்களப் போலயே எங்கட சமூகத்துல ஈச்சிய ஆம்புளைகள் சல்லீக்கும், சாமனுக்கும் வெலபோகாம ஸாலிஹாவைப் போல அனாதைகளுக்கும் விதவைகளுக்கும் வாழ்வு கொடுக்கோணும். இல்லாட்டி அவங்க பெருமூச்சுக்கெல்லாம் இவங்கதான் அல்லாகிட்ட பதில்செல்லவரும்...." என்று உணர்ச்சி பொங்க கூறிய தாயையே பார்த்துக் கொண்டிருந்தான் பஸீல்.

''ம்.... வாங்க மகன்... கார எடுங்க இப்பவே அங்க போவோம்..." என்று கூறியவள் உடைமாற்றிக் கொண்டு வந்து விட்டாள்.

அந்த வாகனம் மகிழ்ச்சியோடு துள்ளிக்கிகுதித்தபடி பெண்கள் அனாதை இல்லம் நோக்கி விரைகிறது.

*நன்றி: இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 20002*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிஞன் கண்ட கானல் நீர்...!

''ரீங்.... ரீங்.... ரீங்..'' வாசலில் தபாற்காரனின் மணியோசை கேட்கிறது. உள்ளேயிருந்து, வெளியே வந்த பரீதா அவன் கொடுத்த கடிதத்தைப் பெற்றுக் கொள்கிறாள். கடிதம் அவள் கணவனுக்குரியது,

''கடிதம் உங்களுக்குத் தான். இந்தாங்க'' என்று கடிதத்தை கணவனிடம் கொடுத்து விட்டு நகர முற்பட்டவளை,

'' அப்படியே என் மூக்குக்கண்ணாடியைக் கொண்டு வந்து தாம்மா...'' என்று கூறியவர்,

''ம்... யாருக்கிட்டயிருந்து கடிதம்...?'' என்று சிந்தித்தவர் கண்ணாடியை வாங்கி அணிந்தவராக அக்கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

கவிஞர் காதர் அவர்களுக்கு !

நீங்கள் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக கவிதைத் துறையில் ஈடுபட்டு வருவதோடு, சமுதாயத்திற்கு சிறந்த பல கவிதைகளைக் காணிக்கை யாக்கியுள்ளீர்கள். உங்களது பணிகளை கௌரவிக்குமுகமாக உங்களுக்கும், உங்களைப் போன்ற இன்னும் சிலருக்கும் எமது இலக்கிய அமைப்பு சிறந்ததோர் கௌரவத்தை அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. எனவே குறிப்பிட்ட எமது விழாவில் நேரடியாகக் கலந்து, நாம் தரும் கௌரவத்தைப் பெற்றுக் கொள்ளும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

கடிதத்தைப் படித்து முடித்த காதருக்கு தலை கால் புரியாத சந்தோசம். அந்தச் சந்தோசத்தின் பிரதிபலிப்பாக அவர் கண்களில் கண்ணீர் முத்துக்கள். அவருக்குப் பேசுவதற்கு நா எழவில்லை. சிரமத்தோடு அவர் குரல் தொண்டையிலிருந்து வெளி வந்தது.

''பரீதா... பரீதா... இங்க கொஞ்சம் வாம்மா..



''கூப்பிட்டீங்களா... என்ன விஷயம்...? யாருக்கிட்டேயிருந்து கடிதம்?'' வினாத்தொடுத்தாள் மனைவி பரீதா.

''பரீதா.... கொழும்புல இருக்கிற ஒரு இலக்கிய அமைப்பு இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கு. என்னோட இலக்கியப் பணியை கௌரவித்து விருது கொடுக்கப் போறாங்களாம்...'' விபரித்தார் காதர். விருதென்றா என்னங்க...? விபரம் புரியாதவளாகக் கேட்டாள் பரீதா

''இந்த மாதிரி விழாக்களில் தான் எழுத்தாளர்கள், கவிஞர்கள். கலைஞர்களுக்குப் பட்டம் கொடுப்பாங்க. ஞாபகச்சின்னமாக விருது வழங்கி, பொற்கிழி என்கிற பணமுடிப்பு எல்லாம் கொடுப்பாங்க. பொன்னாடை போர்த்துவாங்க. '' விபரித்தார் காதர்.

''அப்படியின்னா... இந்த விழாவுல ஓங்களுக்கெல்லாம் பணமும் கிடைக்கப் போகுது, அப்படித்தானே!'' ஆர்வத்தோடு கேட்டாள் பரீதா

''ஆமாம்மா... இப்போதெல்லாம் கலாசார அமைச்சுக்கள் போன்ற அமைப்புகள் குறைந்தது ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாவாவது கொடுப்பாங்க. பரீதா... இந்தக் கதை, கவிதையெல்லாம் காலத்தின் கண்ணாடிகள். ஒரு சங்கதிய அடுத்துவார சந்ததிகளுக்குத் தெரிவிக்கிற பணியை இந்தக் கவிஞர்கள், எழுத்தாளர்கள் செய்றாங்க. அவங்கட பணி, ஒரு சமுதாயப் பணி. இப்படி சமுதயத்துக்குச் சேவை செய்யும் இந்த எழுத்தாளர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவே இருக்கிறாங்க. அதனால தான் இந்த எழுத்தாளர்கள கைதூக்கி விடுற கடமை, அவங்களுடைய புத்தகங்கள அச்சிட்டு உதவுறதெல்லாம் சமூகத்தோட, சமூக அமைப்புகளோட கடமை அதோட வறுமை நிலைல இருக்கிற என்னப் போன்றவர்களுக்கு இப்படியான விழாக்கள் மூலம் பண உதவி செய்றது. எழுத்தாளர்களுக்கு சமூகமும், சமூக அமைப்புக்களும் செய்யும் ஒரு கௌரவமாகும் '' என நிண்டு கொண்டிருந்தது. காதரின் பேச்சு. அவரின் பேச்சில் எழுத்தாளர்களுக்கு சமூகம் உதவ வேண்டும் என்ற ஆதங்கம் நிறைந்திருந்தது. அவர் பேசியதில் பாதியாவது பரீதாவுக்குப் புரிந்ததோ இல்லையே தெரியவில்லை. அவள் மீண்டும்,

''அப்போ உங்களுக்குப் பத்தாயிரம் ரூபாவாவது கட்டாயம் கிடைக்கும் அப்படித்தானே!'' கேட்டு வைத்தாள்.

''அதிலென்னம்மா சந்தேகம்...? இவ்வளவு தூரம் எங்களையெல்லாம் அழைத்து விழாவைக்கிறவங்க சும்மா வெறுங்கையோட எங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவாங்களா....?" அவர் பேச்சில் நம்பிக்கை ஒளி வீசியது.

காதருக்கு இப்போது அறுபது வயதிருக்கும். பாடசாலைக்காலத் திலிருந்தே பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கிய அவர், காலப் போக்கில் கவிதைத் துறையில் காலூன்றத் தொடங்கி விட்டார்...

நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதியிருக்கின்ற அவர் எழுத்துத் துறையில் கால் நூற்றாண்டையும் தாண்டி விட்டார். இருப்பினும் எந்தப் பட்டத்தையும், விருதையும் அவர் பெறவில்லை. சிலரைப் பொறுத்த வரையில் எந்த அமைப்புக்கள் விருது, பொற்கிழி வழங்கினாலும் அத்தனையும் அந்தச் சிலருக்கே கிடைத்து விடும். எழுத்துத்துறையில், கலைத்துறையில் குறுகிய காலம் ஈடுபாடு காட்டி வருபவர்கள் கூட பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுக் கொள்கிறார்கள். யார் யார் விருது பெற தகுதியுடையவர் என்ற விவஸ்தையே இல்லாமல் யார் யாரோவெல்லாம் விருதுகள் பெற்று பட்டங்கள் சுமக்கிறார்கள். இந்த நிலையில் காதரைப் போன்ற கவனிக்கத்தக்க கவிஞர்கள் புறக்கணிக்கப்படுவது கவலையான விசயம் தான்.

காதர் எழுத்துத்துறையில் ஈடுபட்டிருந்தாலும் அவர் அண்மைக் காலம் வரை கடைகளில் கணக்கெழுதும் கணக்குப் பிள்ளையாகத் தான் வேலை செய்து கொண்டிருந்தார். அவரை வாட்டி வதைக்கின்ற ஆஸ்மா நோய் காரணமாக சில வருடங்களாகவே அவர் வீட்டில் முடங்கி இருக்கின்றார்.

காதர் - பரீதா தம்பதிக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள் தான் இருக்கிறார்கள். இருவருமே திருமணம் முடித்து குழந்தை குட்டிகளோடு வாழ்கிறார்கள். இப்போது வீட்டில் காதரும் மனைவியும் மட்டும் தான் உள்ளார்கள். அரசாங்கம் தரும் 'பின்படி' எனும் பிச்சைப் பணத்தாலும், உணவு முத்திரையின் உதவியுடனும், மனைவியின் கடையப்பம் சுடும் வேலையாலும் தான் அவர்களின் ஜீவனோபாயம் சிரமத்தோடு போய்க் கொண்டிருக்கிறது.

பரீதா அதிகம் படித்தவளல்ல, இருந்தாலும் பண்பு நிறைந்தவள். அவள் ஓர் இங்கிதம் நிறைந்த இல்லத்தரசி மட்டுமல்ல, நம் கவிஞரின் உள்ளத்து அரசியும் தான்.

காதர் சிறந்த கவிஞர் ஒருவருக்குரிய தகைமையை, கௌரவத்தைப் பெறப் போகிறார் என்றால் அந்த வெற்றிக்குப் பின்னால் இருப்பவள் நிச்சியம் மனைவி பரீதா தான்.



அவர் எழுதும் போது அவள் அவரின் மனநிலையை என்றும் குழப்பியதேயில்லை. தன்னால் முடிந்தவரையில் அவருக்கு உதவியாக இருப்பாள். அவர் விழித்திருந்து எழுதும் போதெல்லாம் அடிக்கடி 'பிளேன்டீ' போட்டுக் கொடுப்பாள். எழுதிக் கொண்டிருக்கும் போது வீட்டில் உப்பில்லை, புளியில்லை என்று கூறிக் கடைக்கு விரட்ட மாட்டாள்.

பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும் போது பல நேரங்களில் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே அவர்கள் திண்டாடியதுண்டு, வறுமைக் கோட்டுக்கு மிகவும் கீழே வாழ்ந்த அத்தகைய சந்தர்ப்பங்களில் கூட அவள்,

''இங்க பாருங்க... இந்தப் பாழாப்போன எழுத்த விட்டுட்டு ஏதாவது உருப்படியா செய்யுங்க. இந்த எழுத்து சோறு போடுமா....? உங்களக் கட்டிக்கிட்டு நான் என்ன சுகத்தக் கண்டேன்? '' என்றெல்லாம் கணவனைத் திட்டித்தீர்த்ததோ மனதை நோகச் செய்ததோயில்லை. அதனால் தான் எந்த தொந்தரவுக்கும், நச்சரிப்புக்கும் ஆளாகாமால் அவரால் தொடர்ந்து யாதர்த்தமாக எழுத முடிந்தது.

இருபது வருடங்களுக்கு முன் பல நூறு கவிதைகளுக்குச் சொந்தக் காரனான காதரிடம் அவரின் அன்பு வாசகர்கள் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிடும்படி அன்புக்கட்டளையிட்ட போதெல்லாம் அவர் அடிமனதில் துளிர் விட்டிருந்த அந்தப் புத்தகம் வெளியிடும் ஆசை நாளடைவில் உள்ளமெல்லாம் வியாபித்தது. எப்படியாவது ஒரு தொகுதியை வெளியிட்டு ஆத்ம திருப்தியை அடைய அவர் மனம் படாதபாடு பட்டது. இருப்பினும் பணத்துக்கு என்ன பண்ணுவார்? அவரின் ஆசையைப் புரிந்து கொண்ட பரீதா அவளின் கழுத்தில் தொங்கிய தங்க மாலையை கழற்றிக் கொடுத்து ''இந்தாங்க... இத விற்று புத்தகத்த அச்சிடுங்க..." என்றவளின் கரங்களைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டவர்,

''பரீதா... புத்தக வெளியீட்டு விழாவுக்குப் பிறகு பணம் கிடைக்கும். உன் நகையை சீக்கிரமே வாங்கித் தந்துடுவேன்," என்று கூறி விட்டு, நகையை விற்றுக் கிடைத்த பணத்தை முற்பணமாகக் கொடுத்து புத்தகத்தை அச்சிட்டு விட்டார்.

புத்தக வெளியீட்டு விழா நடைபெற்ற போது எதிர்பார்த்தளவு கூட்டம் வந்தும் சேரவில்லை. விழாவுக்கு வந்தவர்கள் கூட பத்தையும் இருபதையும் தந்து புத்தகங்களை வாங்கினார்களே தவிர யாரும் தாராளமாகத் தந்துதவவில்லை. முதற் பிரதியை வாங்கியவர் கூட கவரில் ஒரேயொரு நூறுரூபாய் தாளை வைத்திருந்தார். விழாவுக்கு வந்த பிரதம அதிதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வாதி எந்த அன்பளிப்புமின்றியே புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு போய் விட்டார். சிறப்பு பிரதி வாங்கிய யாரோ ஒரு கஞ்சப் பிரபு பெயரிடப்படாத வெற்றுக் கவரை வைத்துவிட்டு புத்தகத்தைப் பெற்றிருந்தார்.

இப்போதெல்லாம் பத்தாயிரம் வரை கொடுத்து முதற் பிரதி வாங்கும் புரவலர்கள் போன்று அன்று எந்த வள்ளலும் இருக்கவில்லை. எனவே காதர் போன்ற ஏழை எழுத்தாளர்கள் தாம் வெளியிட்ட புத்தகங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழ வேண்டிய நிலை தான் அன்றிருந்தது.

வெளியிட்ட புத்தகங்களின் சிறு பகுதியை புத்தகக் கடைக்காரர்களைத் தேடிப் பிடித்து ஒருவாறு விற்பனைக்கு விட்டார். இருப்பினும் தன்னுடைய கால் செருப்பு தேய்ந்து போகும்வரை அவர்களின் கடைப்படிகளில் ஏறியிறங்கிப் போய் பணத்தைக் கேட்டும் பலன் பூஜ்யம் தான். வெளியிட்ட புத்தகங்களில் பாதிக்கு மேல் பெட்டி பெட்டிகளில் இன்னும் கட்டிலுக்குக் கீழ் தூசிபடிந்த நிலையில் நித்திரை கொள்ளும் நிலையைக் காணலாம்.

புத்தகம் வெளியிடப் போய் மனைவியின் நகையை இழந்ததும், அச்சகத்திற்குக் கடன்காரனாகியதும் தான் மிச்சம். பாவம் காதர் பலமுறை முயன்றும் இன்று வரை மனைவியின் வெறுங்கழுத்தில் ஒரு மாலையை வாங்கிப் போட அவரால் முடியவில்லை.

இந்த விழாவுக்குரிய கடிதம் கண்டதிலிருந்து அவருக்கு ஒரே சந்தோசம். அவரின் வயதில் ஐந்து வருடங்கள் குறைந்து விட்டவர் போல் உற்சாகமாகக் காணப்பட்டார்.

‘‘எப்படியும் விழாவுல எனக்குப் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாமல் கிடைக்கும். அந்தப் பணம் கிடைத்தவுடனேயே பரீதா கழுத்தில் ஒரு தங்க மாலையை வாங்கிப் போடனும். இப்போதே இத அவளுக்கிட்டச் சொல்லக் கூடாது. பாவம் அவள். நான் இந்தளவுக்கு உயரக் காரணமே அவள் தானே! என மனதிற்குள் கூறிக் கொண்டார் காதர்.

விருது விழாவுக்குரிய நாள் நெருங்கியது. இந்தச் செய்தியை கண்டியிலிருக்கும் மகனுக்கும், கன்னத்தோட்டையில் இருக்கும் மகளுக்கும் தெரிவித்து விட்டார்கள். தந்தைக்குக் கிடைக்கப் போகும் கௌரவத்தை பிள்ளைகளும் கண்ணாரக் காண வேண்டும் என்ற ஆசைதான் அந்த ஏழைப் பெற்றோருக்கு.

விழாவுக்கு இன்னும் ஒரு கிழமையே உள்ளது. நீண்ட காலமாகவே



காதர் தம்பதியினர் பெருநாளைக்குக் கூட புது உடுப்புகள் உடுத்ததில்லை. இருந்ததைக் கழுவியுடுத்தே அவர்கள் அந்தந் திருநாட்களைக் கடத்தி விடுவார்கள். இந்த நிலையில் விழாவுக்குப் போகவென புது உடுப்பு எதுவும் காதரிடம் இல்லை. இருக்கும் ஒன்றிரண்டும் நிறம்மாறிப் போய் மடிப்பும், சுருக்கும் நிறைந்தவை தான்.

பகல் சமைத்த உணவில் எஞ்சியதை இருவரும் வழித்துத் துடைத்துச் சாப்பிட்டபின் படுக்கைக்குப் போனார்கள். கணவன் காதரை இத்துப்போன பெட்சீட்டால் போர்த்தி விட்ட பரீதா,

‘‘என்னங்க... கொழும்பில நடக்கிற விழாவுக்கு நாலு பெரிய மனிதர்களும் வருவாங்க. நீங்க வேறு மேடைக்குப் போறீங்க. எனக்கென்னவோ நீங்க நல்லா உடுத்து புது மாப்பிள்ள போல அழகாப் போகனமுன்னு ஒரே ஆசை. நான் கடையப்பம் வித்து மிச்சம் பிடித்த காசு ஐநூறு ரூபாய் இருக்கு. இன்னும் ஒரு ஐநூறு ரூபாய் அடுத்தவீட்டு ஆமினாக்கிட்ட கடனா வாங்கி புது சேட்டும், ரவுசரும் தச்சா நல்லது” என்று அவள் கூறிய போது.

‘‘அதுசரிம்மா மாவனல்லயிலிருந்து கொழும்புக்குப் போறதென்றால் வேனுக்கும் ஒரு ரெண்டாயிரம் தேவைப்படுமே ! அதுல வேற உடுப்பும் வாங்கினா ரொம்ப வேணுமே...! என இழுத்தார் காதர்.

‘‘புள்ளகளும் வாரதால எப்படியும் வேன் ஒன்ற புக் பண்ணிக்கொண்டு தான் போகணும். பரவாயில்ல உங்களுக்குக் கிடைக்கிற பணத்தால் கடனக் கொடுக்கலாம். ‘‘என மனைவி கூறியது நியாயமாகப் படவே அதற்கு மேல் அவர் எதுவுமே பேசவில்லை.

நாட்கள் நகர்ந்தன காதரின் பயணத்துக்காக மூவாயிரம் ரூபாவை ஆமினாவிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொண்டாள் பரீதா. காதருக்குரிய உடுப்புக்கள் தயாராகி விட்டன

காதரின் மகனும், மகளும் குடும்ப சகிதம் முதல் நாளே வீட்டுக்கு வந்து விட்டார்கள். தமது தந்தைக்குக் கிடைக்கும் கௌரவத்தை விட அவருக்குக் கிடைக்கப் போகும் பணத்தின் மீதே அவர்கள் கவனம் படிந்திருந்தது.

‘‘இங்க பாரு இந்த மாதிரி விருது விழாக்கல்ல ஆளுக்குப் பத்துப் பதினைந்து கொடுப்பாங்க வாப்பாட கையில காசு கிடைத்ததும் ஒன்னோட நானா காரியத்த சாதிக்க முன்னால நீ முந்திக்கணும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாயிரமாவது இருந்தாத்தான் ஏன்ட தொழில நல்லாச் செய்யலாம். மறந்திடாதே! ''என வீட்டில் வைத்தே காதரின் மருமகன் தன் மனைவியிடம் சொல்லி விட்டான்.

காதரின் மருமகள் மாமி வீட்டுக்குக் கிளம்பும் போதே தன் கணவனிடம் ''ஒரு பயணம் போறதுக்கே காதுல கழுத்துல எதுவும் இல்ல. இந்தப் போலி நகைகளைச் சுமந்து கொண்டு போகனுமென்றது என்னோட தலையெழுத்து..! என முணுமுணுக்கத் தொடங்கி விட்டாள்.

''இந்தா பாரு சும்மா தொணதொணக்காதே! வாப்பாவுக்குக் கிடைக்கிற பணத்துல பாதிய எப்படியும் பிடுங்கிடுவேன். அப்புறம் பாரேன் உன் கழுத்தில புதுத் தங்கச் செயின் மினுங்கும்...! '' என்று அவன் கூறிய போது அவள் முகம் பிரகாசமடைந்தது.

பயணத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகி விட்டன. நாளை விடிந்தால் பயணம் அன்றெல்லாம் வீட்டில் ஒரே கலகலப்பு. இரவு சாப்பாட்டுக் குப் பின் எல்லோரும் தூங்கச் சென்று விட்டார்கள். நாளைய பயணத்திற்கான உடுப்புகளைத் தயார் படுத்தினாள் பரீதா. தன்னிடமுள்ளதில் நல்ல சேலை ஒன்றை அதுவும் அடுத்த வீட்டு ஆமினா சவூதியில் இருந்து வந்த போது அன்பளிப்பாகத் தந்த நீல நிறச் சேலையை எடுத்து வைத்தாள் பரீதா.

எல்லோரும் தூங்கி விட்டார்கள். காதருக்கும் மனைவிக்கும் தூக்கமே வரவில்லை. நாளைய விழாக்காட்சிகள் அவர் மனதில் விரியத் தொடங்கின. அதைப்பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நான் கொழும்புக்குப் போறது ஏன்ட வாழ்க்கைல இது ரெண்டாவது தடவை. இருபது வருஷங்களுக்குப் பிறகு போகப்போறேன். ரொம்ப சந்தோசமாக இருக்குங்க.'' பச்சைக் குழந்தை போன்று பேசிக் கொண்டிருந்தாள் பரீதா.

''எனக்குக் கிடைக்கப்போற கௌரவத்தை நீயே நேரில் வந்து காணப்போறது தான் எனக்கு ரொம்ப சந்தோஷமான விஷயம். அன்பான பொறுமைசாலியான உன்ன அடையப் பெற்றது தான் ஏன்ட வாழ்க்கைல பெரிய பேறு." என்று மனமுருகக் கூறிய காதர் பரீதாவின் ஒட்டி உலர்ந்த கன்னங்களை ஆதரவோடு தடவிக் கொடுத்தார்.

பொழுது புலர்ந்தது. பகலுணவை நேர காலத்தோடயே முடித்துக் கொண்ட அவர்கள் பயணத்திற்கு ஆயத்தமாகத் தொடங்கினார். பரீதாவும் அந்த நீல நிறச்சேலையை அணிந்து கொண்டாள். வாகனமும் வீட்டுக்கு முன் வந்து நின்று விட்டது. அப்போது தான் வெளியில் இருந்து உள்ளே நுழைந்த மகன் தாயை நோக்கி,

''உம்மா நீங்களும் போகப் போறீங்களா....? என்று கேட்க,

''ஆமாப்பா..." என்று தாய் கூற,

'' உம்மா...." நீங்க வீட்டுல இருங்க. பிள்ளைகளயெல்லாம் அங்க கூட்டிப்போக முடியாது. எல்லாரும் வாந்தி எடுப்பாங்க. இந்த மாதிரி இடங்களுக்குச் சின்னதுகள் கூட்டிப் போறதும் நல்லதில்ல. அதனால நீங்க வீட்டில இருந்து பிள்ளைகளப் பார்த்துக் கொண்டாப் போதும்...." என மகன் கூறக்கூற பரீதாவின் இதயத்தில் இடி விழுந்தாற் போல் இருந்தது. காதரும் மகனின் பேச்சால் அதிர்ச்சியுற்று கற்சிலையாகிப் போனார்.

'மகன்...உம்மா கட்டாயம் போக வேணும். அவளுக்கும் ஆசை தானே ! எனக் காதர் கூறிய போது மகள் குறுக்கிட்டு,

''வாப்பா... உம்மா அங்க போறதால என்ன பலன்...? அவவுக்கு என்ன விளங்கப் போகுது....? அவ வீட்டுல புள்ளைகளோட இருக்கட்டும்..!" என்று கூறிய போது அந்தத் தம்பதியர் இடிந்து போனார்கள். மகளின் பேச்சு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதாக இருந்தது பரீதாவுக்கு.

''பரவாயில்ல... நான் வீட்டிலேயே இருக்கிறன். எல்லாரும் போயிட்டு வாங்க..." வெடித்துச் சிதறத் தயாராகிய அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூறினாள் பரீதா. அவளின் உயர்ந்த உள்ளத்தை நினைத்து உருகி நின்றார் காதர்.

''தாயி... நீ இல்லாத விழா எனக்கு விழா இல்ல. என் முன்னேற்றத்து க்குக் காரணமானவளே நீ தாம்மா. உன் அருமை உன் பிள்ளைகளுக்குத் தெரியல்ல. வேற நேரமாயிருந்தா நல்லா நாலு கேள்வி கேட்டிருப்பேன்... இப்போ அதுக்கு வாய்ப்பில்லம்மா...! '' என உள்ளத்திற்குள் அழுது தீர்த்தார் காதர்.

எல்லோரும் பயணப்பட்டு விட்டார்கள். பரீதா உடுத்திருந்த சேலையைக் களைந்து விட்டு பழையதை அணிந்து கொண்டாள். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. மனம் லேசாகும் வரை அழுதுதீர்த்தாள் பரீதா.

இரவு பத்து மணியைத் தாண்டியிருக்கும். வீட்டின் முன் வாகனம் வந்து நிற்கிறது. அதிலிருந்து நடைபிணமாக இறங்கினார் காதர். அவரின் கைகளில் பொன்னாடை ஒன்றும் சான்றிதழ் ஒன்றும் காணப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மகன் உள்ளே நுழையும் போதே கத்திக் கொண்டே வந்தான்.

‘‘விழாவாம்... விழா.......பெரீய்ய விழா பிச்சக் கார விழா ...... இவ்வளவு தூரத்திலிருந்து செலவழித்துப் போனதுக்கு ஒரு பொன்னாடையும், ஒரு கடதாசியும்...”

மகனின் கத்தலிலிருந்தே கணவனுக்குப் பணமுடிச்சு எதுவும் கிடைக்க வில்லை என்பது அவளுக்குத் தெளிவாகி விட்டது. அதற்காக என்ன பண்ண முடியும்...? இருந்தாலும் பணத்தை நம்பிப் பெற்ற கடன் பணம் மூவாயிரமும் அவளைப் பயமுறுத்தியது.

பாவம் காதர் குறைந்தது பத்தாயிரமாவது கிடைக்கும் என கடைசி வரை நம்பியிருந்தார் அவர். அந்த நம்பிக்கை வீணாண போது அவரால் தாங்க முடியவில்லை. ஏமாற்றம் நிறைந்திருந்த நெஞ்சோடு அவரால் அன்றிரவு தூங்கவே முடியவில்லை.


‘‘பரீதா... வீணாக மூவாயிரம் ரூபாக் கடன்பட்டுட்டோம். அந்தக் கடன அடைக்க எத்தன வருஷம் போகுமோ? இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தா அந்த விழாவுக்குப் போகாமலே இருந்திருப்பேன்...!” என்று அவர் உடைந்த உள்ளத்தோடு கூறிய போது,

‘‘சரி விடுங்க கவலப்படாதீங்க... அந்த கடன நான் எப்படி யாவது கடையப்பம் வித்து அடைப்பேன்” என பரீதா கூற ,

‘‘பரீதா... உனக்குத்தான் எவ்வளவு பெரிய மனசு? இந்த நிலையிலும் கலங்காம சர்வ சாதாரணமா உன்னால எப்படியம்மா இருக்க முடியுது..? உனக்கு தங்க மாலை வாங்கணும் என்ற ஆசையை உன்கிட்டச் சொல்லா மலே இருந்துட்டேன். இத்தனை காலமும் உன் வெறும் கழுத்தப் பார்த்ததை விட இப்போ அந்த வெறுமையான கழுத்தப் பார்க்கிறப்போ என்னால தாங்க முடியலம்மா....” என்று மனதிற்குள் அழுது கொண்டிருந்த அவரால் அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஓர் ஆண்மகனாக இல்லாமல் ஓர் மனிதாபிமானமுள்ள கவிஞராய், கணவராய் தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழத்தொடங்கினார் காதர்.

*இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பவள விழா சிறுகதைப் போட்டியில் சிறந்த கதையாகத் தெரிவு செய்யப்பட்டு 2001ல் தேசிய சேவையில் ஒலிபரப்பாகியது.*





# ஒரு பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுகிறது....!

இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட முஅத்தினப்பா பள்ளி வாசல் ஓய்ந்ததும் தனது படுக்கையில் சாய்ந்து கொள்கிறார். அவருக்கு உறக்கமே வரவில்லை. எப்படி வரும்? ஹஜ்காலம் நெருங்கிவிட்டதல்லவா! எனவே அந்தப் புனித ஹஜ் பற்றிய நினைவுகளால் மனம் நிறைந்திருக்க, கண்கள் உறங்க மறுத்தன. இப்போதெல்லாம் பள்ளிவாசலிலே ஹஜ்பற்றிய குத்பாக்களையும், உரைகளையும் கேட்கும் போதெல்லாம் அவர் மனம் தவியாய்த் தவிக்கும். ஏக இறைவனின் புனித கஃப்பாவைத் தரிசிக்க வேண்டும் என மனம் துடியாய்த் துடிக்கும். பல வருடங்களாகவே இந்த ஹஜ் பற்றிய ஆசை அவரை அலைக்கழித்துக் கொண்டேயிருக்கிறது. இந்தப் புனிதப் பயணத்திறகாக வசதிவாய்ப்புக்கள் எதுவுமே இல்லாத அவர், தனது ஆசை நிறைவேறக் கூடியதா என நினைத்தாலும், மனம் மட்டும் அந்த நினைவுகளிலிருந்து விடுபடத் தயாராக இல்லை. இப்படியே சிறிது நேரத்தில் உறங்கி விடுகிறார் அவர். தஹஜ்ஜத் (நடுநிசி) வேளையில் விழித்துக் கொண்ட வர், வுளுச் செய்து வந்து தஹஜ்ஜத் தொழுகையில் ஈடுபடுகிறார்.

‘‘யா அல்லாஹ்.... இப்ப ஒன்ட அடியார்கள் ஹஜ்ஜுக்குத் தயாராகிக் கொண்டீச்சியாங்க. ஒன்ட மாளிகையக் காணோனும் என்ட ஆசைய நீ அறிஞ்சவன். ரஹ்மானே...! கருணையுள்ளவனே...! அந்தப் புனிதமான கஃபாவக் காணிய பாக்கியத்தையும், ஹஜ்ஜுப்பாக்கியத்தையும் எனக்குத் தந்துடு நாயனே! ஹஜ்ஜுக்குண்டான பணவசதி வாய்ப்புக்கள் எனக்கிட்ட இல்ல. இது ஒனக்குத் தெரியும். இந்த வசதியெல்லாம் துனியா மக்கள்ட பார்வைக்கு ஒரு காரணமாக ஈச்சேலும். ஆனால் நீ விரும்பினா இந்த நிலையிலே என்ன அந்த எடத்துக்கு அனுப்ப ஒன்னால ஏலும். அதுக்கு நீ சக்தியுள்ளவன். ஏன்ட ஹாஜத்த நிறைவேத்த ஒன்னால முடியும். அதுக்காக நான் ஒன்ட அடியார்கள் தாருகிட்டயும் வாய் தொறந்து கேக்க மாட்டேன். என்னப் படச்ச ஒனக்கிட்டத்தான் மன்றாடிக் கேக்கிய. அந்தப் பாக்கியத்தை எனக்குத் தா நாயனே! ‘‘ என அந்தத் தனிமை வேளையில் அல்லாஹ்விடம் அழுது மன்றாடினார் முஅத்தினப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஊர்ப் பள்ளிவாசலில் வேலை பார்க்கும் முஅத்தினப்பாவுக்கு இப்போது அறுபத்தைந்து வயதிருக்கும். முப்பது வருடங்களாக அதே பள்ளிவாசலில் பணிபுரியும் முஅத்தினப்பா அந்த ஊர் மக்களின் இன்ப, துன்பங்களில் கலந்து கொள்வதால் அவர்களோடு இரண்டறக் கலந்து விட்டார். இருப்பினும் அந்த மனிதர்களில் யாருமே அவரைப்பற்றி, அவரது வறுமை நிலையைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. கைகொடுத்துதவவும் இல்லை. பள்ளி வாசல் வேலைகளோடு, ஆடு, கோழி அறுத்தல் மையித்துக் குளிப்பாட்டுதல் போன்ற ஊரார் வேலைகளில் ஈடுபடும் அவருக்கு சம்பளம் என்னவோ மூவாயிரம் ரூபாய்தான். அந்தப் பணத்தில் அவரும் மனைவி மக்களும் வாழ்க்கையை ஓட்டுவதற்காக ஒரு போராட்டமே நடத்த வேண்டியிருக்கிறது. முப்பது வயதைத் தாண்டியும் இன்னுமே திருமண வாழ்கவைச் சந்திக்காத மகள் வேறு.

பள்ளிவாசல் நிர்வாகத்தினரும், ஊராரும் அவரை அழுக்கைத் தின்னும் ஒரு காகமாக நினைக்கிறார்களே தவிர, அவரும் ஒரு மனிதர், அவருக்கும் ஒரு குடும்பம் உண்டு என்பதை நினைத்துப் பார்ப்பதேயில்லை. ஒரு நேரம் சாப்பிட்டால் மறுநேரம் பட்டினி கிடக்க வேண்டிய வறுமை நிலையில் அவர் குடும்பம் தள்ளாடுகிறது. நோன்பு காலங்களில் வந்து சேரும் ஸக்காத் பணங்களைக் கொண்டு அவர்கள் அந்த ஒரு மாதத்திலும் சந்தோசமாக உண்டு, நோன்பு இருப்பார்கள். அதன் பிறகு கிடைக்கும் பித்ரா அரிசி சில வாரங்களைக் கழிப்பதற்குப் போதுமாக இருக்கும். இப்போது ஹஜ் காலம் வந்து விட்டது. ஹஜ்ஜின் பெயரால் வந்து சேரும் உழ்ஹிய்யா (குர்பான் இறைச்சியை) காயவைத்துப் பதப்படுத்தி சில வாரங்களைச் சமாளிப்பார்கள். இதைத்தவிர ஏனைய காலங்களில் உணவுக்குக் கஷ்டமிருக்கும்.

நாட்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. அன்று ஒரு வெள்ளிக் கிழமை ஜும்ஆவுக்காக மக்கள் பள்ளிவாசலில் நிறைந்திருந்தார்கள். அன்றும் கதீப் ஹஜ்ஜைப்பற்றியே பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

''அல்லாஹ்வின் நல்லடியார்களே! வசதியும் வாய்ப்பும் உள்ள அனைவர் மீதும் ஹஜ் கடமையாகும்... வசதியிருந்தும் இக்கடமையைப் புறக்கணித்துவிட்டு மரணிப்போர் எஹூதியாகவோ, நஸாராவாகவோ மரணிக்கட்டும் என கண்மணி ரதூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் அல்லாஹ் புனித க'பாவிலே ஒரு நாளைக்கு நூற்றிருபது ரஹ்மத்துக்களை இறக்குகிறான். இதில் அறுபது ரஹ்மத்துக்கள் தவாபு, நன்மை செய்யக் கூடியவர்களுக்கும் நாற்பது றஹ்மத்துக்கள ஏனைய வணக்கங்கள் புரியக் கூடியவர்களுக்கும், மற்ற இருபது ரஹ்மத்துக்களும் எந்தவித அமலும் செய்யாமலே அந்த அல்லாஹ்வுடைய ஆலயத்தைக் கண்குளிரப் பார்த்துககொண்டிருப்பவர்களுக்கும் வழங்கப்படும்....'' என தொடர்ந்து பேசிக்கொண்டே போனார் கதீப். அவரின் உரையைக் கேட்கக் கேட்க முஅத்தினப்பாவின் உடல் புல்லரித்தது. மனம் விம்மியது. ''இந்தக் கண்களுக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்குமா.....?'' என நினைத்தபோது, அவர் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் விழுந்து சிதறின. முஅத்தினப்பா உணர்ச்சிப் பிழம்பாக உருகி நிற்பதை இரண்டு கண்கள் கவனித்துக் கொண்டேயிருந்தன.

சில தினங்கள் மலர்ந்து மடிந்தன. ஹஜ்ஜுக்குப் பயணப்படும் காலம் மிகவும் அண்மித்து விட்டது. ஊரில் வசதிபடைத்த பலரும் பயணத்திற்காகத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

அன்று பள்ளிவாசலில் குத்பாவுக்குப் பின் ஒரு அறிவித்தல் வாசிக்கப்பட்டது. ''இம்முறை ஹஜ்பயணம் மேற்கொள்ளப்படுபவர்களின் வசதி கருதி உலமா சபையால் ஹஜ் பற்றிய விளக்கங்களுடன் கூடிய பயான் நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஊர்ப்பாடசாலையில் நடைபெற இருக்கிறது. ஆகவே இந்த நிகழ்ச்சியில் ஹஜ்பயணம் மேற்கொள்ள இருப்பவர்கள் மட்டுமன்றி, ஹஜ்செய்ய நாட்டமுடையோர், எவரும் வந்து கலந்து கொண்டு பயன் பெறலாம்'' என்ற அறிவித்தல் வாசிக்கப்பட்டதும் முஅத்தினப்பாவின் உள்ளம் விம்மியது... கண்கள் கண்ணீரை வடித்தன.

''ஹும் அல்லாட நாட்டமிருந்தா எனக்கும் அந்தப் பாக்கியம் கெடச்சும்...! எனத் தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டார் முஅத்தினப்பா.

சில தினங்கள் கழிந்தன. ஹஜ்ஜுக்குப் போகும் பலரும் அப்பாவிடம் வந்து ஸலாம் சொல்லி முஸாபஹாச் செய்து கொண்டு போனார்கள் ''ஏன்ட மௌத்துக்கு முன்னால எனக்கும் அந்தப் பாக்கியம் கெடச்சதுக்கு துஆச் செஞ்சி கொங்கோ.....'' என எல்லோரிடமும் வேண்டிக் கொண்டார் முஅத்தினப்பா.

அன்றிரவு பள்ளிவாசல் ஓய்ந்ததும் படுக்கையில் சாய்ந்து கொண்ட முஅத்தினப்பா சற்று நேரத்தில் தூங்கி விட்டார். வழமை போல் நள்ளிரவில் விழித்தெழுந்த அவர், வுளுச் செய்து கொண்டு வந்து தஹஜ்ஜத் தொழுகையில் ஈடு பட்டார். தொழுகையில் நீண்ட நேரமாகப் பிரார்த்தித்தார்.

''யா அல்லா.. இப்பவும் கேக்கியன்...! ஒன்ட மாளிகையப் பாக்கிய பாக்கியத்தத் தர ஒன்னால ஏலும். ஏன்ட ஆயுசுல ஓரே ஒரு தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அந்த சந்தர்ப்பத்த தா நாயனே! ஒனக்காக... உன் பள்ளி வாசல்ல மிச்சம் வருஷமாக வேல செய்த இந்த ஏழைட, அடிமைட ஹாஜத்த தட்டிக் கழிச்சாம ஏன்ட துஆவ ஏத்து கிருப செய் நாயனே! '' என அழுதபடி பிரார்த்தித்துக் கொண்டிருந்தார் முஅத்தினப்பா. யாருமில்லாத அந்தத் தனிமையான நேரத்தில் அல்லாஹ்விடம் அழுது மன்றாடியபடி இருந்த அவரின் சிந்தனையை ''கிரீச்...'' என்ற கேட் திறபடும் சத்தம் கலைக்க,

''தாரோ.... சுபஹுத் தொழுகைக்கு வார போல.... இது எனக்கும் அல்லாக்கும் எடையில இருச்சிய ரகசியம் இத தாரும் காணப்படாது...'' என நினைத்தவர் அவசர அவசரமாகத் தோளில் கிடந்த துண்டால் கண்களைத் துடைத்துக் கொள்கிறார். 'கேட்டைத் திறந்தவர் பக்கத்தில் வந்து விட்டார்.

''மோதின் அப்பா அஸ்ஸலாமு அலைக்கும்.....'' பின் புறமிருந்து குரல் வருகிறது. ''வஅலைக்கும்முஸ்ஸலாம்'' பதில் ஸலாத்துடன் திரும்பிப் பார்க்கிறார் முஅத்தினப்பா, வந்தவர் காஸீம் ஹாஜியார். ஊரிலே உள்ள விரல்விட்டெண்ணக் கூடிய தனவந்தர்களில் ஒருவர்.

''எனத்தியாலும் அவசரமா ஹாஜியார்...'' கேட்டவாறு அவரை நெருங்கி வந்தார் முஅத்தினப்பா.

''அவசரம் தான் ஒங்களோட கொஞ்சம் பேசணும். ஒங்ட ரூமுல பெய்த்துப் பேசோமே, எனக் கூறிய ஹாஜியாரை ரூமுக்குள் அழைத்துச் சென்றார் அப்பா.

''மோதீன் அப்பா... ஒங்களுக்குத் தெரியும். நான் அஞ்சு தரம் குடும்பத்தோட ஹஜ்ஜுக்குப் பெய்த்து வந்துட்ட. பாருங்கோ.. மொதல் தரம் ஹஜ்ஜுக்குப் போனதுல ஈந்து ஹஜ் காலம் வார காலமெல்லாம் அல்லாட மாளிக கஃபாவ திரும்ப திரும்ப பாக்கோணும், அங்க போகோணுமென்டு மனசு துடிச்சிக் கொண்டு ஈச்சிய. இது அடக்கேலாத ஆச. தரைல போட்ட மீன் எப்படித் துடிச்சுமோ அதே போல மனசும் துடிச்சும். அதால தான் திரும்ப திரும்ப அஞ்சு தரம் பெய்த்துட்டோம். இந்த மொறையும் நானும் ஏன்ட பொன்ஜாதியும் போகத்தான் நெனச்சோம். பொறகு கொஞ்சம் யோசிச்சன். பல தடவ அங்க போறவங்களுக்கே திரும்பப் போற ஆச வாரென்டா, இன்னமே அங்க போகாதவங்களுக்கு மனசுல எவ்வளவு ஆச ஈச்சும் ? என்று யோசிச்சிப் பார்த்தன் அப்பா....!'' எனக் கூறிக்கொண்டே போனார் ஹாஜியார். கதை கேட்கும் சிறுவன் போல் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டேயிருந்தார் முஅத்தினப்பா.



மீண்டும் தொடர்ந்தார் ஹாஜியார்.

''பாருங்கோ... மிச்சம் பேருக்கு ஹஜ்ஜுக்குப் போகோணும், அந்த அல்லாட பள்ளிவாசல கண் நெறயப் பாக்கோணும் என்ட ஆச மனசு நெறய ஈச்சும். ஆனா அவங்களுக்கிட்ட காசு பணம் ஈச்சாது. அதச் சொட்டீம். நாங்க போறத்த நிப்பாட்டிட்டு, அப்படிப்பட்ட ஆச உள்ள ஒத்தர ஹஜ்ஜுக்கு அனுப்ப முடிவு செஞ்சோம். தார அனுப்பியது என்டு யோசின பண்ணிய ஒடனே மொதல்ல மனசுல வந்தது நீங்க தான். அதச் சொட்டீம் இந்த மொற நீங்க ஹஜ்ஜிக்கு போற. இந்தாங்கோ புடியுங்கோ... இதுல மூனு லச்சம். ரூவா சல்லி ஈச்சி நாளைக்கே கொழும்புக்குப் பெய்த்து ஆக வேண்டிய விஷயங்களச் செய்யுங்கோ. ஒங்கட பயணத்துக்குப் போக மிச்சம் ஈச்சிய சல்லிய வெச்சி ஹஜ்ஜிக்குப் பொறகு இன்ஷாஅல்லா.... ஒங்கட மகள்ட கல்யாணத்தச் செஞ்சி போடுங்க...'' என காஸீம் ஹாஜியார் கூறக்கூற இது கனவா அல்லது நனவா என்பது புரியாமல் ஸ்தம்பித்து நின்றிருந்தார் முஅத்தினப்பா. அவரால் உணர்வுகளை அடக்க முடியவில்லை. அவர் உதடுகள் துடித்தன. பேசுவதற்கு நா எழவில்லை. சிறு குழந்தை போல் விம்மியழுத முஅத்தினப்பாவை ஆரத்தழுவி முஸாபஹாச் செய்து கொண்டார் ஹாஜியார்,

''மோதீன் அப்பா.... ஒங்கட ஹஜ்ஜ அல்லா ஏத்துக் கொள்ளோனும், அங்க பெய்த்து எங்களுக்கெல்லாம் துஆச் செய்ங்கோ...! என்று கூறிய போது அவர் விழி ஓரங்களிலும் நீர் திரையிட்டிருந்தது.

''அல்ஹம்துலில்லா.....'' என அல்லாஹ்வை உளமாறப் புகழ்ந்த முஅத்தினப்பா, அவனைத் தொழுது நன்றி செலுத்தத் தொடங்கினார்.

''யா அல்லா....! நீ மிச்சம் எரக்கமுள்ளவன். ஏன்ட துஆவக் கபூல் செஞ்சி ஒன்ட மாளிகய காணிய பாக்கியத்தத் தந்துட்ட. யா அல்லாஹ்...! என்னப் போல மனசுல ஆச ஈந்தும் கைல வசிதியில்லாம ஈச்சிய அத்தனப் பேருக்கும் இந்தப் பாக்கியத்தக் கொடு நாயனே ! காஸீம் ஹாஜியாருக்கு நீண்ட ஆயுசையும், பரக்கத்தையும், சொகத்தையும் என்டைக்கும் கொடு நாயனே! அவரப் போல வசதியுள்ள, திரும்ப திரும்ப ஹஜ்ஜுக்குப் போற எல்லார்ட கண்களையும், மனசையும் தொறக்க வச்சிடு நாயனே....! என உருக்கமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார் முஅத்தினப்பா.

*நன்றி - தினகரன் வாரமஞ்சரி 24 - 02 -2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய் முகங்கள்....!

‘‘உம்மா.... உம்மா.... உம்மோவ்....’’ வீதியிலிருந்தே தாயை அழைத்தவாறு வீட்டுக்குள் நுழைந்த பர்ஸான் தனது புத்தகப்பையை சுவரிலிருந்த ஆணியிலே மாட்டி விட்டுத் தாயிடம் ஓடி வந்தான்.

‘‘உம்மா இப்ப ஒங்களுக்கு நல்லமா....?’’ தாயின் நெற்றியிலே கைவைத்துப் பார்த்த அந்தப் பத்து வயதுப் பிஞ்சுக்குக் கண்கள் கலங்கி விட்டன.

‘‘மகன்... ராஜா.... ஸ்கூல்ல ஈந்து வந்துட்டா?’’ எனக் கேட்டவாறு கண்களைத் திறந்து தன் அன்புச் செல்வத்தை நோக்கினாள் அன்னை ஸாஹிரா.

அவன் உடையில், உடலில் அனைத்திலுமே வறுமையின் முத்திரை பதியப்பட்டிருந்தது. நீண்டதோர் பெருமூச்சுடன் பார்வையை வாசல் பக்கம் ஓட விட்டாள் ஸாஹிரா. அங்கே.... அவள் ஈன்றெடுத்த அடுத்த இரண்டு எலும்புக் கூடுகளும் விளையாடிக் கொண்டிருந்தன.

கடுங்காய்ச்சல் இரண்டு தினங்களாக அவளைப் படுக்கையில் தள்ளி விட்டது. இல்லையென்றால் இந்நேரம் எவர் வீட்டிலாவது இயந்திரமாக இயங்கிக் கொண்டிருப்பாள். ஆம் ! கணவனை இழக்க நேரிட்ட பின் வீடு வீடாகப் போய் வேலைகள் செய்தே தன் பிஞ்சுக் குழந்தைகள் மூன்றையும் அவள் வளர்த்து வருகிறாள் இரண்டு தினங்களாக அவள் படுத்து விட்டதால் குழந்தைகள் தொடர்ந்து மூன்று வேளைகள் பட்டினி கிடக்க நேர்ந்து விட்டது.

பாவம். அந்த விதவைத் தாய்க்கும், அனாதைக் குழந்தைகளுக்கும் உதவிக் கரம் நீட்ட, உணர்வுள்ள எந்த ஜீவனுமே இருக்கவில்லை. ஸாஹிராவின் கணவனுடைய கூடப் பிறந்த நானா கூட ஊரிலே பெரிய பணக்காரராக ஜொலிக்கிறார். இருந்துமென்ன...? அவர் இவர்களைத் திரும்பிப் கூடப் பார்ப்பதில்லை.

‘‘உம்மா... பசியும்மா... சோறு தாங்கும்மா...!’’ எதையுமே உணராத சின்னஞ்சிறுசுகள் இரண்டும் தாயைப் படாதபாடு படுத்தின. இதைப் பார்க்கச் சகியாத மூத்தவன்,

‘‘உம்மா.... பெரியப்பாக்கிட்டப் பெய்த்து சல்லி வாங்கிக் கொண்டு வரவா....?’’ ஆவலுடன் கேட்டான்.

‘‘வேணாம் மகன்... அவரு தாரல்ல. அங்க போக வேணாம்....!’’ தாய் மறுத்தும்.,

‘‘இல்லும்மா.... கேட்டுப் பார்த்துட்டு வாறனே!’’ தாயின் பதிலுக்குக் கூடக் காத்திராத பர்ஸான், வாகனம் ஓட்டுவது போல பாவனை செய்து கொண்டு ‘பீப்...பீப்.... எனச் சத்தமிட்டவாறு ஓட்டம் பிடித்தான்..

பெரியப்பாவின் மாடி வீட்டுக்குமுன் ‘பிரேக்’ போட்டு ஓட்டத்தை நிறுத்தியவன், மூச்சிறைக்க நின்றான். பின் தயங்கித் தயங்கி உள்ளே பார்த்தான் போவோமா....? வேண்டாமா...? என முடிவெடுப்பதற்குள் உள்ளேயிருந்து வந்த கார் அவனை நெருங்கி விட்டது. டிரைவர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவரே பெரியப்பா தான்.

‘‘டேய்....நீயா.... எனத்துக்கன் வந்த...?’’ அவர் இப்படிக் கேட்கா விட்டாலும், அவரின் கடுமையான பார்வை இப்படிக் கேட்டது.

‘‘பெரியப்பா..... உம்மாக்கு சொகமில்ல.... நாங்க மூனு நேரம் பட்டினி. அது தான் ஒங்களுக்கிட்ட எனத்தியாலும் வாங்கிக் கொண்டு போக வந்த....’’ அவன் கூறி முடிப்பதற்குள்,

‘‘குடுத்து வெச்சத்த வாங்க வந்த மாதிரி. ஆளப்பாரு ஆள.... இப்ப கைல சல்லி இல்ல... போ.... போ.... நான் ஒரு அவசரப் பயணம் போற...’’ விரட்டாத குறையாக அவர் கூறிய போது அவன் ஸ்தம்பித்துப் போனான். கார் பறந்து விட்டது. கார் மறையும் வரை வீதியையே வெறித்துப் பார்த்தவனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. இதயம் விம்மியது.

பிற்பகல் நான்கு மணியாகி விட்டது. சந்தையிலிருந்து சமான் கூடையுடன் வந்து கொண்டிருந்தான் பர்ஸான். கையிலுள்ள கூடை கனத்திருந்ததால் கை வலித்தது. கூடையை மற்றக் கைக்கு மாற்றிக் கொண்டவன் மெதுவாக நடந்தான். சும்மா கிடைத்தவற்றை விட்டுவர மனம் வராததால், எல்லாவற்றையும் தூக்கிக் கூடையிலே போட்டிருந்தான். கையிலுள்ள கூடையின் சுமையினாலும், பசிக்களைப்பினாலும் தொடர்ந்து நடக்கும் சக்தி அந்தப் பிஞ்சுக் கால்களுக்கு இருக்கவில்லை. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து போய் நடந்து கொண்டிருந்தான் அவன்.

அப்போது பாதையோரமாக அமைந்திருந்த அனாதை இல்லத்தின் பக்கமாக ஆரவாரமும், பரபரப்பும் இருப்பதைக் கண்டு, அந்த இடத்தில் சிறிது நேரம் தாமதித்துப் போக நினைத்தவனாய் அங்கேயே நின்று விட்டான். மேடை அழகாகத் தெரிந்தது. மேடைக்குக் கீழே பார்வையாளர்கள் நிறைந்திருந்தார்கள். மேடையிலே அவனின் பெரியப்பா முஸம்மில் ஹாஜியார் உட்கார்ந்திருந்தார். எங்கிருந்து தான் அவனுக்கு இவ்வளவு உற்சாகம் வந்ததோ தெரியவில்லை. அவனும் ஒருவாறு முண்டியடித்துக் கொண்டு போய் முன்னேறி மேடையின் அருகிலேயே இடம் பிடித்துக் கொண்டான்.

அப்போது விழாவின் தலைவர் மேடையிலே தோன்றி,

''இன்று எமது அனாதை இல்லத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நடைபெற இருக்கிறது. விழாவுக்குப் பிரதம அதிதியாக பிரபல சமூக சேவையாளரும்,கொடைவள்ளலுமாகிய முஸம்மில் ஹாஜியார் அவர்கள் கலந்து கொள்வதையிட்டு பெருமையடைகிறோம். அனாதைகள் மீது மிகவும் அன்பு கொண்ட இவரின் பிறந்த நாளும் இன்றாக இருப்பதால் எமது இல்லப் பிள்ளைகளுக்கு உணவுப் பொட்டலங்களையும் இவர் வழங்கவுள்ள தோடு எமது அனாதை இல்லத்தின் வளர்ச்சிக்காக இருபதாயிரம் ரூபாக்களை நன்கொடையாகவும் வழங்க முன்வந்திருக்கிறார்.....! முஸம்மில் ஹாஜியாரைப் பற்றித் தொடர்ந்தும் அளந்து கொண்டே போனார் தலைவர்.

''கூடப்பொறந்த தம்பீட அனாதைப் புள்ளைக நாங்க பட்டினியால கஷ்டப்படுகிய நேரம் இவரு பேருக்கும், புகழுக்கும் இங்க வந்து அள்ளிக் கொடுக்கியாரு. இவங்களுக்குக் குடுத்தா பேப்பர்ல வரும். எங்களுக்குத் தந்தா எந்தப் பேப்பர்ல வரும்...? என மனதிற்குள் கவலைப்பட்டுக் கொண்டவ னின் கால்கள் நிலத்திலே நிற்க மறுத்தன. மேடையை இறுகப்பற்றியிருந்த கைகளும் தளர, கீழே விழுந்து விட்டான்.

மறு கணம் கூட்டத்தில் ஒரே பரபரப்பு. நிகழ்ச்சிகள் தடைப்பட்டன. மேடையிலே இருந்தவர்களுடன் பிரதம அதிதியும் கீழே எட்டிப் பார்த்தார். அங்கே சிறுவனொருவன் மயங்கிக் கிடக்க, அவன் பக்கத்திலே அழுகிய தக்காளிப் பழங்களும் பழுதடைந்த மரக்கறி வகைகளும் சிதறிக் கிடந்தன. சிறுவனை இனங்கண்டு கொண்ட பிரதம அதிதியின் முகம் பேயறைந்ததைப் போல் இருண்டு இறுகிப் போய் விட்டது.



முதலுதவிகள் மும்முரமாக செய்யப்பட்டன. இருப்பினும் சிறுவனுக்கு உணர்வே திரும்பவில்லை.. உடனே டாக்டர் வரவழைக்கப்பட்டார். பரிசோதித்துப் பார்த்த அவர் உதட்டைப் பிதுங்கியபடி,


''பட்டினி கிடந்த உடம்பு... அதோட பசிக்களைப்புல விழுந்திருக்கு... விழுந்த வேகத்துல இந்தக் கருங்கல்லுல தல மோதி பலமா அடி பட்டிச்சி. உயிர் பிரிஞ்சிட்டுது...!" என டாக்டர் கூறி முடித்த போது முஸம்மில் ஹாஜியார் கூனிக் குறுகி நின்றார். விழிகள் வெளியே தெரிய மூடியிருந்த சிறுவனின் கண்கள் அவரையே பார்த்து நியாயம் கேட்பதாக அவருக்குத் தோன்றியது.

''பெரியப்பா... உம்மாக்கு சொகமில்ல.... நாங்க மூனு நேரம் பட்டினி..... அது தான் ஒங்களுக்கிட்ட ஏதாவது வாங்கிக் கொண்டு போக வந்த.... ''அந்த வார்த்தைகள் அவரின் காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டேயிருந்தன.

*நன்றி . ஸவ்துஷ் ஷபாப் - 1989 ஒக்டோபர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு குடும்பம் குட்டிச்சுவராகிறது...

''விடிஞ்சும் கூட வாப்பாவ இன்னும் காணல்லயே...! என்ற கவலையோடு வேலியருகே நின்று வீதியையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரிப்னா. பிள்ளைகள் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். நீண்ட பெருமூச்சொன்று அவளிடமிருந்து புறப்படுகிறது. பதினைந்தே வயதான ரிப்னா அவர்கள் செல்வதையே ஏக்கத்தோடு பார்த்தபடி நிற்கிறாள்.

பாடசாலை சென்று நன்றாகப் படித்துக் கொண்டிருந்தவள் தான் அவள். அக்கம் பக்கத்துப் பெண்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் சென்று ஆடம்பரமாகத் திரும்புவதால் கவரப்பட்ட, இல்லை ஆசைப்பட்ட அவளின் தாய் சகீனாவின் சவூதி விஜயத்தினால் பாடசாலையிலிருந்து நிறுத்தப்பட்டு, சின்ன வயதிலேயே ஒரு சுமைதாங்கியாக மாற்றப்பட்டவள் தான் ரிப்னா.

சகீனா சவூதி போவதற்கு முன் அவர்கள் குடும்ப வாழ்வு சிறப்பாகத் தான் இருந்தது. அவளின் வாப்பா நஸீர் குடும்பத்தை எந்தக் குறையுமின்றி நிர்வகித்தார். ஆடம்பரமாக வாழ வேண்டுமென்ற ஒரு வெறியால் கணவனின் மறுப்பைக் கூட அலட்சியம் செய்து விட்டு விமானமேறிவிட்டாள் சகீனா.

அவள் வெளிநாடு சென்ற பின் தான் பிரச்சினையே உருவாகியது. நஸீர் தொழிலுக்குச் செல்ல வேண்டும், பிள்ளைகள் பாடசாலை செல்ல வேண்டும். பாடசாலை போகாத குழந்தைகள் இருவரையும் கவனிக்க வேண்டும். இந்த நிலையில் சமைத்துப் போடுவதும், வீட்டைக் கவனிப்பதும் யார்? முடிவு ரிப்னாவின் பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தாயின் விபரீதமான பயணத்தினால் அந்தப் பன்னிரெண்டு வயதுப் பிஞ்சு தன் வயதுக்கு மிஞ்சிய சுமைகளை சுமக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டு விட்டது.

ஓ இன்று எங்கள் சமூகத்தில் எத்தனை ஆயிரம் ரிப்னாக்கள் தங்கள் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களான நிலையில், அவர்கள் மெல்லிய மன உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு யாருமில்லாத நிலையில் மனநிலை பாதிக்கப் பட்டவர்களாக, சிறகொடிந்த சிட்டுகளாக முடங்கியிருக்கிறார்கள்..?



சகீனா வெளிநாடு போய் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் நஸீர் எவ்வளவோ மாறிவிட்டார். ஆரம்பத்தில் வீட்டு வேலைகளில் மகளுக்கு உதவிகள் செய்து விட்டே அவர் காரியாலயம் போவார். மனைவியின் பிரிவினால் எற்பட்ட விரக்தியும், வேதனையும் காரணமாக பல சந்தர்ப்பங்களில் அவர் ஆபிசுக்குப் போகாமலேயே இருந்து விடுவார். வேலையில் பொறுப்பில்லாத அவர் திடீரென ஒரு நாள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இருப்பினும் மாதா, மாதம் மனைவியிடமிருந்து பணம் வந்து கொண்டேயிருந்தது. அவரின் கையில் ஆயிரக் கணக்கில் பணம் கிடைத்த போது புது நண்பர்களின் நட்புடன் ரேஸ், சூது மது போன்ற கெட்ட பழக்கங்களும் தொற்றிக் கொண்டன. விளைவு குடும்பப் பொறுப்புக்களில் நின்றும் அவர் தூரமாகத் தொடங்கி விட்டார்.

இந்த நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்த விரும்பிய மூத்த மகன் இம்தியாஸ் தன்னைத் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற தைரியத்தில் பாடசாலைக்குச் செல்வதைக் குறைத்து, நிரந்தரமாகவே வீட்டில் நின்று விட்டான். உதவாக்கரை நண்பர்களின் நட்பு அவனை எங்கெங்கோ அழைத்துச் சென்றது. ஆரம்பத்தில் சினிமா, சிகரட் என்று இருந்தவன். இப்போது போதைப் பொருள்வரை போய் விட்டான்.

வாப்பாவினதும், நானாவினதும் அவல நிலை கண்டு ரிப்னா ரத்தக் கண்ணீர் வடித்தாள்.

''உம்மா.... நீங்க அளவுக்கு மிஞ்சி ஆசப்பட்டீங்க... அதனால இந்தக் குடும்பம் சீரழிஞ்சிகிட்டிருக்கிறதப் பாத்தீங்களா....? " என மனதிற்குள்ளேயே அழுது கொள்வாள் அவள்.

வேலியோரமாக நின்றிருந்த ரிப்னா, வீதியில் சிரித்தபடி புத்தகப் பைகளைச் சுமந்து கொண்டு சுதந்திரப் பறவைகளாகப் பள்ளி செல்லும் மாணவிகளை அவதானித்தாள். அங்கே அவளின் வகுப்புத் தோழிகள் இன்ஷிரா, இன்ஷிபா, நஸீபா, நஸ்ரீன் எல்லோரும் வந்து கொண்டிருந்தார்கள்.

'''உம்மா நீங்க மட்டும் சவூதிக்குப் போகாம இருந்த நானும் இவங்களப் போல ஸ்கூலுக்குப் போயிருப்பேன் தானே...?" மனப்பூர்வமாக தாயை நொந்து கொண்டாள் ரிப்னா . கண்களில் இருந்து வந்து விழத் தயாராகிய கண்ணீரை, முந்தானையால் துடைத்துக் கொண்ட ரிப்னா நிமிர்ந்த போது, வீதியின் கோடியில் அவளின் தந்தை வருவதைக் கண்ட பிறகு தான் அவளுக்கு நிம்மதி மூச்சு வந்தது.

சுலைமா சமி இக்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள் நுழைந்த ரிப்னா சகோதரனின் கட்டிலை நோக்கினாள். இரவு போதையேறிய நிலையில் வீட்டுக்குள் நுழைந்த அவன் இன்னும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். இதையெல்லாம் காணக்காண அவளுக்குப் பைத்தியமே வந்து விடும் போல் இருந்தது. தம்மைச் சூழ நடக்கும் அவலங்களை அறியாத அவளின் தங்கைகள் ஒரு மூலையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இரவாகியது. அன்று வாப்பாவின் பெயருக்கு வந்த கடிதத்தை அவரிடம் நீட்டினாள் அவள்.

''வெறும் கடிதமா..... சல்லி அனுப்பல்லயா பாவி....? என முணுமுணுத்த படி கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார் நஸீர்.

''இப்போது நான் சவூதி வந்து இரண்டு வருடங்கள் சென்று விட்டன. மூன்று வருடத்தில் வந்து விடுவேன். நான் எனது சம்பளத்தை இங்கே வைப்பதில்லை. உங்களுக்கே அனுப்பி விடுகிறேன் எனவே நான் வருவதற்குள் வீட்டைக் கட்டி முடியுங்கள். இப்படிக்கு சகீனா.

கடிதத்தைப் படித்தவர் அட்டகாசமாகச் சிரித்தார். பின் கடிதத்தைச் சுருட்டி குப்பிலாம்பிற்கு நேரே பிடித்து சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, அதனைக் கீழே போட்டு காலால் மிதித்து அணைத்தார்.

'இப்போதெல்லாம் தாய் அனுப்பும் பணத்தில் செலவுக்குக் கூட அவர் ஒழுங்காகக் கொடுக்க மாட்டார். பல நேரங்களில் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் அந்தப் பிஞ்சு மனம் தடுமாறிப் போகும்.

''உம்மா... வாப்பாவும்....... நானாவும்.... ரொம்ப மாறிட்டாங்கும்மா... நீங்க பாலைவனத்துக்குப் போனதால எங்க வாழ்க்கையே பாலைவனமாப் போச்சு.... இனி இந்தக் குடும்பம் உருப்படுமா.....?'' மானசீகமாய்ப் பேசிக் கொண்டாள் ரிப்னா.

வாரங்கள் சில கடந்தன. வீட்டை விட்டு வெளியே போன நஸீர் ஒரு வாரமாக வீட்டுக்கு வரவேயில்லை.

''யா அல்லா.... வாப்பாவுக்கு எந்த ஆபத்தும் இருக்கக் கூடாது. எப்படியாவது அவர வீட்டுக்குச் சேர்த்துடு நாயனே!'' அந்தப் பிஞ்சு மனம் தந்தைக்காக கண்ணீரோடு பிரார்த்தித்துக் கொண்டது.



அன்று காற்றோடு காற்றாக அவள் தந்தை பற்றி காதில் விழுந்த செய்தி அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''வாப்பா... இந்த வயசுலயும் ஒங்களுக்கு ஒரு கல்யாணமா.... இது நியாயமா...? என அவள். உள்ளம் வினாத் தொடுத்தது. இருப்பினும் இந்தச் செய்தி ஒரு வதந்தியாக, பொய்யாக இருக்கக் கூடாதா என உள்ளம் ஏங்கியது.

சில தினங்கள் கழிந்து வாப்பா வந்தார் தனியாகவல்ல. இன்னொரு துணையுடன். வாப்பா பற்றி ஊரில் பரவிய செய்தி உண்மை தான் என்பதை அவள் புரிந்து கொண்டாள். இருப்பினும் அந்தப் பிஞ்சு நெஞ்சத்தினால் அதனை ஜீரணிக்க முடியவில்லை.

சில மாதங்கள் கழிந்தன. அன்று சகீனாவிடமிருந்து கடைசியாக ஒரு கடிதம் வந்தது. அதில் அடுத்த மாதம் தான் வர இருப்பதாக எழுதியிருந்தாள். அவளின் அந்தக் கடிதத்தைக் கண்டு யாரும் சந்தோசப் படவில்லை. அவள் வந்த பின் வீட்டில் பெரும் பூகம்பமொன்றே வெடிக்கும் என எல்லோரும் பயந்து கொண்டிருந்தார்கள். அவள் கணவன் நஸீர் அவள் வரும் போது தனது இரண்டாவது மனைவியை இங்கே வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் அவளை வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் பகல் வேளை வாகனம் ஒன்று வீட்டின் முன் வந்து நிற்கிறது.

''ஹாய்.... சகீனா தாத்தா வந்துட்டா....'' என்ற அயல் வீட்டுச் சின்னஞ் சிறுசுகளின் சத்தம் கேட்டு உள்ளே இருந்து ஓடி வந்தாள் ரிப்னா.

வாகனத்திலிருந்து இறங்கிய சகீனாவுக்கு வீட்டைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது. அவள் எதிர்பார்த்து வந்த புது வீட்டை அங்கே காணவில்லை. வீடு பழையபடி இருந்தது. இது அவள் இதயத்தில் முதல் அடியாய் விழுந்தது.

உள்ளே வந்த அவள் அங்கே இரு வளர்ச்சி குன்றிய எலும்புக்கூடுகள் விளையாடுவதைக் கண்டு,

''சின்னதுகள் எங்கும்மா...? இது யாரு....? எனக் கேட்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘தெரியல்லயா உம்மா.... இது எங்க தங்கச்சிமார் தான் ‘‘என்ற மகளின் விளக்கம் அவளுக்கு இரண்டாவது அடியாக அமைந்து விட்டது.

சில நிமிடங்கள் கழிந்தும் அங்கே தனது கணவனைக் காணாத சகீனா,

‘‘மகள் இன்டைக்கு லீவு நாள் தானே! வாப்பா.. எங்கும்மா...?'' என்று வினவிய போது, அந்த இரு குழந்தைகளிலும் ஒன்று முந்திக் கொண்டு,

‘‘ஓங்களுக்கு விசயமே தெரியாதா...? வாப்பா எங்களுக்கு புதுசா ஒரு உம்மா கொண்டுவந்திருக்காங்க....'' என்று கூறிய போது எதுவும் புரியாத அவள் ரிப்னாவை நோக்கினாள். அவளால் எதுவும் பேச முடியவில்லை. தலைகுனிந்த படி நிலத்தை நோக்கியிருந்த அவள் கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் நிலத்தில் வந்து விழுந்தன. அவளின் நிலையைக் கண்டு உண்மையை விளங்கிக் கொண்ட சகீனாவின் தலையில் அந்த வீடே விழுந்து தாக்கியது போன்றிருந்தது. தன்னிலை மறந்தபடி நெஞ்சைப் பிடித்தவாறு உடகார்ந்திருந்த சகீனா நீண்ட நேரமாக அழுது கொண்டேயிருந் தாள்.

அவள் கொண்டுவந்திருக்கும் சாமான்களைப் பார்த்துவிட வேண்டும். என்ற துடிப்புடன் அவளைச் சூழ்ந்திருந்த அயலவர்களுக்கு சகீனாவின் நிலை ஏமாற்றத்தைத் தர அவர்கள் ஒவ்வொருவராக நழுவிக் கொண்டிருந்தார்கள்.

அவள் இன்னும் அழுது கொண்டுதான் இருந்தாள். அப்போது திடீரென ஒரு ஜீப் வண்டி வீட்டின் முன்னே வந்து கிரீச்சிட்டு நின்றது. அதிலிருந்து இறங்கிய சில காக்கிச் சட்டைக்காரர்கள் வீட்டுக்குள் புகுந்தார்கள்.

‘‘இம்தியாஸ் இன்னவாத...?'' என்ற அவர்களின் புரியாத பாஷையை புதிராகப் பார்த்தார்கள் தாயும் மகளும். அப்போது விஷயம் தெரிந்த ஒருவர் அவருடன் கதைத்து விட்டு விடயத்தை மொழி பெயர்த்தார்.

‘‘இவன் இம்தியாஸ் டவுன்ல நடந்த பேங்க் கொள்ளைல சம்பந்தப்பட் டிருக்கானாம்.'' என்று அவர் கூற, உள்ளே நுழைந்து தேடுதல் வேட்டை நடத்திய அவர்கள், வீட்டின் பின் புறமிருந்து அவனை இழுத்துக் கொண்டு போய் ஜீப்பில் ஏற்றினார்கள்.



‘‘ஐயோ.... ஏன்ட புள்ளய ஒன்டும் செய்யாதேங்கோ....!'' என்று அலறியவாறு சகீனா நிலத்திலே மயங்கிச் சாய்ந்தாள். ஜீப் வண்டி போய் விட்டது. வேலி இடுக்குகளின் ஊடகாகப் பல சோடிக் கண்கள் வேடிக்கை பார்த்தன. அவள் இன்னும் மயக்கம் தெளிந்து எழவில்லை. ரிப்னா செய்வதறியாது கண்களைக் கசக்கினாள். சில நிமிடங்களில் அவள் உடம்பு லேசாக அசைந்தது. பின்னர் தள்ளாடியபடி தலைவிரி கோலமாக எழுந்து நின்றாள். அவளைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. கண்கள் இரண்டும் இரத்தமாய்ச் சிவந்து வெளியே வருவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தன. திடீரென பலத்த குரலில் அலறிய அவள் முன்னே நின்றிருந்த அயல் வீட்டுப் பெண்ணின் மீது பாய்ந்து அவளைத் தாக்கத் தொடங்கினாள். இதை எதிர்பார்க்காத பலரும் சிதறி ஓடினார்கள். சிலர் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். அவளின் வாயிலிருந்து அறிவில்லாத வார்த்தைகள் வெளியாகிக் கொண்டிருந்தன.

ஆம்! அவள் வீட்டை வந்தடைந்த போது அவள் இதயத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அடிகளும், அதிர்ச்சிகளும் அவளை ஒரு பைத்திய மாக மாற்றி விட்டது.

சில நிமிடங்களில் அயலவர்களின் ஏற்பாட்டினால் ஒரு வாகனம் கொண்டு வரப்பட்டு அதில் அவள் ஏற்றப்பட்டாள். அந்த வாகனம் மன நோயாளர் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள ஸக்காத். !



மாலை மங்கி விட்டது. ஈதுல் பித்ர் பெருநாளின் வருகையை அறிவிக்கும் இனிய தக்பீர் ஒலி காற்றுடன் கலந்து வருகிறது. ஆம். பொழுது விடிந்தால் பெருநாள் எல்லோர் உள்ளங்களிலும் ஒரே பூரிப்பு.

எல்லோர் உள்ளங்களும் உவகையால் நிறைந்திருக்க, கரீமா மட்டும் எதையோ பறிகொடுத்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். இன்று எல்லா இஸ்லாமிய இதயங்களும் அனுபவிக்கும் மகிழ்ச்சியும், பூரிப்பும் ஏன் இவளுக்கு மட்டும் இல்லை? இந்தக் கரீமாவுக்கு என்ன குறை?

அந்த ஊரிலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய பெரும் புள்ளி பளீல் ஹாஜியாரின் அன்பு மனைவி தான் இந்தக் கரீமா. கண்ணிறைந்த கணவன், கண்மணிகளான குழந்தைகள், கைநிறையப் பணம், ஏவல்களை நிறைவேற்றப் பணியாட்கள், ஏராளமான சொத்துக்க் பின்னே அவளுக்கு என்ன குறை....?

நினைக்க நினைக்க கணவர் மீது கோபமாக இருந்தது கரீமாவுக்கு.

''வழமையாக எந்த வருஷமும் ஸக்காத் ஸதகா என்று குடுக்கிய மனுஷனுக்கு இப்ப மட்டும் எனத்தியன் நடந்த...? நோம்பும் முடிஞ்சீட்ட, ஸக்காத்தப் பத்தி அவரு ஒன்டும் செல்லோம் இல்ல,தாருக்கும் குடுக்கோம் இல்ல... இந்த வருஷம் இவருக்கு எனத்தியன் புடிச்சீச்சி....?'' என நினைத்துக் குழம்பினாள் கரீமா.

ரமழான் மாதம் பிறந்து விட்டால் கேட்கவே வேண்டாம், தினமும் அவர்களின் கேட்டருகில் நீண்ட கியூ வரிசை தப்பாமல் இருக்கும். ஹாஜியாரும் யாரின் மனதையும் புண்படுத்தாது அவர்களுக் கெல்லாம் ஐந்தோ, பத்தோ கொடுத்தனுப்புவார். சமூகத்தைப் பீடித்திருக்கும் வறுமை நோயைக் களைந் தெறிவதற்காக இஸ்லாம் அறிமுகப்படுத்தியிருக்கும் சிறந்த பொருளாதாரத் திட்டமான 'ஸக்காத்' இந்த முறையிலா கொடுபட வேண்டும்? இப்படி ஸக்காத் பெறத் தகுதியுடையவர்கள் வீடு வீடாக அலைந்து திரிந்து சில்லறைகளை ஸக்காத்தாகப் பெறும் அவல நிலை என்று தான் மாறுமோ?

பளீல் ஹாஜியார் சில்லறைகளை மட்டும் கொடுப்பவராக



இருக்கவில்லை. தமது உற்றார், உறவினர் வீடுகளுக்கு ஐம்பது நூறு என்று கவரில் போட்டுக் கொடுப்பார். தன் கணவரும் ரமழானில் 'ஸக்காத்' கொடுக்கிறார் என்பதில் கரீமாவுக்கு அலாதிப் பெருமை.

இருப்பினும் இந்த முறை ஸக்காத்தைப் பற்றி அவர் எதுவும் கூறாதது அவளுக்கு ஏமாற்றமாகவே போய் விட்டது.ஒரு நாள் அவளாகவே வலியப் போய்,

''இந்த வருஷம் தாருக்கும் ஸக்காத் சல்லி குடுக்கல்லயே நோம்பு இருவத்தேழுல குடுக்கப் பாக்கியா? என்று ஆவலோடு கேட்டாள் கரீமா

''இல்ல கரீமா... இந்த மொற ஸக்காத் சல்லி குடுக்கிய ஐடியா இல்ல...'' அவர் கூறிய போது இடிந்து போனாள் கரீமா.

''இவ்வளவு காலமும் குடுத்து வாறத இந்த மொற குடுக்காட்டி நாலு பேரும் எங்களப்பத்தி எனத்தியன் நெனச்சியொன்டு...? படைத்தவனைப் பற்றிய கவலையோடு அல்ல, சமூகத்தைப் பற்றிய, அந்த நான்கு பேரைப் பற்றிய கவலையோடு கேட்டாள் கரீமா.

''என்ன நெனச்சியோன்டா...? நெனச்சியத்த நெனச்சட்டுமே... எங்களுக்கு எனத்தியன்? என்று அலட்சியமாகக் கூறி விட்டு, அந்தப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தார் ஹாஜியார்.

கரீமாவுக்குப் பெரும் குழப்பமாகவே இருந்தது மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தடுமாறினாள்.கரீமா... ஒரு கிழமைக்கு முன் வீட்டுப் பணிப்பெண் அவளிடம் கூறிய விடயத்தை நினைத்து நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தாள் அவள்.

''நோனா.... தொரைட காரு கதீஜா தாத்தா ஊட்டுக்கு முன்னால இருந்த...'' அவள் கூறிய இந்தச் செய்திதான் அவளைக் குழப்பமடையச் செய்திருந்தது.

கதீஜா அந்த ஊரைச் சேர்ந்தவள் சின்னவயதிலேயே கணவனை இழந்து விதவையாகிக் குழந்தை குட்டிகளோடு கஷ்ட ஜீவியம் செய்பவள்.

''இந்தக் கதீஜாவுக்கும் அவருக்கும் எனத்தியன் தொடர்பு...? அவருட்டேயே கேட்டுப்பாத்தாச்சரி.... சீ.. அவரு அப்படி மோசமானவர் இல்லையே....? ஸக்காத்தும் இந்த மொற குடுக்கல்ல... அப்படியென்டா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேள அப்படி ஈச்சுமோ...?" எனப் பலவாறாக சிந்தித்துக் குழம்பியவள் ஒரு முடிவுக்கும் வர முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அப்போது வீட்டின் அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறக்கிறாள் கரீமா. அங்கே.... அதே கதீஜா கையில் பார்சல் ஒன்றுடன் புன்னகையோடு நின்றிருந்தாள். வாசலில் அவளைக் கண்டதும் என்ன செய்வதென்று புரியாத நிலை கரீமாவுக்கு...? இருந்தாலும் தன் மன உணர்வுகளை அடக்கியவளாக வந்தவளை உள்ளே அழைத்துச் செல்கிறாள்.

'இந்தாங்கோ, இது உங்க மகள் அனீஷாவுக்கு நான் தச்ச சட்ட, ஒங்கட ஊட்டுக்காரரு எனக்குச் செஞ்ச ஒதவிக்கு பெரிசாக என்னால ஒன்டும் செய்ய ஏலா. அதுதான் இந்த ஏழைட சந்தோஷமாக இந்தச் சட்டயத் தச்சிக் கொண்டு வந்த... ஹாஜியார் செஞ்ச ஒதவியால கஷ்டமில்லாம எல்லா நோம்பையும் புடிச்சோம்..." நயனங்களில் நீர் வடிய கதிஜா கூறிக்கொண்டிருந்த போது, அங்கே வந்த ஹாஜியார்.

"அட.... கதீஜாதங்கச்சியா....?" சந்தேசமாக இருக்கியாம்மா" என்று கேட்டபோது எதுவும் புரியாதவளாக அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள் கரீமா...

"விடிஞ்சாப் பெருநாள். ஊட்டுல புள்ளைகள் தனிய. வேலைகளும் ஈச்சி... அப்ப நான் போற....!" விடை பெற்றாள் கதீஜா... குழப்பத்தோடு கற்சிலையாக உடகார்ந்திருந்த கரீமா கணவனை நிமிர்ந்து நோக்கினாள்.

"கரீமா.... இந்த மொற ஸக்காத்துக் குடுக்கல்லயென்டு நீங்க கவலைப்பட்ட; கோபப்பட்ட. சரிதானே! நாங்க இப்பிடி வருஷத்துக்கு ஒரு தடவ கொடுக்கிய சில்லறைக்காசுகளயும், அம்பது நூறு ரூபாவாலயும் எங்கட சமூகத்துட வறுமையை நிரந்தரமாக இல்லாமச் செய்ய ஏலாது என்டதப் புரிஞ்சிட்டேன். அப்படி சில்லறைகளாகப் பிரிஞ்சி போற எங்கட ஸக்காத்துப் பணம் தாருக்குமே பிரயோசனம் இல்லாம போறதவிட, அது எங்கட சமூகத்துல பல பேருட வறுமையைப் போக்காட்டியும் ஒரு சிலருட வறுமையையாவது போக்கோணும் என்ட எண்ணத்துல தான் எங்கட ஸக்காத்துப்பணத்த எல்லாம் கணக்குப் பாத்து, நம்ம குடும்பத்துலயும், அக்கம் பக்கத்துலயும் கஷ்டத்தோட வாழியவங்க கொஞ்சம் பேரத் தெரிவு செஞ்சி அந்தப் பணத்த அவங்களுக்குப் பிரச்சிக் கொடுத்தன்." என ஹாஜியார் கூற, அதிசயத்தோடு அவரையே பார்த்தபடி இருந்தாள் கரீமா.

"அந்த நேரத்துல தான் எங்கட கதீஜாத் தங்கச்சியப் பத்தியும்




யோசிச்சன். பாவம் அவள். மாப்புள மௌத்தான பொறகு புள்ள குட்டிகளோட மிச்சம் கஷ்டப்படுகிய. அவளுக்குத் தையல் வேலைகளும் தெரியுமாம். அதனால ஒரு தையல் மெஷின வாங்கிக் குடுத்தா அதக் கொண்டு அவள் தொழில் செஞ்சி குடும்பத்தக் கஷ்டம் இல்லாமல் பாத்துக் கொள்ளுவாளே என்டுதான் ஒரு மெஷின் வாங்கிக் கொடுத்தேன்..." தன் கணவனின் உயர்ந்த உள்ளமும் உண்மை நிலையும் புரியப்புரிய கரீமாவின் கண்களில் இருந்து கண்ணீர் ஊற்றுக்கள் பெருக்கெடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயம் கண்ட இதயம் !



புறக்கோட்டையிலுள்ள அந்த வங்கியின் முன்னால் பலரும் நின்றிருந்தார்கள். அவர்களுள் தானும் ஒருவனாக நின்றிருந்தான் பரீத். அவனின் கண்கள் அங்குமிங்கும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. அங்கு அவன் யாரைத் தேடுகிறானோ...?

காலம் பல நிமிடங்களை விழுங்கி விட்டு ஊர்ந்து கொண்டிருந்தது. அப்போது கையிலுள்ள பணக்கட்டைக் கடதாசி 'பேக்'ஒன்றில் இட்டபடி வெளியே வந்தான் ஓர் இளைஞன். அவனைப் பார்த்தால் ஒரு அப்பாவியாகத் தோன்றியது- பரீதுக்கு அந்த இளைஞனின் முகத்தைப் பார்த்ததுமே அவனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. இன்று எந்த சிரமமும் இன்றியே தனது உழைப்பை நடத்தி முடிக்கலாம் என்ற திருப்தி அவனுக்கு உற்சாகத்துடன் அந்த இளைஞனைப் பின் தொடர்ந்து நடந்தான் பரீத்.

''இவன் ஒரு அப்பாவி மட்டுமில்ல, வடிகட்டிய முட்டாளும் தான். ஏன்னா... என்ன மாதிரி ஆட்கள் நிறைந்திருக்கிற இந்த மாதிரி இடத்துல கட்டுக்கட்டாப் பணத்த வெறும்கடதாசி 'பேக்'குல போட்டு கையில பிடிச்சிக் கொண்டு போறானே...! அதோட 'பேங்'குல இருந்து வெளியே வார நேரமே எல்லாரும் காணுற விதமா அந்தப் பணக்கட்ட 'பேக்'குல போட்டபடி வந்தானே ! இவன மாதிரி முட்டாள்களால தான் எங்க மாதிரி ஆக்களுக்குப் பிழைப்பே நடக்குது. அதனால நீயும உன் முட்டாள்தனமும் வாழ்க....!'' என்று மனதிற்குள் வாழ்த்திய படி நிழலாக ஊர்ந்து கொண்டிருந்தான் பரீத்.

புறக்கோட்டைப் பிரதான பஸ் நிலைய முன்பாக நடந்து கொண்டிருந்தான் இளைஞன். பாதை ஓரத்திலே தமது வியாபாரப் பொருட்களை வைத்துக் கத்தியபடி வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களை வேடிக்கை பார்த்தபடி நடந்து கொண்டிருந்த அந்த இளைஞனின் கால்கள் சில அடி தூரம் சென்றதும் அந்த இடத்திலே 'பிரேக்'போட்டு நின்று விட்டன.

'ஏன் தான் இவன் அப்படி நின்றுவிட்டானோ? என சிந்தித்தபடி அவனை நெருங்கி அவனின் பின்புறமாக வந்து நின்று கொண்டான் பரீத்.

இளைஞனின் பணப்பார்சல் தன்னைப் பார்த்துக் கண்சிமிட்டுவதாகத் தோன்றியது பரீதுக்கு. மனதிற்குள் சிரித்துக்கொண்ட அவன் மெதுவாக இளைஞனின் தோள்களுக்கு மேலாக தன் தலையை நீட்டி 'எட்டிப் பார்த்தான். அங்கே அந்த இளைஞனுக்கு முன்னால், தன் கண்களிரண்டின தும் பார்வையை இழந்த நடுத்தர வயதினர் ஒருவர் தரையில் உட்கார்ந்தி ருந்தபடி ஒரு பலகைப் பெட்டியில் சிறுசிறு பொருட்களை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார்.

''ப்பூ...... இதையா இவன் இவ்வளவு நேரமா ஏதோ பெரிய விஷயம் மாதிரி வாயப்பிளந்து பார்த்துகிட்டு இருக்கான்....? நானும் என்னவோ ஏதோன்னு நெனச்சிட்டேன். ஆளப்பார்த்தா சரியான பட்டிக்காட்டான் போலவும் தெரியுது...!'' எக்காளமாக மனதிற்குள் நகைத்துக் கொண்டவன்,

''சரி....சரி நீ அந்தக் குருட்டுப் பயலக் கவனிச்சிட்டே இரு....! நான் ஒன் கையில இருக்கிற பார்சலக் கவனிக்கிறேன்...!'' என மனதிற்குள் கூறியபடி சரியான தருணம் வரும்வரை தானும் அந்த வியாபாரியைப் கவனிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.

அந்தப் பார்வையில்லாத வியாபாரியைப் பார்க்கப் பாரக்க பரிதாபமாக இருந்தது இளைஞனுக்கு,

''கண்பார்வை தான் இல்லாட்டியும் எவ்வளவு திறமயா யாவாரம் செய்றாரு...! எப்பிடி சுறுசுறுப்பா இயங்குறாரு...! 'ஆக்கள் கேக்குற சாமானக் கொடுத்து அதுக்குப் பெறுமதியான காசையும் வாங்கி மீதி மிச்சத்தையும் சரியாகவே கொடுக்கிறாரே...!கண் பார்வை இல்லாட்டியும் அதுக்கு நிகரா மத்த எல்லாத் தன்மைகளையும் அல்லாஹ் அள்ளிக் கொடுத்திருக்கானே! அல்ஹம்துலில்லாஹ்'' என வியந்து படைத்தவனுக்கு நன்றி பகர்ந்து கொண்ட இளைஞனின் இமைகள் ஏனோ ஈரமாயின.

அந்த வியாபாரியிடமிருந்து ஏதாவது பொருட்களை வாங்க வேண்டுமென்ற மன உந்துதலினால் அவனது கால்கள் அந்த இடத்தை விட்டு அசைய மறுத்தன. எனவே, இருபது ரூபாவுக்கு பொருட்களை வாங்கிக் கொண்டவன் ஐம்பது ரூபா நோட்டொன்றை அவருக்குக் கொடுத்தான். அதனைத் தடவிப் பார்த்து இனங்கண்டு கொண்ட வியாபாரி, மீதிப்பணமாக மூன்று பத்து ரூபா நேட்டுக்களை அவனுக்கு நீட்டினார்.

கண்பார்வையில்லாத வியாபாரி மீது ஏற்படட் கருணையினால் அதனை வாங்க மறுத்த இளைஞன்,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''நீங்களே அந்த மீதிப் பணத்த வச்சிக் கொள்ளுங்க...!" என்றான்.

என்ன தம்பி இது....? இதுவெல்லாம் எனக்குப் பிடிக்காது. நான் யாருக்கிட்டே இருந்தும் ஒரு சதமாவது கைநீட்டி வாங்க மாட்டேன். இந்தாங்க.... பிடிங்க..!'' என்றுகூறியபடி அந்த நோட்டுக்களை முன் பக்கமாக நீட்டினார் வியாபாரி.

''அப்பிடிச் சொல்லாதீங்க...! இத என் அன்பளிப்பா வச்சிக் கொள்ளுங்க....!'' என்று அவன் கூறியும் வியாபாரி அதனை வாங்க மறுத்து விட்டார். அவரின் நேர்மையான குணத்தினால் நெஞ்சம் நெகிழ்ந்து நின்றிருந்தான் இளைஞன். இத்தனையையும் வைத்த கண்வாங்காது தன் நோக்கத்தையும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தான் பரீத்.

அந்த மனிதருடன் சிறிது கதைத்துப் பார்க்க வேண்டும் போல் இருந்தது இளைஞனுக்கு,

''நானா.... ஓங்களுக்கு எப்போதிருந்து இப்பிடிக் கண்....?" அவன் கேட்டு முடிக்கு முன்பே விரக்திப் புன்னகையொன்றை உதடுகளிலே நெளியவிட்ட வியாபாரி,

''தம்பி .... பிறந்த நாள் தொட்டு இந்த உலகத்தை நான் என் கண்ணால பார்க்கல்லப்பா...! உலகத்தப் பாக்காட்டியும் பரவாயில்ல... என்னப் பெத்த தாயக்கூட ஒரே ஒரு தடவையாவது பாக்குறதுக்குக் கொடுத்து வைக்காதவன் நான்."

''கவலப்படாதீங்க... உங்களுக்கு கண்கள்ள பார்வ இல்லாட்டாலும் மனக்கண் நல்லாவே இருக்கு. அதுபோதும்!" ஆறுதல் கூறிய இளைஞன் தொடர்ந்தும்,

''நீங்க கல்யாணம் கட்டியிருக்கீங்களா.....?" என்று கேட்டு வைத்தான்.

''ஆமா தம்பி....' இப்போ எனக்கு பெரிய பிள்ளைகள் கூட இருக்காங்க. மூத்த மகன் ''அட்வான்ஸ்லெவல் படிக்கிறாரு...! என் பொண்ஜாதி கூட என்னமாதிரி கண்பார்வ இல்லாதவதான். இருந்தாலும் அல்லாட கிருபையால எங்க புள்ளைகள் எல்லோரும் நல்லாவே இருக்காங்க.

''கண்ணுல பார்வ இல்லாத நிலையிலும் இப்படி கஷ்டப்பட்டு உழைக்கிறீங்களே...! இது உங்களுக்கு சிரமமாக இல்லயா...?'' இளைஞனின் கேள்வியைக் கேட்டு அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

''தம்பி...என் கண்ணுல மட்டும்தான் குறை இருக்கு. ஆனாலும் அது கூட எனக்குப் பழக்கமாயிட்டது. அல்லா தந்த கைகள் ரெண்டுமிருக்கு. அதுல பலமிருக்கு. உயிர் இருக்குற வரைக்கும் உழைக்கிற உறுதி மனசுல இருக்கு. அதனால இப்படி உழைக்கிறதுல ஒரு சிரமமுமே எனக்கில்ல. பதிலா என் மனசுக்கு ஆறுதலா இந்தத் தொழில் இருக்கு தம்பி." நிதானமாகக் கூறினார் அவர்.

''கண்பார்வை இல்லாத உங்ககிட்ட இருக்கிற தன்னம்பிக்கையும், நேர்மையும், மத்தவங்ககிட்ட கை நீட்டாம வாழ்ற தன்மானமும் கண் பார்வ உள்ளவங்ககிட்ட கூட இல்லயே...! அத நெனச்சாத்தான் ரொம்பக் கவலையாயிருக்கு....!" தான் வாழும் சமூகத்தின் சில அங்கத்தவர்கள் குறித்துக் கவலைப்பட்டான் இளைஞன்.

''உண்ம தான் தம்பி. அங்கங்கள்ல எந்தக் குறையுமேயில்லாம, திடகாத்திரமா வாழ்றவங்க கூட இன்டைக்கு நேர்மையான முறைல கஷ்டப்பட்டு உழைக்காம பொய், களவு, சூது இப்பிடி குறுக்கு வழியில போய் சம்பாதிக்கிறாங்க...! மனச்சாட்சியக் கொன்று புதைச்சிட்டு மத்தவங்க பொருளையும், சொத்தையும் அபகரிச்சி வாழ்றாங்க. இது எவ்வளவு கீழ்த்தரமான, வெக்கப்பட வேண்டிய விஷயம். பாத்தீங்களா...?"

''ஆமா ... உங்க மாதிரி ஆக்களக் கண்டு தான் இந்த மாதிரி ஆக்களுக்கு வெக்கம் வரணும்..! அவங்க திருந்தணும்! அப்படியும் அவங்க திருந்தல்லைன்ன நிச்சயமா அவங்க மனிதர்களேயல்ல. மனித உருவில வாழ்ற மிருகங்கள்...'" கவலையோடு கூறினான் இளைஞன்.

இத்தனையையும் கேட்டபடி - பார்த்தபடி மரமாக, சிலையாக எல்லாமே அவனாக நின்றிருந்த பரீதின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் உருண்டு விழுந்தன.

அந்த வியாபாரியும், இளைஞனும் பரிமாறிக் கொண்ட ஒவ்வொரு வார்த்தைகளும் அவனின் குற்றமுள்ள நெஞ்சிலே கூரிய முட்களாய்ப் பாய்ந்தன. இப்போது தன் ஈனத்தொழிலை நினைக்க நினைக்க அவனுக்கு வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை நாளும் மனக்கண்கள் குருடாகிப் போன நிலையில், இருள் சூழ்ந்திருந்த அவன் இதயம் உதயத்தைக் கண்ட போது, முன்பொரு போதும் இல்லாத மன அமைதியும், மனவலிமையும் அவனுள் உண்டாயின. நீர் நிறைந்த கண்களுடன் அந்த விழிப்புலன் இல்லாத வியாபாரியை நிமிர்ந்து பார்த்தான் பரீத்...அமைதியான அந்த முகத்தில் தன்னம்பிக்கை ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்தது. பின், தூரத்தே வெறித்துப் பார்த்தான் அங்கே... கண்ணுக்கெட்டிய தொலைவில் ஒரு லொறியிலிருந்து மூடை மூடைகளில் சாமான்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு தீர்மானத்துடன் அந்த வியாபாரியை மீண்டுமொரு தரம் பார்த்த பரீத், அந்த இடத்தை நோக்கி வேகமாகத் தலை நிமிர்ந்து நடந்தான்.

எதற்காக.......? அந்த மூடைகளுக்கு முதுகு கொடுப்பதற்காகத் தான்.

*நன்றி:- கல்ஹின்னைத் தமிழ் மன்றத்தின் (50வது நூல்)*
*பொன்மலர் வெளியீடு 1989.*





# புலரும் புதிய உறவுகள்.



உலகை மூடியிருந்த இருள் மெல்ல மெல்ல நீங்கி பொழுது புலர்ந்தது. இதே போல் எமது நாட்டு மக்களின் வாழ்வில் சூழ்ந்து கொண்டிருக்கின்ற இருளும் நீங்கி எல்லோர் வாழ்விலும் விடிவு ஏற்படாதா என ஒவ்வொரு மனித மனமும் ஏங்கிய வண்ணமே இருக்கின்றன.

அந்தக் கிராமத்தில் மூவின மக்களும் கலந்தே வாழ்ந்து வருகின்றனர். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவல நிலை அவர்கள் வாழ்விலும் பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்கிறது. அந்த மக்களில் பலர் ஒற்றுமையாக வாழ்ந்த போதிலும், சிலர் இன-குலப் பெருமைகளில் மூழ்கிப்போய் ஒருவரைஒருவர் மதிக்கத் தவறியவர்களாக வாழ்வதும் உண்மை தான். இதனால் அவர்களுக்குள் ஏற்படும் சிறு பிரச்சினைகளும் பெரிதாகிப் போன சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை.

பயங்கரவாதம் தலைவிரித்தாடும் நாட்டில் யுத்தத்தாலும், கலவரங்களாலும் பாதிப்படைந்த பகுதிகளில் இந்தக் கிராமமும் ஒன்று. உன்னதமான உயிர்களையும், உடைமைகளையும் பறிகொடுத்த அம்மக்களின் முகங்களில் நீண்ட நாள் சோகம். மாதக் கணக்கில் சிரிக்க மறந்த உதடுகள். இந்தக் கோலத்தில் அவர்கள் நடைப்பிணங்களாக, விரக்தியின் விளிம்பிலே வாழ்கின்ற நிலை. இது சர்வசாதாரணமாகிப் போன ஒரு அவலம்.

கிராமத்தின் மத்தியில் தான் சுந்தரத்தின் வீடு அமைந்துள்ளது அவனது அடுத்த வீட்டில் சகோதர இனத்தவரான சிரிபால தனது மனைவியுடனும், மகனுடனும் வாழ்ந்து வருகின்றான். அந்த இரண்டு வீடுகளுக்கும் இடையே இருபத்தைந்து அடி தூரம் கூட இடைவெளி இருக்காது. இருப்பினும் அவன் மனதளவில் பெரிய இடைவெளியே காணப்பட்டது. அவன் சுந்தரம் குடும்பத்தை மனதார வெறுத்தே வந்தான். சுந்தரமும் அவன் மனைவி அன்னம்மாவும் அவர்களை நெருங்கிப் போனபோதெல்லாம் அவன் விலகியே போனான். இது அவன் மனைவி குமாரிக்குப் பிடிக்கவேயில்லை.

''என்னங்க...அவங்க எவ்வளவு நல்லவர்களா இருக்காங்க...! நீங்க ஏன் அவங்கள வெறுக்கிறீங்க...? அவங்களப் பார்க்குற நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் ஒரு பிராணியைப் பார்க்கிறது போல அருவருப்படைறீங்க...? இங்க பாருங்க. நாங்க இனத்தால வேறுபட்டாலும், எல்லோரும் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் தான். எல்லாரும் ஒரே நாட்டவங்க. நாங்க எல்லாரும் அன்போடும் புரிந்துணர்வோடும் ஒற்றுமையாக வாழணும்...! என்று அவள் கூறும் பொழுது ''குமாரி... எனக்கொன்றும் நீ புத்தி சொல்ல வேண்டாம். உன் வேலய நீ கவனி. எனக்கு அந்த ஆக்களக் கண்டாலே பிடிக்காது. நீ அந்தக் குடும்பத்தோட எந்த உறவும் வைக்க வேண்டாம்'' என்று கண்டிப்புடன் கூறி விடுவான் சிரிபால.

சிரிபாலவின் ஒரே மகனுக்கு வயது ஐந்து தான் இருக்கும் சுந்தரத்திற்கும் அதே வயதில் ஒரு மகன். இருவருமே நல்ல நண்பரகள். கள்ளம் கபடம் தெரியாத அந்தப் பிஞ்சுகளைப் பெற்றோரிடமுள்ள கசப்புணர்வு எதுவும் செய்யவில்லை. சிரிபால காணாத போதெல்லாம் இருவரும் சேர்ந்தே விளையாடுவார்கள்.

ஒருநாள் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது சிரிபால வந்துவிட்டான். அடுத்த வீட்டுச் சிறுவனோடு தன் மகன் விளையாடுவதை அனுமதிக்க அவன் மனம் இடந்தரவில்லை. எனவே சுந்தரத்தின் மகனை விரட்டி விட்டு,தன் மகனை இழுத்துக் கொண்டு போய் முதுகிலே நன்கு அடித்து,

''இனிமேல் அந்தப் பயலோட விளையாடுவதக் கண்ட கால முறிச்சிப் போடுவேன்'' என்று கண்டித்தான்.

தந்தையின் கண்டிப்பைச் சிறுவனால் ஜீரணிக்க முடியவில்லை. வீட்டில் சேர்ந்து விளையாடுவதற்கு உடன் பிறப்புக்கள் இல்லாத நிலையில் அவனுக்கு சுந்தரத்தின் மகனுடைய நட்புத் தேவைப்பட்டது. அந்த நட்பை இழக்கச் சிறுவன் தயாராக இல்லை. இருப்பினும் தந்தையின் கோபத்திற்கு ஆளாகி அடிபடவும் அவனுக்கு முடியவில்லை.

தந்தையின் கண்டிப்பும், நண்பனைக் காணாத கவலையும் அவனை இரண்டு நாட்கள் காய்ச்சலால் படுக்கையில் தள்ளி விட்டது. அவன் கடுமையான காயச்சலால் வாய் பிதற்றினான். ரமேஷ்...ரமேஷ்.. என்று விம்மியழுதான். இருப்பினும் சிரிபாலவின் மனம் இளகவில்லை. இந்தப் பாறை இளகாதா என குமாரியின் இதயம் அழுதது.

நாட்கள் யாரின் வரவுக்காகவும் காத்திராமல் தன்பாட்டில் ஓடின. ஒரு நாள் கர்ப்பவதியான குமாரி வீட்டின் கொல்லைப் புறத்தில்



உட்கார்ந்து வருத்தத்தோடு வாந்தியெடுத்துக் கொண்டிருந்தாள். அவள் கணவன் சிரிபால வீட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அன்னம்மா ஓடோடிவந்து அவள் தோள்களை ஆதரவாகப் பற்றி முதுகிலே தடவி விட்டாள். பின் அவளைப் பத்திரமாக வீட்டுக்குள் அனுப்பிவிட்டுத் திரும்பினாள்.

அவளுக்கு வாய்க்குச் சுவையாக எதையாவது சமைத்துக் கொடுக்க விரும்பிய அன்னம்மா அவளுக்கென்று விஷேசமாக உணவு தயாரித்து எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தாள். வேண்டாம் என்று மறுக்க முடியாத நிலையில், கணவனை நினைத்துப் பயந்தவளாக அதனை வாங்கி மேசை மீது வைத்தாள் குமாரி. அன்னம்மா அங்கிருந்து வெளியேறவும், குமாரியின் கணவன் வீட்டிற்குள் நுழையவும் சரியாக இருந்தது. அன்னம்மா தன் வீட்டுக்கு வந்து விட்டுப் போவதைக் கண்டதும் அவன் ஆத்திரம் அளவு கடந்தது. அன்று அவன் குடித்திருந்ததால் மிகவும் கோபமடைந்தான். தனக்குத் தெரியாமல் தன் மனைவி அவளுடன் பழகுவதை அவனால் பொறுக்க முடியவில்லை. சாரனை உயர்த்திக் கட்டிக் கொண்டு சுந்தரத்தின் வீட்டைப் பார்த்துக் கொண்டு கெட்டவர்த்தைகளால் திட்டித் தீர்த்த அவன், மாறாத அதே கோபத்துடன் அவள் கொண்டுவந்து கொடுத்த உணவைப் பீங்கானுடன் சேர்த்து குப்பையில் வீசினான். இக்காட்சியைக் கண்ட அன்னம்மாவின் இதயம் வெடித்துச் சிதறியது. அவள் கண்கள் பனித்தன.

''சே..... இப்படியும் ஒரு மனிதனா...! நாங்க இவனுக்கு ஒரு குற்றமும் செய்யவில்லையே! நாங்க தமிழர் என்றதால இவ்வளவு தூரம் எங்கள வெறுக்கிறானே! நாங்களும் மனிதர் தானே !''என அவள் தனக்குள்ளேயே அழுது கொண்டாள்.

இச்சம்பவம் நடந்த பின் கூட பல தடவைகளில் நன்றாகக் குடித்துவிட்டு வந்து, சுந்தரத்தையும் அன்னம்மாவையும் வீண் சண்டைக்கு அழைப்பான். அவர்கள் பொறுமையாக நடந்து கொள்வார்கள்.

இப்படியான நேரங்களில் எல்லாம் இவர்களின் முன் வீட்டில் வசிக்கும் இஸ்லாமியரான 'காஸீம்டிரைவர்' என எல்லோரும் அன்பாக அழைக்கும் காஸீம் காக்கா தான் இரு தரப்பினருக்கிடையிலும் ஒற்றுமைப் பாலமாக இருந்து சமாதானம் செய்வார்.

சிரிபாலவுக்கு காஸீம் டிரைவர் மீது மதிப்பு அதிகம். எனவே அவர் பேச்சுக்கு அவன் காது கொடுப்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘இங்க பாருங்க சிரிபால நீங்க சிங்களவர் நான் முஸ்லிம் அவங்க தமிழர். இது உண்ம தான். இருந்தாலும் நாங்க எல்லாரும் ஒரே தாய் பெற்ற பிள்ளைகள் போலத்தான். ஆமா... நாங்க எல்லாரும் ஒரே நாட்டவர்கள். ஸ்ரீலங்காத் தாயின் பிள்ளைகள். ஒருதாய்ப் பிள்ளைகளென்டா அவங்க ஒருத்தருக்கொருத்தர் உதவியாக அன்பாக, ஆதரவாக, ஒற்றமையாக வாழணும். அவங்களுக்குள்ள பிளவோ, பிரிவோ இருக்கக் கூடாது நாங்க எல்லாரும் ஒரு கொடியில் பூத்த பூக்கள் போல சிரிபால...இனங்கள்ல ரெண்டு தான் இருக்கு ஆனால் நீங்க நினைக்கிற மாதிரி இல்ல. மனித இனம், ஒன்று மிருக இனம் மற்றொன்று. இதுல உயர்ந்த இனமான மனித இனத்துக்குள்ள நாம் இருக்கிறோம். எங்களுக்குள்ள வேறுபாடுகளை வளர்த்து நாங்க மிருக இனத்துக்கு மாறக்கூடாது .இன-குல வேறுபாடுகளால நாம பிளவு படாம ஐக்கியமாக வாழ்ந்தாத் தான் எங்களப் பெற்ற இந்த நாடு பெருமைப்படும். புரிஞ்சுதா...?” என்று காஸீம் காக்கா சொன்னதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சிரிபால. இருந்தாலும் வேதாளம் முருங்கைமரம் ஏறின கதையாகத் தான் அவனது செயல்கள் இருந்தன. எத்தனை சமாதானக் கதைகளை அவன் காதுகள் கேட்டபோதும், அவனது மனதின் அடியில் வேரூன்றிப் போயுள்ள இனத்துவேஷத்தை யாராலும் பிடுங்கியெறிய முடியவில்லை.

பிரச்சினைகளுக்குப் பயந்து மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் சுந்தரமும், அன்னம்மாவும் வாழ்ந்து வந்தார்கள்.

நாட்கள் வாரங்களை விழுங்கி ஏப்பமிட்டபடி ஓடிக்கொண்டிருந்தன. மாதங்கள் சில பிறந்து மடிந்தன.

அது ஒரு இரவு. மணி பன்னிரண்டு இருக்கும் தூக்கத்திலிருந்து விழித்த தனது கைக்குழந்தைக்கு அன்னம்மா பாலூட்டிக் கொண்டிருந்தாள். இரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு வந்த அந்த முனகல் ஒலி குமாரிக்குப் பிரசவ வேதனை கண்டிருப்பதை அவளுக்கு அறிவித்தது. இரண்டு தினங்களாக சிரிபால வீட்டில் இல்லை. என்பதை அறிந்து கொண்ட அன்னம்மா சிறிதும் தாமதியாது, அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த கணவனைத் தட்டி எழுப்பினாள்.

‘‘என்னங்க.. கொஞ்சம் எழும்புறீங்களா....? நம்ம அடுத்த வீட்டுக் குமாரிக்கு பிரசவ வேதன கண்டிருக்குஅந்த சிரிபாலவும் வீட்டுல இல்ல போல விளங்குது. வாங்க அவசரமாகப் போய்ப் பார்ப்போம்.”அன்னம்மா அவசரப்படுத்தினாள் அவளைத் சுடுமாற்றத்துடன் பார்த்த அவன்,

‘‘சிரிபாலவுக்கு எங்களக் கண்டாலே பிடிக்காது அதனால நாங்க அங்க போகத் தான் வேணுமா!” என்று திருப்பிக் கேட்டான் சுந்தரம்.

‘‘இப்போ அதையெல்லாம் பேசிக்கிட்டு இருக்க முடியாது. இப்போ ஆபத்தான நிலைல இருக்குர குமாரியக் காப்பாத்தனும். அது தான் மனிதத் தன்மை. நாங்க ஒரு நிமிஷத்தையும் வீணாக்க முடியாது” என்று கூறிய அன்னம்மா தோளில் கிடந்த குழந்தையைத் தொட்டிலில் வைத்துவிட்டு அடுத்த வீட்டை நோக்கி நடந்தாள். சுந்தரம் அவள் பின்னால் நடந்தான்.

‘‘குமாரி....குமாரி கதவத் திறவுங்கோ...” கதவிலே தட்டினாள் அன்னம்மா. வருத்தத்தோடு அடிவயிற்றைப் பிடித்தபடி வந்த குமாரி கதவைத் திறந்தாள். நிலைமையை விளங்கிக் கொண்ட அன்னம்மா.

‘‘என்னங்க... அவசரமா முன்வீட்டு டிரைவர் காஸீம் காக்காவைக் கூட்டிக் கொண்டு வாங்க.. கெதியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகணும்” என்று பதறினாள்.

சில நிமிடங்களின் பின் காஸீம் காக்காவின் வேன் வீட்டின் முன் வந்து நின்றது. ‘‘நாங்க குமாரிய ஆஸ்பத்திரியில சேர்த்திட்டு வாறோம். நீங்க போய்ப் புள்ளைகள பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்க” என்று கூறிய அன்னம்மா, குமாரியைத் தாங்கிப் பிடித்தபடி வாகனத்தில் ஏற்றி விட்டு தானும் ஏறிக் கொண்டாள் அன்னம்மாவின் கைகளை எடுத்து நீர் வடியும் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள் குமாரி. வாகனம் புழுதியைக் கிளப்பி விட்டு விரைந்து சென்றது. அங்கே இன ஒற்றுமைக்கான ஒரு வித்து முளைவிட்டுக் கொண்டிருந்தது.

உரிய நேரத்தில் குமாரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதால் எவ்வித சிக்கலுமின்றி பிரசவம் நடந்து முடிந்தது. அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அடுத்த நாள் ஊர்வந்து சேர்ந்த சிரிபால காஸீம் காக்கா மூலம் விடயங்களை அறிந்து கொண்டான். உடனே அவன் கடின மனதில் கூட ஒரு சிறு நெகிழ்ச்சி ஏற்படத்தான் செய்தது. இருந்தாலும் அதனை வெளிக் காட்டிக் கொள்ள அவனது பிடிவாத குணம் சற்றும் இடம் தரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நகர்ந்தன. இரண்டு மாதங்கள் கடந்திருக்கும். ஒரு நாள் திடீரென்று குமாரிக்கு ஜன்னி கண்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

குழந்தையும் தாயும் இந்த வியாதியின் வரவால் பிரிக்கப்பட்டனர். குழந்தை பசியால் கதறியது. சிரிபால புட்டிப்பால் தயாரித்துக் கொடுத்தான். குழந்தை அதனைக் குடிக்காது தொடர்ந்தும் அழுது கொண்டிருந்தது. குழந்தை தாய்ப்பாலுக்காக, தாயின் அரவணைப்புக்காக ஏங்கியழுதது. சிரிபால செய்வதறியாது தடுமாறிப் போனான். தாயைப் பிரிந்து தன் பிஞ்சுக் குழந்தை அழும் அழுகையை அவனால் தாங்க முடியவில்லை. அவன் கண்களும் முதல் தடவையாகக் கண்ணீரை வடித்தன.

நீண்ட நேரமாகக் குழந்தை அழுதுகொண்டிருப்பதை அடுத்த வீட்டு அன்னம்மாவால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. அவளும் ஒரு தாயல்லவா..? குழந்தையை வாங்கிச் சாந்தப் படுத்த அவள் மனம் துடிதுடித்தது. முன்வீட்டுக் காஸிம் காக்காவை அனுப்பி சிரிபாலவிடமிருந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டாள். அவனின் பிடிவாதக் குணத்தை அந்தப் பிஞ்சுக் குழந்தையின் அழுகை குறைத்து விட்டிருந்தது.

குழந்தையைக் கையிலெடுத்த அன்னம்மா அதனை வாரியணைத்து அந்தப் பிஞ்சுக் கன்னங்களில் முத்தமிட்டாள். அது அழுகையை நிறுத்தி தன் பொக்கை வாய் திறந்து சிரித்தது. புட்டிப் பாலைத் தயாரித்துக் கொடுத்தாள். அதில் கொஞ்சமும் குழந்தை குடிக்கவில்லை. அதுபசியால் அழுதது. அவள் சிறிதும் தாமதிக்கவில்லை. தன் ரவிக்கையைத் திறந்து மார்பை வெளியே எடுத்து குழந்தையின் வாயில் வைத்தாள். குழந்தை அழுகையை நிறுத்தி விட்டு அவள் மார்பில் முகம் புதைத்து பாலை உறிஞ்சிக் குடித்தது.

குழந்தையை அன்னம்மாவிடம் கொடுத்த காஸீம் காக்கா நேராக சிரிபாலவின் வீட்டுக்குப் போனார். குழந்தையின் அழுகுரல் ஓய்ந்திருந்த தைக் கண்ட பிறகு தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது. சிரிபாலவிடம் சென்ற காஸீம் காக்கா,

''சிரிபால.... பார்த்தீங்களா.....? உங்களால நிறுத்த முடியாமல் போன அழுகைய அவ அன்னம்மா நிறுத்திட்டா. நல்ல யோசிச்சிப் பாருங்க... நீங்க அந்தக் குடும்பத்துக்கு எத்தனையோ கெடுதி செய்து வெறுத்து ஒதுக்கியும், அது எல்லாத்தையும் மறந்து ஆபத்துல எல்லாம் உதவியது அவங்க தான். இனங்கள்ட பெருமை பேசி யாரும் சாதிச்சது எதுவும் இல்ல. அப்பாவி உயிர்கள் வீணாகப் பலியாகியதும், உடைமைகள் அழிந்ததும் தான் மிச்சம். இனிமே எங்கயாருக்கிடையிலும் இந்த வேற்றுமை கள் இருக்கக் கூடாது. வாங்க நாங்க ரெண்டு பேரும் சுந்தரம் வீட்டுக்குப் போவோம்." என்றவர் அன்னம்மாவின் வீட்டை நோக்கி நடந்தார். அவனைப் பின்தொடர்ந்து அமைதியாக நடந்தான் சிரிபால.

வேற்றுமையுணர்வுகளைத் தொலைத்து விட்டு வந்திருக்கும் சிரிபாலவின் முகத்தில் சிநேகபூர்வமான புன்னகை இழையோடியது. அவன் கண்கள் தனது குழந்தையை அங்கே தேடின. அன்னம்மா அந்தக் குழந்தையை மார்போடு அணைத்தபடி இருந்தாள். குழந்தை அவளிடம் பால் குடித்து விட்டு நிம்மதியோடும், நிறைவோடும் பசியாறிய நிலையில் கண்ணுறங்கிப் போயிருந்தது. இக்காட்சியைக் கண்ட சிரிபால நெகிழ்ந்து நின்றான். அவன் கண்கள் உணர்ச்சிப் பெருக்கால் நீரை வடித்தன. அவனது வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்கு மறுத்தன. தடுமாறிய அவன் நீர் நிறைந்த கண்களுடன்,

''அக்கா.... என்ன மன்னிச்சிடுங்க உங்க உயர்ந்த மனங்களப் புரிஞ்சிக் கொள்ளாம இத்தன நாளும் நான் நடந்து கொண்டத நினைத்து இப்போ வெட்கப்படுறேன், வேதனைப்படுறேன், இனிமே எங்களுக்கிடையில எந்தவித வேற்றுமையும் இல்ல. காஸீம் காக்கா அடிக்கடி சொல்றது போல நாங்கலெல்லாம் ஒரு கொடியில் பூத்த பூக்கள் தான" என்று நாத்தழுதழுக்கக் கூறிய சிரிபால சுத்தமான மனதுடன் வீட்டை நோக்கி நடந்தான். தன்னுடைய முயற்சிக்கு வெற்றி கிடைத்ததை நினைத்துப் புன்முறுவலோடு அவனைப் பின்தொடர்ந்தார் காஸீம் காக்கா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஆத்மா அழுகிறது...!

``கையிலிருந்த கோடாரியை நிலத்திலே வைத்து விட்டு நிமிர்ந்த காதர் காக்கா, ``ஹூம்..." நீண்டதோர் பெருமூச்சை ஊதித் தள்ளியவராக, தன் உடலிலிருந்து வழிந்தோடும் வியர்வையைத் துடைத்துக் கொள்கிறார்.

இந்தக் கல்யாண வீட்டில் விறகு கொத்துதல், வீட்டுச் சூழலை துப்பரவு செய்தல் என்று வேலைகளைப் பொருந்திக் கொண்ட காதர் காக்கா சில தினங்களாக இங்கே தான் வேலை செய்து வருகிறார். உழைப்புக்கேற்ற ஊதியம், உரிய நேரங்களில் சாப்பாடு, இடைக்கிடை தேனீர் என வீட்டினர் கவனித்துக் கொண்டனர்.

``தேத்தண்ணி கொஞ்சம் குடிக்கணும் போல இருக்கு...!"ள என்று காதர் காக்கா நினைத்துக் கொண்டிருக்கும் போதே, ``காதர் காக்கா.. இந்தாங்க தேத்தண்ணி. இதுல கேக்கும் இருக்கு சாப்பிட்டுட்டுக் குடியுங்க" குடிச்சிப்போட்டு கொஞ்சம் ரெஸ்டாக இருந்துட்டு வேலயச் செய்யுங்க! அவசரமில்ல. ஆறுதலாச் செய்தாப் போதும்..." என்று கூறி விட்டு வீட்டுக்காரர் அப்பால் போய்விட்டார். ``மனிசன மனுஷனே உறிஞ்சிக் குடிச்சி மத்தவங்களப் பற்றிக் கவலைப்படாத மனிதர்கள் நெறஞ்சி இருக்கின்ற இந்த துனியாவுல இவரப் போலவும் நல்ல மனிதர்கள் இருக்கிறதாலதான் உலகத்துல மழையே பேயுது...." எனத் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

காதர் காக்கா இந்த ஊருக்கு வந்து இரண்டு வருடமிருக்கும். இவர் ஒரு தனிக்கட்டை, ஒரு தினக்கூலி என்பது தான் இவரைப் பற்றி இந்த ஊரறிந்த விடயம். ஆனால் இவரின் பின்னால் விரிந்திருக்கும் நீண்டகதை இங்கு யாருக்கும் தெரிய நியாயமில்லைதான்.

தேனீரைக் குடித்து முடித்த காதர் காக்கா தோளில் கிடந்த துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு களைப்பாறுவதற்காக சற்றுத் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டார்.

``யா அல்லா...! இப்ப உன்னுடைய நல்லடியார்கள் புனிதமான ஹஜ் கடமைய நிறைவேத்திக் கொண்டிருப்பாங்க. நான் வேணுமென்றே அந்தப் பாக்கியத்த இழந்துட்டேன். உடம்புல சக்தியையும் பண வசதியையும் நீ எனக்கு நிறைய தந்திருந்தும், கடமைச் செய்றதுக்கு நான் கஞ்சத்தனம் காட்டிட்டேன். யா... அல்லா...! என்ன நீ மன்னிச்சிடு நாயனே! இப்ப என்னோட ஆச, ஹாஜத்து எல்லாம் ஹஜ்ஜுப் பயணம் ஒன்று தான். அதுக்காகத் தான். என் வயசையும் மீறி கடுமையா உழைச்சிட்டு வாறேன் ஆயுள்ள ஒரு தடவையாவது எனக்கு அந்தப் பாக்கியத்தத் தந்துவிடு நாயனே! வசதியும், வாய்ப்பும் இருக்கிற நேரம் கடமையச் செய்யத் தவறிய நான் உனக்குக் கடன்காரனாக இருக்கிறன். என் கடனத் தீர்க்க எனக்கொரு சந்தர்ப்பம் தா நாயனே!" என மனமுருகி கண்ணீர் மல்க வேண்டிக் கொண்ட காதர் காக்காவின் கண்களின் முன் கடந்த காலம் நிழலாடத் தொடங்கியது.

காதர் முதலாளியென்றால் அந்த ஊரில் தெரியாதவர்கள் இருக்க நியாயமில்லை. ஏனென்றால் அந்த ஊரில் விரல் விட்டு எண்ணக்கூடிய வசதிபடைத்தவர்களுள் அவரும் ஒருவர். ஊரில் பிரபலமான பிடவைக்கடை இவருடையது. குடியிருக்கும் மாளிகை போன்ற வீடு - வாகனங்கள் வேறு. காதர் முதலாளியின் கடுமையான உழைப்பு அவரைப் பல சொத்துக்களுக்கு அதிபதியாக்கியிருந்தது. இத்தனைக்கும் இவரின் குடும்பம் மிகச்சிறியது. இரண்டு ஆண்மக்களும், மனைவியும் இவருமாக நான்கே நான்கு பேர் தான்.

அவரின் பிள்ளைகள் இருவரும் கொழும்பிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் கற்றுவந்தார்கள். அவர்களுக்கு அவர் எந்தக் குறையுமே வைக்கவில்லை எனவே அவர்கள் பொறுப்புணர்வு இன்றியே வளர்ந்து வாலிபமடைந்தார்கள். தந்தையிடம் இருக்கின்ற பிஸ்னஸ் புத்தியில் சிறிதும் அவர்களிடம் இருக்கவில்லை. எனவே அவர்களுக்கு நல்லதொரு தொழிலை ஏற்படுத்திக் கொடுக்க அவர் ஆசைப்பட்டார்.

காலம் பல வருடங்களை விழுங்கியபடி விரைந்தது. ஒரு நாள் அவள் மனைவி ஸாலிஹா அவரிடம் ``இங்க பாருங்க.... அல்லா எங்களுக்கு நல்ல வசதியத் தந்திருக்கான். சொத்துபத்தென்று நிறைய இருக்கு. அதனால இந்த வருஷமாவது நாங்க ரெண்டு பேரும் ஹஜ்ஜுக்குப் போகணும்.!" என்று அவள் தன் மன ஆதங்கத்தை வெளியிட்ட போது அவர், வாய் விட்டுச் சிரித்தபடி

``அடிப் பைத்தியக்காரி...! இப்போ அதுக்கேன் அவசரப்படணும்? இன்னும் ஆக வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு மகன்மாருக்கு ரெண்டு கடை போட்டுக் கொடுக்கணும். அதுக்குப் பொறகு தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ஜுக்குப் போறதப் பத்தி யோசிக்கணும்'' என்று கூறி அவளின் வாயை அடைத்து விட்டார் காதர் முதலாளி.

நாட்கள் நகர்ந்தன காதர் முதலாளி தன் சொந்தச் செலவில் இரண்டு கடைகளை எடுத்து மகன்மாருக்குக் கொடுத்தார். ஒன்று நகைக்கடையும், மற்றது புடவைக்கடையுமாக காட்சியளித்தன. அவர்களும் ஒருவாறு தொழிலைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அதற்குள் அடுத்த ஹஜ்ஜும் வந்து விட்டது. வாழ்நாளில் ஒரு தடவையாவது புனித கஃபாவைத் தரிசிக்க வேண்டுமென ஸாலிஹாவின் மனம் துடிதுடித்தது எனவே கணவரிடம் ''நாங்க இந்த முறையாவது ஹஜ்ஜுக்குப் போகணுங்க எங்களவிட வசதியில குறைஞ்சவங்களே அந்தக் கடமையச் செஞ்சீட்டு வாராங்க நீங்க மட்டும் தட்டிக் கழிச்சிகிட்டே வாறீங்க. எனக்கென்டா உங்க போக்கே பிடிக்கல்ல. நாளைக்கு அல்லாஹுதஆலா. முன்னிலையில பதில் சொல்ல வரும் '' என்று கூறிய போது,

''ஸாலிஹா இன்னும் கொஞ்ச காலம் பொறுங்கம்மா இப்பதான் பிள்ளைகள் பிஸ்னஸ் பழகிட்டு வாராங்க. இப்போ இன்னொரு வீடும் கட்டணும். அதுக்குப் பொறகு ரெண்டு பேருக்கும் நல்ல எடமாப் பாத்து கல்யாணத்தை செய்யோணும்'' என்று கூறி நிறுத்திய போது,

''ஓ... நீங்க அதையும் இதையும் சாட்டாகச் சொல்லி சமாளிச்சிக் கொண்டே போங்க. உங்களுக்கு பணத்துக்கு மேல்ல பணம் சேர்க்குற ஆசையத் தவிர, அத அல்லாட பாதைல செலவழிக்க மனசில்ல. அதாலதான் காலத்தக் கடத்தி கொண்டே போறீங்க. சில பெத்தவங்க '' வீட்டுல குமர்ப்புள்ள இருக்கு. அதுக்குக் கல்யாணம் பண்ணிட்டுத் தான் போகணும் என்று சொல்வாங்க. அது கூட ஓரளவுக்குப் பரவாயில்லை. நீங்க என்னடாவென்றா மகன்மாருக்குக் கடை எடுக்கணும், கல்யாணம் செய்விக்கணும், வீடு கட்டணும் என்று பட்டியல நீட்டி பயணத்த ஒத்தி போட்டுக்கொண்டே போறீங்க. இங்க பாருங்க இப்போ புள்ளைகளுக்கு ஆளுக்கொரு கடை இருக்கு. அவங்க உழைச்சி வீடு கட்டிக் கொள்ளட்டும். வசதி இருக்கிற நேரம் கடமையப் புறக்கணிச்சிட்டு கடைசியில கடமையச் செய்யாமலே மௌத்தாகிப் போனா எங்ககதி என்னாகும்? நாளைக்கு அல்லாட கேள்விகணக்குக்கு யாரும் பதில்சொல்ல மாட்டாங்க. எங்க கபுறுக்கு நாம தான் தேடிக் கொள்ளணும் நல்லா யோசிச்சிப் பாருங்க...'' என்று காரமாக உள்ளத்தை உருக்கும் விதம் அவள் உரைத்தும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகின. அவர் தனது போக்கில்



விடாப்பிடியாகவே இருந்து விட்டார்.

காலம் எந்தக் கவலையுமின்றி உருண்டோடியது. அது அடுத்த ஹஜ்ஜையும் எட்டிப் பிடித்தது. இதற்குள் கடந்த வருட இறுதியிலே காதர் முதலாளி மூத்த மகனுக்கு ஒரு வீட்டையும் கட்டி முடித்து விட்டார். அதேகாலப் பகுதியில் ஒரே தினத்தில் இரண்டு பிள்ளைகளுக்கும் ஆடம்பரமான முறையில் திருமணத்தையும் நடத்தி முடித்து விட்டார். பின் தாம் குடியிருக்கும் வீட்டையும் இளைய மகனுக்குக் கொடுத்து, அவர்களுடனேயே இருவரும் வசித்து வந்தார்கள்.

பிறந்திருக்கும் இந்த வருடத்திலாவது தனது நீண்ட நாள் ஆசைக்குப் பலன் கிடைக்கும், இருவருமாக ஹஜ்ஜுக்குப் போகலாம் என திடமாக நம்பினாள் ஸாலிஹா. இதற்கிடையில் அவரின் பள்ளித்தோழி இன்ஷிரா தானும் தனது கணவரும் இம்முறை ஹஜ்ஜுக்குப் போக நாடியிருக்கும் விடயத்தைக் கூறி, துஆச் செய்யும் படி கூறி விட்டுச் சென்று விட்டாள். தன்னை விட வசதியும் வாய்ப்பும் குறைந்த இனிய நண்பி இன்ஷிராவும் அவள் கணவனும் ஹஜ்ஜுக்குப் போகவிருக்கும் செய்தியால் சந்தோசப்பட்ட அவள் உள்ளமும் அந்தப் புனிதப் பயணத்திற்காக ஏங்கியது'' யா அல்லாஹ்..! இந்த வருஷமாவது என் ஆசைய நிறைவேற்றி வை நாயனே! அவருக்கும் இந்த ஆசையைக் கொடுத்துவிடு நாயனே!'' என அவள் மனம் பிரார்த்தித்துக் கொண்டது.

அன்று மாலை வேளை. காதர் முதலாளி வீட்டில் ஓய்வாக இருந்தார். அப்போது '' அஸ்ஸலாமு அலைக்கும்'' என்றவாறு அங்கு வந்தார் அவரின் அடுத்த கடைக்காரர் பஷீர் நானா. அவரைப் பெரிய பணக்காரர் என்று கூற முடியாவிட்டாலும், ஏதோ சிறியதோர் பெட்டிக்கடை வைத்து, ஹலாலாக உழைக்கும் ஒரு மனிதர் அவர்.

''வஅலைக்குமுஸ்ஸலாம்! வாங்க பஷீர் வாங்க.'' என்று வரவேற்றார் காதர் முதலாளி.

''முதலாளி... நானும் என்ட மனைவியும் இந்த முறை ஹஜ்ஜுக்குப் போக இருக்கிறோம். துஆச் செஞ்சிக்கொங்க'' என்று அவர் கூறியதும், ஆச்சரியத்தால் அதிர்ந்தார் காதர் முதலாளி '' என்ன... நீங்க ஹஜ்ஜுக்குப் போகப் போறீங்களா...?'' நம்பமுடியதவராகக் கேட்டார் அவர்.

''அல்லாஹுத்தஆலா- நாயன் வசதியத் தந்திருக்கான். அதனால நாம் போறதா நிய்யத்து வச்சிட்டோம்.'' என்று கூறிய பஷீர் நானாவை இடைமறித்த அவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘பஷீர்... சொல்றேன்று ஒன்றும் நினைக்காதிங்க உங்க பெட்டிக் கடைய பெரிசா விருத்தி செய்யாம, வீட்டுல கல்யாணத்துக்கு இருக்கிற மகளையும் வச்சிட்டுப் புறப்படுறீங்களே! அதுதான் ஆச்சரியமா இருக்கு!” என தனது அதிர்ச்சியை வெளிக்காட்டினார்.

‘‘அதுலென்ன பெரிய ஆச்சரியம் இருக்குங்க. அதுக்கெல்லாம் அந்த அல்லா இருக்கான். அவன் தருவான். அதப்பற்றி எங்களுக்கு எந்தக் கவலையும் இல்ல. அது சரி.... இந்த முறை நீங்களும் போகப் போறதா லேசாகக் கேள்விப்பட்டேன். உண்மையா..? என்று கேட்டு வைத்தார் பஷீர் நானா.

‘‘பஷீர் நாங்களும் இந்தவருஷம் போகத்தான் நெனச்சிருந்தோம். ஆனாலும் பாருங்க முடியல்லயே! ஏன்னா எங்க கடைக்கு முன்புறமாக உள்ள கடையையும், காணியையும் விக்கப் போறதா அதன் சொந்தக் காரர் சொல்லியிருக்கார். அத வாங்கிப் போட நெனச்சிருக்கேன். அதோட இன்னொன்று பாருங்க.. இந்த வருஷ ஹஜ் யாவார சீசன் காலத்துல வந்திருச்சி ஹஜ் பெருநாள், புதுவருஷ யாவாரமெல்லாம் ஒரே நேரத்துல வந்துட்டதால கடையவிட்டு அசைமுடியல்ல. சம்பாதிக்குற நேரத்துல தான் சம்பாதிக்கனும். சந்தர்ப்பத்த தவற விட்டா நமக்குத் தான் நஷ்டம் ஹஜ்ஜ வேணுமென்றா வேறொரு தடவ செஞ்சிக்கலாம்....” என்று உறுதியாகக் கூறிய போது, அதிர்ந்தார் பஷீர் நானா.

‘‘காதர் முதலாளி...ஏன்ட அறிவுக்குப் பட்டதச் செல்றேன். கோபிக்காதீங்க. பணத்தச் சம்பாதிக்கணும் என்கிற ஒரே நோக்கத்துக்காக, நன்மைய சம்பாதிக்கிறதையும், அல்லாவச் சந்தோசப்படுத்துவதையும் பிற்போடுறது அவ்வளவு நல்லதல்ல. நன்மையச் செய்ய நாம தாமதிக்கக்கூடாது. கொஞ்சம் யோசிச்சி நடந்து கொள்ளுங்க” என்று கூறிவிட்டு விடை பெற்றார் பஷீர் நானா.

அவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த ஸாலிஹாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. இதன்பிறகு ஹஜ் விடயம் பற்றி அவரிடம் பேசுவதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்த அவள், அதன் பிறகு அதுபற்றி வாய் திறக்கவேயில்லை.

வாரங்கள் சில மலர்ந்து உதிர்ந்தன. இலங்கையிலிருந்த ஹஜ்ஜாஜிகள் அனைவரும் ஹஜ்ஜுக்குப் போய்விட்டார்கள். பஷீர் நானாவும் மனைவி சகிதம் புனிதப்பயணம் புறப்பட்டு விட்டார்.



காதர் முதலாளி எவ்விதக் கவலையுமின்றி பெருநாள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் இரவு நேரந்தாழ்த்தி வந்த அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார் கடைப்பக்கமிருந்து ஓடி வந்த ஒருவர் நள்ளிரவு வேளையில் கதவைத் தட்டி மிகவும் பதட்டத்துடன்,

‘‘முதலாளி டவுன்ல கடையொன்றுக்கு நெருப்புப் புடிச்சதால மொத்தம் ஐந்து கடைகள் பத்திக் கொண்டிருக்கு. அதுல உங்க கடையும் ஒன்று தான்!” என்று அவன் கூற வந்த தகவலைக் கூறி முடித்த போது, அவர் இதயத்திலும் தீப்பற்றிக்கொண்டது. மிகவும் ஆடிப் போனார் அவர். கனவிலும் நினைத்திராத விடயம் நடந்து முடிந்த போது அவரால் தாங்க முடியவில்லை.ஓய்வு ஒழிவின்றி கடமைகளைக் கூடப் புறக்கணித்து விட்டு எப்படியெல்லாம் உழைத்துச் சேர்த்தார் என்பது அவருக்குத் தானே தெரியும்.

உடனடியாக அங்கே விரைந்து பார்த்த போது தீயணைக்கும் படையினர் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். எல்லாம் முடிந்து விட்டது. அவரின் கடையில் சுவர்களைத் தவிர எதுவுமே எஞ்சியிருக்க வில்லை. நெஞ்சு பதைபதைக்க கண்களில், இருந்து கண்ணீர் மல்க வைத்த கண் வாங்காது தன் கடையையே வெறித்துப் பார்த்த படி இருந்த காதர் முதலாளியின் கண்களில் அவரின் கடையை அடுத்துள்ள பஷீர் நானாவின் சிறு பெட்டிக்கடை தென்பட்ட போது அவர் வியப்பின் விளிம்பிற்கே போனார். ஏனென்றால் ஐந்து கடைகளை சுட்டுப் பொசுக்கிய நெருப்பு அந்தக் கடையை மட்டும் விட்டு வைத்திருந்தது. எந்தப் பாதிப்புமின்றி அந்தக் கடை தப்பியிருந்தது.

‘‘பஷீர் நீங்க அதிர்ஷ்டசாலி தான். ஏன்னா நிறைய வசதியில்லாத நிலையிலும், கடையையோ, சீசன் யாவாரத்தையோ, வீட்டில் குமர்ப் பிள்ளை இருப்பதையோ பற்றிக் கவலைப்படாம எல்லாத்தையும் அல்லா பார்த்துக் கொள்வான் என்று அவன்ட மேல்ல பாரத்தப் போட்டுட்டுப் போனீங்க. உண்மையிலே அல்லா உங்கட கடயக் காப்பாத்திட்டான். என்னப்பாருங்க.. நான் வசதியிருந்தும் அந்தப் புனிதப்பயணத்தை அலட்சியப்ப டுத்தினேன். அதுக்காகத் தான் எனக்கு இப்படி ஒரு தண்டனையோ..?” என மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டார் காதர் முதலாளி.

இந்தப் பேரிழப்பிற்குப் பின் காதர் முதலாளி சோர்ந்து, நடைப்பிணம் போலானார். அத்தோடு வசதி இருந்தும் ஹஜ் கடமையை நிறைவேற்றத் தவறிய குற்ற உணர்வு அவரைப் போட்டுக் குடைந்து கொண்டேயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஜும்ஆத் தொழுகைக்காக அவர் பள்ளிவாசலுக்குப் போயிருந்தார். இமாம் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அது ஹஜ்ஜைப் பற்றியதாகவேயிருந்தது.

''அல்லாஹ்வின் நல்லடியார்களே! இன்று எம்மில் பலர் வசதியும் வாய்ப்பும் இருந்தும் கூட இந்த வருடம் வேண்டாம் அடுத்தவருடம் ஹஜ் செய்வோம்.'' என்று காலத்தைக் கடத்திக் கொண்டே வருகிறார்கள். அடுத்த ஹஜ் வரும் போது இத்தகையோர் பணவசதி குறைந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டாலும் கூட, வசதியிருக்கும் போது ஹஜ் செய்யாத குற்றத்திற்கு அவர்கள் ஆளாவார்கள். அந்தக் கடமை, கடன் இவர்கள் மீது இருந்துகொண்டேயிருக்கும் . மேலும், போதியளவு வசதியும் தகுதியும் உள்ள ஒருவர் ஹஜ்கடமையை நிறைவேற்றாத நிலையில் மரணித்தால் அவர் யஹூதியாகவோ, நஸாராவாகவோ மரணிக்கட்டும் ''என அருமை நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்" என இமாம் கூறக்கூற காதர் முதலாளியின் இதயம் விம்மியழுதது. அவர் இதயத்தில் இனம்புரியாததோர் பயமும், நடுக்கமும் ஏற்படத் தொடங்கியது.

''யா அல்லாஹ் ..! என்ன மன்னிச்சிடு நாயனே! என அவர் மனம் அழுதபடி பிரார்த்தித்துக் கொண்டது.

நாட்கள் நகர்ந்தன. அவரின் பிள்ளைகள் இருவரும் தொழில்துறையில் அறிவும் ஆற்றலும் இல்லாததால் அவர்களால் தந்தையைப் போல் உழைத்து முன்னேற முடியவில்லை. முடிவில் தந்தையின் சொத்துக்களில் கை வைத்ததோடு கடன்காரர்களாகவும் ஆகி விட்டார்கள்.

அடுத்தடுத்து ஏற்பட்ட கவலைகளால் தளர்ந்து போன ஸாலிஹா பாரிசவாத நோய் என்ற பெயரால் படுக்கையில் தள்ளப்பட்டாள். மிச்சம் மீதி எஞ்சியிருந்ததெல்லாம் அவளின் நோய்க்கே செலவாகியது. இருப்பினும் நோய் தீரவில்லை. அவள் நிரந்தரமாகவே கண்ணை மூடிக் கொண்டாள்.

தாயின் மரணத்தின் பின் அவர்கள் தந்தையை மதிக்க மறந்தனர். உழைப்பின்றி இருக்கும் தந்தை தனயர்களின் பார்வையில் செல்லாக் காசானார். தந்தையை ஒரு சுமையெனவே அவர்கள் இருவரும் கருதினர். பிள்ளைகளின் நன்றி கெட்டதனத்தையும், மனநிலையையும் விளங்கிக் கொண்ட முதலாளி அவர்களுக்கு தொடர்ந்து சுமையாக இருக்க விரும்பாமல் அவர்களை விட்டுப் பிரிந்து வந்து விட்டார். பக்கத்து ஊர்



ஒன்றில் '' காதர் காக்கா" என்ற பெயரில் அவர் இப்போது ஒரு தினக் கூலியாக இருந்து கொண்டிருக்கிறார். நீண்ட. நேரமாக கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த காதர் காக்கா கலங்கிய கண்களுடன்,

''ஸாலிஹா...! நீயும் என்ன மன்னிச்சிடும்மா... முப்பத்தைந்து வருட எங்க தாம்பத்திய வாழ்க்கைல நீ என்கிட்ட தங்க நகைகளையோ, ஆடம்பரமான உடுபுடவைகளையோ கேட்கல்ல. ஊர் சுத்தித்திரியவோ, உல்லாசப் பயணம் போகவோ நீ என்ன அழைக்கல்ல. நீ கேட்டதெல்லாம் ஆசப்பட்டதெல்லாம் இந்தப் புனிதமான ஹஜ்பயணம் ஒன்னுதாம்மா நான் அந்த ஆசையக் கூட நிறைவேத்தத் தெரியாத மடையனாயிட்டேம்மா... இன்ஷா அல்லாஹ் .....நான் என் மௌத்துக்கு முன்னால ஹஜ்ஜுக்குப் பேவேம்மா... அதோட ஏன்ட ஆயுள் நீடிச்சிருந்தா ஒனக்கும் ஒருநாள் ஹஜ் செய்வேம்மா..." எனக் கண்ணீருடன் மானசீகமாக கூறிக் கொண்ட காதர் காக்கா கோடரியைக் கையிலெடுத்து விறகுகளை வெட்டத் தொடங்கினார்.

*நன்றி:-* *இ ஒ.கூ. முஸ்லிம் சேவை*
*ப்ரிய நிலா ஹஜ்மலர் - 2002*
*நவமணி - 24 -02- 2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு  பாலைவனம்....!

அன்புள்ள மகளுக்கு!

நலம் நலமறிய அவா.
இக்கடித்தை அவசரமாகவும், அவசியமாகவும் எழுதுகிறேன் உனக்கு இங்கே ஒரு கல்யாணம் முடிவாகி இருக்கிறது. மாப்பிள்ளைக்கு உன் புகைப்படத்தைக் காட்டினோம். அவருக்குப் பூரண விருப்பம். விரைவில் கல்யாணம் நடைபெற வேண்டும். இந்த மாதத்திற்குள்ளேயே வந்துவிடு. வரும் போது அறிவித்து விட்டு வரவும் அத்துடன் கல்யாணத்துக்குத் தேவையானவற்றை மட்டும் வாங்கிக் கொண்டு வா.

இப்படிக்கு
உன் உம்மா

கடிதத்தைப் படிக்கப் படிக்க ஆகாயத்தில் பறப்பது போன்றிருந்தது ஹஸீனாவுக்கு. அவள் அக்கடிதத்தை எத்தனை தரம் படித்தாளோ தெரியவில்லை. இத்தனை வருடங்களாக எதிர்பார்த்திருந்த மணவாழ்வு இப்போது கிடைக்கப் போவதில் உள்ளூர மகிழ்ந்து கொண்டாள் ஹஸீனா, இத்தனை காலமும் கனவுகளிலும், கற்பனைகளிலுமே வாழ்ந்து கொண்டிருந்த அவள் இனி நிஜமாகவே வாழப்போகிறாள்.

இனி அவளுக்கும் ஒரு கணவன், குழந்தைகள், நிம்மதியான வாழ்வு. இதை நினைக்க நினைக்க அவளுக்குள் தான் எத்தனை சுகம்? ஒரு கணம் தன்னையும் மறந்து புன்னகைத்துக் கொண்டவள், மனம் நிறைந்த இனிய கனவுகளுடன் கண்ணாடியின் முன் நின்று தன் முகத்தை ஒரு தரம் பார்த்துக் கொள்கிறாள். பெயரைப் போல அவளும் ஒரு அழகி தான். சோகம் அப்பிக் கிடந்த அந்த முகத்திலே இப்போது புதிய மலர்ச்சி பளிச்சிடுகிறது. தலையிலே முன் பக்கமாக சில வெள்ளை மயிர்கள் அவள் வயதைக் காட்டிக்கொடுப்பது போல் மினுங்கியது.

திருமணம் முடித்து குழந்தை குட்டிகளோடு வாழ வேண்டியவள் தான் ஹஸீனா. இப்போது அவளுக்கு வயது முப்பத்தாறு. அவளின் வயதையொத்த நண்பிகளில் பலர் எப்போதோ திருமணம் முடித்து ஐந்தாறு பிள்ளைகளுக்குத் தாயாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவளின் உற்ற நண்பி நஸீராவுக்குக் கூட பதினாறு வயதில் ஒரு மகள் இருக்கிறாள்.



பெற்றோருக்குத் தலை மகளாய் மூத்த பிள்ளையாய்ப் பிறந்தவள் தான் ஹஸீனா. தந்தை ஒரு தினக்கூலி. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பம் அது. தந்தையின் சொற்ப வருமானத்தில் அந்தக் குடும்ப வண்டி தட்டுத்தடுமாறி நகர்ந்து கொண்டிருருந்தது. ஹஸீனாவின் பெற்றோரு க்குக் குடியிருக்கச் சொந்த வீடோ, காணி பூமியோ எதுவுமில்லை. வாடகை வீட்டில் தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஏழைகளின் செல்வம் பிள்ளைகள் தானே! இதற்கொப்ப ஹஸீனாவின் பெற்றோருக்கு வீடு நிறைந்த பிள்ளைச் செல்வங்கள் அடுத்தடுத்துப் பிறந்தன. மூத்தவள் ஹஸீனாவுக்குப் பின்னால் இரண்டு ஆண் பிள்ளைகளும், அதன் பின் இரண்டு பெண் பிள்ளைகளும் இறுதியில் கடைக்குட்டி ஒரு ஆணுமாக மொத்தம் ஆறு பிள்ளைகள்.

ஹஸீனா மூத்தவள் என்பதால் அதிகம் படிக்கவில்லை. ஐந்தாம் வகுப்போடு பள்ளிப்படிப்பை நிறுத்திக் கொண்டவள், உம்மாவுக்கு உதவி செய்யவும், தம்பி தங்கைகளைக் கவனித்துக் கொள்ளவும் தொடங்கி விட்டாள்.

காலப் போக்கில் அவளின் தம்பிகள் இருவரும் கூட தமது பள்ளிப் படிப்பை இடைநடுவில் நிறுத்திக் கொண்டு கடைகளில் எடுபிடி வேலைக்காக சேர்ந்து கொண்டனர்.

வறுமைப் போராட்டத்துக்கு மத்தியில் அவர்களின் வாழ்வு ஓடிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் ஹஸீனாவுக்கு இருபத்தைந்து வயதும் தொடங்கியது. இளைய தங்கைகளும் தாவணி போடத் தொடங்கிவிட்டார்கள்.

ஹஸீனாவுக்கு ஓரிண்டு இடங்களில் திருமணம் பேசப்பட்ட போதும், எதுவும் கைகூடவில்லை. காரணம் மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் கைக்கூலி, காணி, வீடு எதையும் அவர்களால் கொடுக்க முடியவில்லை. அழகும் அடக்கமும், நற்குணங்களும் அவளிடம் நிறையவே இருந்தும், அவளுக்கு ஒரு வரன் கிடைக்கவில்லை.

உழைத்து உழைத்து களைத்துப்போன அவள் தந்தையால் முன்பு போல் உழைக்க முடியவில்லை. இந்த நிலையில் ஹஸீனாவின் தம்பிமாரின் உழைப்பும் குடும்பச் சுமையைக் குறைக்க உதவவில்லை. அவர்களின் உடுப்புக்கும், செலவுகளுக்குமே அந்த உழைப்புச் சரியானதாக இருந்தது. இந்த நிலையில் குடும்பப் பொறுப்பு எனும் சுமை தன் மீது சுமத்தப்பட்டிருப்பதை உணர்ந்த ஹஸீனா ஒரு நாள் தன் பெற்றோரிடம், உம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொல்றதக் கொஞ்சம் கேளுங்க. வாப்பாவால முன்பு போல இப்ப கஷ்டப்பட முடியாது. அன்றாடச் செலவுக்கே ரொம்பக் கஷ்டப்படுறோம். எங்களுக்கென்று சொந்த நிலமோ, வீடோ கிடையாது. அதனால நானும் சவூதி அரேபியாவுக்கு 'ஹவுஸ் மெயிட்'டாக போக யோசிக்கிறேன்' என்று கூறினாள். அவர்கள் எதுவும் பேசவில்லை. கண்களில் இருந்தது கண்ணீல் மல்க மௌனமாயிருந்தனர். மௌனம் என்பது சம்மதத்தின் அறிகுறிதானே!

சில தினங்களிலே வெளிநாட்டுப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தாள் ஹஸீனா. ஒரு மாதத்திலேயே அரபு மண்ணுக்குப் பயணமானாள் அவள். ஒரு வீட்டின் பணிப்பெண் வேலை அவளுக்குக் கிடைத்தது. பிரச்சினையில்லாத இடம். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைத்தது. அந்தப் பணத்தில் ஒரு பகுதியை வீட்டுச் செலவுகளுக்கு அனுப்பி விட்டு மிகுதியைச் சேமித்தாள் அவள். இரண்டு வருடம் முடிந்து நாடு திரும்பினாள் ஹஸீனா. அந்தமுறை பத்துப்பேச்சர்ஸ் நிலத்தை வாங்கிவிட்டு மீண்டும் பயணமானாள்.

இப்போது தம்பிகள் இருவரும் ஓரளவுக்கு உழைப்பதால் அவர்கள் வட்டுச்செலவில் ஒரு பகுதியைக் கவனித்தனர். அவ்வப்போது அனுப்பிய பணத்தைக் கொண்டு அவளது வாப்பா ஒரு சாதாரணக் கல்வீட்டைக் கட்டுவித்தார். இந்தத்தடவை அவள் தாயகம் திரும்பிய போது தன் புதிய சொந்த வீட்டுக்கே வந்திறங்கினாள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஏற்கனவே இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஹஸீனாவின் தந்தையைத் திடீரென ஏற்பட்ட பக்கவாத நோய் படுக்கையில் தள்ளிவிட்டது. வாப்பாவின் நோயைச் சுகப்படுத்தும் பணியில் மிச்சம் மீதியிருந்த பணமெல்லாம் கரைந்த நிலையில் மீண்டும் விமானமேறினாள் ஹஸீனா.

ஹஸீனா சென்று சில மாதங்களிலேயே தந்தையின் மரணச் செய்தி அவளுக்குப் பறந்து வந்தது. துடித்துப் போனாள் அவள். தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டாள்.

வாரங்கள் சில விரைந்து மறைந்தன.. மீண்டும் ஒரு கடிதம் வீட்டிலிருந்த அவளுக்கு வர, அதனை வாசித்த அவள் இடிந்து போனாள் அவளின் இரண்டாவது தம்பி அடுத்தவூர்க்காரி ஒருத்தியை வீட்டுக்குத் தெரியாமலே திருமணம் செய்து கொண்டான். என்ற அந்தப் பேரிடியை அக்கடிதம் சுமந்து வந்திருந்தது. இதனை அவளால் நம்பவோ,



ஜீரணிக்கவோ முடியவில்லை.

''அவன விடப் பத்து வருஷம் மூத்தவளான நான் என் சொந்த வாழ்க்கையைக் கூட யோசிக்க முடியாதபடி எல்லாச்சுமைகளையும் சுமந்துகொண்டு நாடுவிட்டு நாடு வந்து கஷ்டப்படுற நேரம், இந்தச் சின்ன வயசுலயே அவனுக்குக் கல்யாணம் பண்ணிக்கொள்ள எப்படித் தான் மனசு வந்ததோ...?'' அதற்கு மேல் அவளால் சிந்திக்க முடியவில்லை. விக்கி விக்கி அழுதாள் ஹஸீனா.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. அதுபோல் அவளின் வயதும் ஓடிக்கொண்டிருந்தது.

ஹஸீனாவின் குடும்ப நிலையை அவளது வீட்டுக்காரப் பெண் நன்றாக அறிந்து வைத்திருந்தாள். ஹஸீனா மீது இரக்கப்பட்ட அவள் இவளை அணுகி,

''என் தம்பிக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள விருப்பம் கல்யாணத்துக்குப் பிறகு நீ இங்கேயே இருக்கலாம். இந்த முறை உன் வீட்டுல கேட்டுட்டுப் பதில் எழுது'' என்று கூறியபோது அவளுக்கும் அதிர்ச்சி தான். இருப்பினும் எதுவும் கூறாது மௌனமாக இருந்தாள். யாருக்கு யார் துணை என்பது படைத்தவனுக்குத்தானே தெரியும். நடப்பது நடக்கட்டும் என்ற மனநிலையில் இருந்தாள் அவள்.

இம்முறை தாய்நாடு திரும்பிய ஹஸீனா இவ்விடயத்தை தன் நண்பி நஸீரா மூலம் தன் தாய்க்குத் தெரிவித்தாள். அதற்கு இணங்க மறுத்த அவள் தாய், 'நஸீரா... இங்க பாரும்மா. இந்த விஷயம் ஒரு நாளும் சரிவராது. அவ காலம் பூரா வீட்டோட இருந்தாலும் நான் இதுக்கு ஒத்துக்க மாட்டேன் இத அவகிட்ட நீதான் எடுத்துச்சொல்லணும்.!' என்று பிடிவாதமாகக் கூற நஸீராவும் விட்டுக்கொடுக்காமல்,

'இங்க பாருங்கமாமி... அவ இன்னும் சின்னப்பிள்ளை இல்ல நல்லது கெட்டது அவளுக்குத் தெரியும். இப்போ அவளுக்கு முப்பது வயதாகிட்டுது. இதுக்கு மேலயும் அவள இப்படியே விடுறது நியாயமில்ல. அவவும் வாழணும் மாமி..ஒரு பெண்ணோட மனநிலையை இன்னொரு பெண்ணாலதான் புரிஞ்சிக்க முடியும். இப்பவெல்லாம் எங்க நாட்டுப் பெண்கள்ல பலபேரு அந்தநாட்டுக்காரங்களைக் கல்யாணம் கட்டி குழந்தை குட்டிகளோட நல்லா வாழ்றாங்க..." என்று அவள் கூறி முடிக்குமுன்னே குறுக்கிட்ட ரகுமத்தும்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இங்கபாரும்மா... நீ என்னதான் சென்னாலும் அத ஏத்துக்க என் மனசு இடம் தரல்ல. இங்க ஏதாவது நல்ல இடம் வந்தாப் பார்க்கலாம்.' என்று அவள் முடிவாகக் கூறி ஓய்ந்தபோது, அங்கே வந்த ஹஸீனா, 'உம்மா... அப்போ உங்க முடிவு அதுதான். இல்லயா? வெளிநாட்டு மாப்பிள்ளய முடிக்கனும் என்கிற ஆசையில நான் சொல்லல்ல. என் நிலைக்குப் பரிதாபப்பட்டு அவங்க தான் கேக்கச் சொன்னாங்க.

உம்மா நான் வெளிநாடு போக முன்னால சில இடங்கள்ல எனக்குக் கல்யாணம் பேசினீங்க. எதுவும் சரிவரல்ல. காரணம் நம்ம வறுமை. ஒவ்வொருத்தனும் வீடு வாசல் இல்லாம நடுவீதியிலேயும், பேமண்டுலயும் படுத்துத் தூங்கறவன் போல வீடு தா, காணி தா, என்று கேட்டானுகள். சில பேரு வெக்கம் கூச்சம் இல்லாம இந்த ஏழைகளுக்கிட்டையே வந்து பணப்பிச்சை கேட்டாங்க. ஆனால் இப்போ நான் செல்ற மாப்பிள்ளை எங்ககிட்ட எதையுமே கேக்காம எனக்கு 'மஹர்' தந்தே முடிக்கப் போறாரு. இதப்போய் வேண்டாமென்று சொல்றீங்களே!' என்று அவள் கண்கள் பனிக்கக் கூறியபோதும் அவள் தாய் மறுத்தேவிட்டாள்.

''மகள்.. இந்த ஊருலகத்தப் பத்தியும் நாம யோசிக்கணும். அப்படி சவுதி மாப்பிள்ளய கல்யாணம் கட்டினா கட்டாயம் ஊர் எங்களப் பழி சொல்லும்மா''

''உம்மா.. வழி சொல்லத் தெரியாத இந்த ஊருலகத்துக்குப் பழி சொல்ல மட்டும்தாம்மா தெரியும். என் வாழ்க்கையை விட உங்களுக்கு இந்த ஊரும் உலகமும் தான் முக்கியமெண்டா இந்தக் கல்யாணம் நடக்காமலே இருக்கட்டும் என்று அவள் கூறிவிட்டு அப்பால் போய்விட்டாள். அவளின் தாயை வழிக்குக் கொண்டு வர முடியாது என்பதைப் புரிந்து கொண்ட என்ற நஸீரா தன் நண்பியின் நிலை குறித்துக் கவலையுடன் விடைபெற்றாள்.

மாதங்கள் சில மலர்ந்து மடிந்தன. இப்போது ஹஸீனாவுக்கு வயது முப்பத்திநான்கு பிறந்தது. ஓரிரண்டு இடங்களில் சரிப்பட்டு வந்த திருமணமும் தாயின் பிடிவாதத்தாலும் சுயநலத்தாலும் தகர்ந்து போனது. மாப்பிள்ளை வீட்டினர் வீட்டில் அரைவாசியையாவது ஹஸீனாவின் பெயருக்கு எழுதித் தரும்படி கூற வீட்டைக் கொடுக்க விரும்பாததால் எதுவுமே கைகூடி வரவில்லை.

திருமணத்திற்கு காத்திருந்து, காத்திருந்து ஏமாற்றமுற்ற ஹஸீனாவுக்கு வாழ்க்கையே சூன்யமாகத் தோன்றியது.



தன்னை விட வயதில் எவ்வளவோ குறைந்தவர்கள் எல்லோரும் திருமண பந்தத்தில் இணைந்து கணவன்- பிள்ளைகள் என்று சந்தோசமாக வாழ்வதைக் காணும் போது, தனது வாழ்க்கையிலும் இந்த சந்தோசம், சுகம் கிடைக்காதா என ஏங்குவாள் அவள். தன் நிலை குறித்தும், சமுதாயத்தின் நிலை குறித்தும், தன் வீட்டாரின் அலட்சியப் போக்குப் பற்றியும் நினைத்து நினைத்து அழாத இரவுகள் அவள் வாழ்வில் இல்லை எனலாம். பாவம் ஹஸீனா. அவளின் தலையணைகளுக்கு பேசும் சக்தி மட்டும் இருந்திருந்தால் ஒவ்வொரு இரவுகளிலும் அவள் வடிக்கும் சூடான கண்ணீரைப் பற்றி நிச்சயம் அது கதை சொல்லும்.

தனக்கும் ஒரு கணவன்- அவன் மூலம் பிள்ளைகள், அவர்களின் தொல்லைகள் எல்லாவற்றிற்கும் அவள் மனம் ஏங்கியது. கண்நிறைந்த கணவனுக்கு மனைவியாகி வாழ்க்கையின் அத்தனை சுகங்களையும் அனுபவிக்க அவள் மனம் துடித்தது. கணவனின் துணைக்காக, அன்புக்காக, அரவணைப்பிற்காக அவள் மனம் ஏங்கித் தவித்தது.

தன் மன ஏக்கங்களையும், தவிப்பையும், அவள் யாரிடம் சொல்வது? அவளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவோ, அந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவோ அந்த வீட்டில் எந்த ஜீவனும் இருக்கவில்லை. ''எனக்கு வயதாகிவிட்டது. எனக்குத் திருமணம் முடித்துத் தாருங்கள்'' என்று அவள் கேட்டால் அதை யாரும் கொச்சையாகப் பார்க்க மாட்டார்களா? எனவே தன் மன ஏக்கங்களை மனதிற்குள்ளேயே புதைத்து கற்பனை வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தாள் ஹஸீனா.

அவள் வீட்டைப் பொறுத்தவரை எல்லோரும் அவளைப் பணம் சம்பாதிக்கும் இயந்திரமாக நினைத்தார்களே தவிர உணர்ச்சியுள்ள மனிதப் பிறவியாக நினைக்கவேயில்லை.

நாட்களின் நகர்வில் வீட்டை விட்டு ஒதுங்கியிருந்த தம்பியும் மனைவி மக்களோடு இங்கே வந்து ஒட்டிக் கொண்டான். ஹஸீனாவின் கையிலிருந்த பணத்தையெல்லாம் வழமைபோல தம்பிமார் தொழிலுக்கெனப் பறித்துக் கொண்டனர். அவர்களிடமிருந்து அது கிடைக்கவா போகிறது? ஹஸீனாவின் திருமண விடயத்தில் தாயோ, சகோதரர்களோ ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. அவளுக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை. இம்முறை மீண்டும் பாலைவனம் நோக்கிப் பயணமானாள் ஹஸீனா.

அவள் இங்கு வந்து ஒரு வருடமாகிவிட்டது. அதற்குள் இப்படி ஒரு கடிதம். அவளால் நம்ப முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஒரு தரம் அந்தக் கடிதத்தைப் படித்தவள் அதனைப் பத்திரமாக வைத்துவிட்டு, வேலைகளில் கவனம் செலுத்தத் தொடங்கினாள். வேலைகளில் மனம் ஒன்ற வில்லை. மீண்டும் கனவுகளும், கற்பனைகளும் அவள் இதயத்திற்குள்ளிருந்து மெதுவாக எட்டிப்பார்த்தன.

உம்மா கூறியது போல் கையிலிருந்த பணத்தில் ஒரு பகுதிக்கு சில நகைகளும், பிடவைகளும் எடுத்துக்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் வீடு வந்து சேர்ந்தாள் ஹஸீனா.

அவள் ஊர் வந்து வாரங்கள் சில ஓடின. அவளின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அன்று மெதுவாகப் பொழுது விடிந்துகொண்டிருந்தது. தன் வாழ்விலும் விடிவு ஏற்பட்டதை நினைத்து உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்தாள் ஹஸீனா. அப்போது தான் அவளின் தலையிலே இடியாய் வந்து விழுந்தது அந்தச் செய்தி.

''உம்மா, தாத்தா... நாங்க பாத்த மாப்பிள்ள இதுக்கு முன்ன 'ல கல்யாணம் முடிச்சவராம். மனைவியும் ரெண்டு பிள்ளைகளும் இருக்கிறாங்களாம். இப்பதான் என் கூட்டாளி ஒருத்தன் சொன்னான்'' என்று தலைதெறிக்க ஓடி வந்த அவளின் கடைக் குட்டித் தம்பி சொன்னதோடு அந்தக் கல்யாணமும் அப்படியே நின்று போய்விட்டது. அவள் கட்டிய கனவுக்கோட்டைகளும் அவள் காலடியில் விழுந்து சிதறின.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஹஸீனாவுக்கு இந்த மாதத்துடன் முப்பத்தெட்டாவது பிறந்தநாள். அவள் தன் தலைவிதியை நொந்தபடி நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். தன் விடயத்தில் அக்கறை காட்டாத குடும்பத்தின் மீதும், இந்த சமூகத்தின் மீதும் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இருப்பினும் அவள் ஆத்திரப்பட்டு என்னதான் இங்கே நடக்கப் போகிறது? அதனால் அடங்கிப் போனாள்.

இப்போது ஹஸீனாவின் வீட்டில் அவளது திருமணப்பேச்சை எடுப்பதேயில்லை. இத்தனை நாளும் அவள் விடயத்தில் கண்களை மூடிக் கொண்டிருந்த அவர்கள் இப்போது வயது கூடிவிட்டது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை.

இதற்கிடையில் அவளின் தாய் பணத்திற்கு ஆசைப்பட்டு மூத்த மகனுக்குத் திருமணத்தை நடத்தி முடித்துவிட்டார். இந்தச் சம்பவத்தின்



பின் ஹஸீனாவின் நிலை மிகப் பரிதாபமாக இருந்தது. தனக்குக் கீழேயுள்ள தம்பி மார் மனைவி மக்களோடு வாழும் போது, ஹஸீனா வாழா வெட்டியாக அந்த வீட்டிலேயே வலம் வந்து கொண்டிருந்தாள்.

அவளின் தம்பிமார் யாரைப்பற்றியும் கவலைப்பட வில்லை. தங்கள் குடும்பத்திற்காகவே தனது வாழ்க்கையைத் தியாகம் பண்ணிக் கொண்டிருக்கும் ஹஸீனாவைப்பற்றியோ, கல்யாணத்திற்காகக் காத்திருக்கும் தங்கைகளைப்பற்றியோ, பெற்ற தாயைப்பற்றியோ படிக்கும் தம்பியைப் பற்றியோ இவர்களுக்குக் கவலையில்லை. தம் மனைவி மக்களோடு சந்தோஷமாகத் தனிக்குடித்தனம் நடத்திக்கொண்டிருந்தார்கள் அவர்கள்.

ஒரு நாள் திடீரென ஏற்பட்ட வயிற்று வலியால் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள் ஹஸீனா. அவளின் தாய் ஏதேதோ கைமருந்துகள் செய்தும் குணம் கிடைக்கவில்லை. எனவே அருகிலுள்ள வைத்தியர் ஒருவரிடம் அவளை அழைத்துச் சென்றார்.

உடனடியாக அவளைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர், ஹஸீனாவை அவசரசிகிச்சைப் பிரிவில் 'எட்மிட்' பண்ணினார். ஐந்தாம் இலக்க வாட்டின் மூன்றாம் இலக்கக் கட்டிலில் படுத்திருந்த ஹஸீனா வேதனையால் முணங்கிக் கொண்டிருந்தாள்.

அறுவைச் சிகிச்சையின் காரணமாக ஏற்பட்ட காயத்தின் வலியால் கண்களிலிருந்து கண்ணீர் வடிய முணங்கிக் கொண்டிருந்தாள் ஹஸீனா அவளால் உடம்பை அசைக்க முடியவில்லை. அவளின் கட்டிலைச் சுற்றி நஸீராவும், குடும்பத்தினரும் கவலை தோய்ந்த முகங்களுடன் நின்றிருந்தார்கள்.

''வாங்க..வாங்க'' உள்ளே அழைத்தார் டாக்டர். ''டாக்டர் ஹஸீனாவுக்கு என்ன நோய் என்று நாங்க தெரிஞ்சிக்கலாமா?'' இது நஸீரா. டாக்டர் என் புள்ளைக்குப் புற்றுநோயா? நம்ப முடியல்லையே'' என்று அழுதே விட்டார் ரகுமத்தும்மா.

''நீங்க நம்பித்தான் தீரணும். ஒரு பெண் முப்பத்தைந்து வயதுக்கு மேலயும் கல்யாணம் முடிக்கல்லைன்னா இது ஏற்பட சான்ஸ் இருக்கு. அநேகமா முப்பத்தைந்து வயதுக்கு மேல சென்று கல்யாணம் முடிக்கிற வங்களுக்கும் இது ஏற்பட முடியும். அதோட அவங்களுக்கு கருச்சிதைவு ஏற்படவும், அல்லது பிறக்குற குழந்தைகளுக்கு அங்கக் குறைபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவும் வாய்ப்பிருக்கு.

இந்தக் கருப்பை புற்றுநோய் மருந்தால குணப்படுத்தமுடியாதபடி இருந்தா ஒரே வழி 'ஒபரேசன்' மூலம் கருப்பைய எடுப்பது தான். இந்தா பேஷன்டிட கருப்பையும் ரொம்பப் பாதிப்படைந்து இருந்திச்சி. மருந்தால குணப்படுத்த முடியாதபடி நோய் முற்றிப் போயிருந்திச்சி. இதனாலதான் அவரோட உயிரக் காப்பாத்துறதுக்காக அவவோட கருப்பையையே எடுத்திட்டோம்." என்று டாக்டர் கூறக் கூற அவர்கள் ஸ்தம்பித்துப் போய் அப்படியே சிலைகளாக நின்றிருந்தார்கள்.

டாக்டர் கூறியதையெல்லாம் அந்தச் சுவரருகே இருந்த கட்டிலில் கேட்டவாறு படுத்திருந்த ஹஸீனாவுக்கு தலை சுற்றி மயக்கம் வருவது போல் இருந்தது. தனக்கேட்பட்டிருக்கும் நிலையை எண்ணி அவள் விக்கி விக்கி அழுதாள். அவள் தலையிலே யாரோ ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு தாக்குவது போன்றிருந்தது.

இத்தனை வயதுக்குப் பின்னும் இன்று வரை தனக்கும் ஒரு துணை உலகில் இருப்பான். திருமணம் நடக்கும்; பிள்ளைகள் பிறக்கும் என்றெல்லாம் கனவுகளிலும், கற்பனைகளிலும் வாழ்ந்து கொண்டிருந்த வளிடமிருந்து இறைவன் அந்தக் கனவுகளைக் கூடப் பறித்து விட்டான். ஹஸீனா வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு வந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. ஒரு நாள் நண்பியொருத்தியைப் பார்க்கவென்று கடைக்குட்டித் தம்பியுடன் கொழும்புக்குப் போய் வந்தாள் ஹஸீனா. அடுத்த சில நாட்களில்...''உம்மா நான் நாளைக்கு கொழும்புக்குப் போகணும். வெளிநாட்டுப் பயணத்துக்கான ஏற்பாடெல்லாம் செஞ்சிட்டு வந்துட்டேன் நாளைக்கு எனக்கு 'பிளைட்'' என்று கூறி நிறுத்திய போது, அவளின் தம்பிமார்,

''தாத்தா... இனிமேல் நாங்க உங்கள விடப்போறதில்லை. ஓங்கள ஒரு குறையும் இல்லாம பார்க்குறது எங்க கடமை'' என்று கூறினார்கள்.

தம்பிமாரே நீங்கெல்லாம் கடம தவறியதால தானே எனக்கு இந்த நிலை? ஒரு குறையும் இல்லாமல் பார்க்கப் போறீங்களா..? எனக்குள்ளேயே குறைவந்ததுக்கப்புறம் இதைவிட வேற பெரிய குறை இருக்கா..? யார ஏமாத்தப் பாக்குறீங்க..? நீங்க பெத்துப் போடுற



பிள்ளைகள வளக்குறதுக்கு சம்பளமில்லாத ஆயா தேடுறீங்களா..? என மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டாள் ஹஸீனா.

''மகள் இனிமேல்...நீ அங்கெல்லாம் போக வேண்டாம். வீட்டுல இருந்து நாங்க குடிக்கிற கஞ்சையே குடிச்சிகிட்டிருந்தா போதும்'' என்ற அன்னையை,

''உம்மா வயித்துப் பசிக்கு கஞ்சிய ஊத்தினா தணியும். ஆனால்...உடம்புட பசிக்கு... உள்ளத்தோட பசிக்கு என்ன பண்ணுறது? சின்ன வயசுலேயே கல்யாணம் கட்டி புருஷனோட வாழ்ந்து ஆறு புள்ளைகளப் பெத்த உங்களுக்கு இதுதெரியுமென்று நினைக்கிறேன். என் உடம்புக்கோ உள்ளத்துக்கோ இனிப்பசியே எடுக்காது. இருந்தாலும் என் பின்னால் இருக்கிற தங்கச்சி மாரப் பத்தித்தான் நான் செல்றேனம்மா. என் உணர்வுகளைப் புரிஞ்சி என்னையும் ஒரு பெண்ணா நினைத்துப் பார்க்க இங்க யாருக்குமே மனசு வரல்ல. ஆனால் என் தங்கச்சிகளோட உணர்வுகள என்னால புரிஞ்சி கொள்ள முடியுது. இண்டைக்கு எனக்கு ஏற்பட்ட கதி நாளைக்கு அவங்களுக்கு ஏற்படாது என்றதுக்கு என்ன நிச்சயம்..? என் நிலை அவங்களுக்கு வர நான் விடமாட்டேன். அவங்க வாழணும்.

ஆமா.. கல்யாணம் கட்டி குழந்தை குட்டிகளோட சந்தோஷமா வாழணும். அதற்காகத்தான் இந்தப் பயணம். என்ன இந்த விடயத்தில யாரும் தடைபண்ண வேண்டாம்''

பயணத்திற்காகத் தயாராகத் தொடங்கினாள் ஹஸீனா.

*நன்றி:- தினகரன் வாரமஞ்சரி 25 - 06 -2000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org